கோகுலம்

Gokulam

பிப்ரவரி '91 ரூ. 3/-



டோக்கியோவில் நடராஜ்


குழந்தைகளே ! இதை நீங்கள்
தானாகவே செய்ய முடியுமா ?
முடியும் ! கோரஸ்
கொண்டு
அது எடுப்பானது. அது சுத்தமானது.
கோரஸ் மாயாஜாலம் உபயோகித்து மகிழ்வீர். அது எளிதானது, சுத்தமானது, விரைவானது, லிக்விட் கோந்து போன்ற பிசுபிசுப்பு ஏற்படுத்துவதில்லை.
வண்ணக் காகிதத் துண்டுகள் மற்றும் கோரஸ் ப்ரிட் க்ளு ஸ்டிக் இருந்தால் போதும். நீங்கள் அழகழகான பொருட்கள் ஸ்கூல் ப்ராஜெக்ட்டுகள், க்ராஃப்ட் வேலைகள் மற்றும் மம்மி-டாடிக்கும் நண்பர்களுக்கும் அன்பளிப்புகள் முதலியன தயாரிக்கலாம்.
Pritt super Glue Stick
korea
இலவசம் : இவற்றைத் தயாரிப்பதற்கான கைட் புத்தகத்
இன்றே எங்களுக்கு எழுதுவீர்.
விற்பனைக்கு விடுப்போர்:
கோரஸ் கோரஸ் (இந்தியா) லிட்.,
போஸ்ட் பாக்ஸ் நம். 6558, வொர்லி, பம்பாய்-400018



கோகுலம்

1991 பிப்ரவரி மாத இதழ்
மலர் : 9 இதழ் : 1





அருமைச் சிறுவர் சிறுமியரே,

அடேயப்பா! எவ்வளவு புத்தாண்டு வாழ்த்துக்கள்! பொங்கல் வாழ்த்துக்கள்! உங்கள் அன்பு வெள்ளத்தில் திக்கு முக்காடிப் போகிறேன். வாழ்த்துக் கூறிய தம்பி தங்கள் அனைவருக்கும், கோகுலம் வாசகர்கள் எல்லோருக்கும் பதில் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் கோகுலம் இந்த இதழிலிருந்து தனது ஒன்பதாவது ஆண்டில் நடைபோடுகிறது. வர வர கோகுலம் ஒரு மினி கலைக்களஞ்சியமாக மாறிக் கொண்டு வருகிறது என்று ஆசிரியப் பெருமக்கள், மகிழ்ச்சியோடு கருத்துத் தெரிவிக்கிறார்கள். பாதுகாத்து வைக்க வேண்டிய செல்வமாகச் சேர்த்து வைத்து வருகிறோம் என்று பெற்றோர்கள் எழுதுகிறார்கள்.


சிறுவர் பத்திரிகைகளில் அதிகம் பேர் பங்கு கொள்ளும் பத்திரிகை கோகுலம்தான் என்று வாசகர்கள் பாராட்டுகிறார்கள். உடனடியாக கோகுலத்தை மாதம் இரு முறையாக்குங்கள் என்று பல குழந்தைகள் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்! எல்லோருடைய அன்புக்கும் நன்றி கூறுகிறோம்.

கோகுலத்தின் வளர்ச்சிக்குக் காரணம் குழந்தைகளும், பெற்றோர்களும், அறிஞர் பெருமக்களும் காட்டி வரும் பேராதரவுதான். தொடர்ந்து இவர்களது ஆதரவு இருக்கும் வகையில் கோகுலம் பாடுபட்டு வரும் என்று இந்த நல்ல நாளில் கூறிக் கொள்ளுகிறேன்.



அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

இந்த இதழில்...





இமயமென எழுகவே!

சின்னஞ் சிறிய கதை சொல்லி
சீரிய சிந்தனை தூண்டியவர்;
மன்னும் மதங்கள் பல வுள்ளும்
மன ஒருமை காண வேண்டியவர்.

சமயம் பலவும் கண்டவர்;
சத்திய வேட்கை கொண்டவர்;
சாதிச் சிறுமைகள் கொன்றவர்;
சக்தி அருளையே வென்றவர்.

பெண்ணைத் தாயெனப் போற்றியவர்;
பொன்னை மண்ணெனத் தூற்றியவர்;
விண் புகழ் வீரத் துறவியென
விவேகானந்தரை மாற்றியவர்.

உள்ளமதைக் கோயிலாக்கிக் கொண்டவர்;
உண்மையிலே கடவுளையே கண்டவர்;
இல்லறத்தில் துறவறமே பூண்டவர்;
எல்லையிலா பக்தியினால் ஆண்டவர்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்கவே;
நாமும் அவர் நெறி நடந்து உய்யவே;
சமய, சாதி சண்டை யாவும் சாயவே;
இமயமென இந்தியாவும் எழுகவே!

— ஆர். பி. சாரதி.



பிறந்தநாள் கவியரங்கம்

கோயில் செய்குவோம்!

தினையளவு நன்மைசெய்த பேரையும் — நாம்
பனையளவு மதித்துப்போற்ற வேண்டுமேல்...
பனையளவு நன்மைசெய்த பேர்களை — நாம்
பணிந்துபோற்ற எல்லைஏதும் உள்ளதா?

'உலகமகா இலக்கியங்கள் இவையெலாம்' — என
உயர்ந்தவர்கள் உணர்ந்துபோற்றும் நூல்பல
பழைய நாளில் ஏடுகளில் இருந்தன — அவை
பல இடத்தில் சிதறிச் சிதறிக் கிடந்தன.

அவற்றை எல்லாம் தேடித்தேடி எடுத்துப்பின் — நல்ல
அச்சடித்த புத்தகங்கள் ஆக்கியே
நிலைத்தபயன் கிடைக்கும்படி செய்தவர் — நாம்
நினைத்துப் போற்றத் தகுந்த தமிழ்த் தாத்தாவே!

டாக்டர் உ. வே. சாமிநாத தாத்தாவால் — இன்றும்
நாம் அடையும் பயன்கள் மிகக் கொஞ்சமோ?
உலகம் உள்ள வரைக்கும் அவை நிலைக்குமே — இதை
உள்ளம் உள்ள நாம் மறக்க லாகுமோ?


தினையளவு நன்மைசெய்த பேருக்கே — நாம்
பனையளவு நன்றிகாட்ட வேண்டுமேல்...
உலகளவு நன்மைசெய்த பேருக்கு — நாம்
உள்ளத்தையே கோயில் செய்ய வேண்டாமோ?

— ரா. பொன்ராசன்.



ஏன் வேலை இல்லையே..?

1930 ஆம் ஆண்டுகளில் குழந்தைகளுக்கு அருமையான தமிழ்ப் பாட நூல்களை அமைத்துத் தந்த பெரியோர்களுள் குறிப்பிடத்தக்கவர் காவேரிப் பாக்கம் நமச்சிவாயர். இவர் எழுதிய கதைகளும் பாடல்களும் குழந்தைகளுக் காக எழுதுவோருக்கு இன்றும் வழிகாட்டியாக விளங்குகின்றன. பல பள்ளி களில் தமிழாசிரியராகவும், சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்ப் பேரா சிரியராகவும் பணியாற்றிய இப்பெரியார் குழந்தைகளின் மனம் கவர்ந்த ஒரு குழந்தை எழுத்தாளராகவும் திகழ்ந்தார் என்பது வியப்புக்குரிய உண்மை யாகும். இந்த மாதம் இவரது 115 ஆவது பிறந்தநாள் வருகிறது. என்றும் சுவைத்து மகிழக்கூடிய அவரது சிறுகதை ஒன்றையும் ஒரு பாடலையும் இங்கு தருகிறோம்.



கா. நமச்சிவாயர்

ஓர் ஊரில் புலவர் ஒருவர் இருந்தார். அவர் அடிக்கடி செல்வர்களையும் மன்னர்களையும் கண்டு, பாட்டுப் பாடிப் பரிசு பெற்று வருவார். அவருக்குப் பல்லக்குத் தூக்க நான்கு ஆட்கள் இருந்தனர்.

அந்தப் புலவருடைய வீட்டில் ஒரு பசு உண்டு. அந்தப் பசுவுக்குப் புல் அறுத்துக் கொண்டு வரும் பண்ணையாள் ஒரு நாள் வரவில்லை. அது கண்ட அப் புலவர், பல்லக்குத் தூக்குபவர்களைப் பார்த்து, 'பசுவுக்குக் கொஞ்சம் புல் அறுத்துக் கொண்டு வாருங்கள்' என்று கேட்டார். அதற்கு அந்த ஆட்கள், 'ஐயா, பல்லக்கைச் சுமப்பது மட்டும் தான் எங்கள் வேலை; பசுவுக்குப் புல் கொண்டு வருவது எங்கள் வேலையன்று' என்று சொன்னார்கள். புலவர் அவர்களுடைய மடமையை உணர்ந்து பேசாமல் இருந்து விட்டார்.

பிறகு, ஒரு நாள் கன்றுக் குட்டி காணாமற் போயிற்று. அதைத் தேடுவதற்கு ஒருவரும் இல்லை. புலவர் பல்லக்குத் தூக்குபவர்களைப் பார்த்து, 'நமது கன்றுக் குட்டியைக் காணோம். அதைத் தேடிப் பிடித்து வாருங்கள்' என்றார். உடனே அவர்கள், 'ஐயா, கன்றுக் குட்டியைத் தேடுவது எங்கள் வேலை அல்ல; பல்லக்குச் சுமப்பது ஒன்றே எங்கள் வேலை' என்று கூறி, புலவர் இட்ட கட்டளையைச் செய்ய முற்றிலும் மறுத்து விட்டார்கள்.

புலவர் அவர்களுக்கு நல்லறிவு





கற்பிக்க வேண்டுமென்று கருதி, பல்லக்கைக் கொண்டு வர ஆணையிட்டார். பல்லக்கைக் கொண்டு வந்தார்கள். புலவர் அதில் ஏறிக் கொண்டு கன்றுக் குட்டியைத் தேட அவர்களைத் தெருத் தெருவாகச் செல்லும்படி செய்து, ஊரைச் சுற்றிச் சுற்றி வந்தார். 'கன்றுக் குட்டி இங்கு எங்கும் காணப்படவில்லை. இனி, சந்துகளிலும் புறக்கடைப் பக்கங்களிலும் குட்டிச் சுவர்களுக்கு அருகிலும் தேடிப் பார்க்க வேண்டும்; அங்கெல்லாம் செல்லுங்கள்' என்றார்.

பல்லக்குத் தூக்கிகள் வேறு வழியின்றி அப்படியே புலவரைச் சுமந்து கொண்டு சில இடங்களுக்குச் சென்றார்கள். பிறகு அவர்களால் நடக்க முடியவில்லை. அதனால் அவர்கள் புலவரைப் பார்த்து, 'ஐயா, எங்களுக்குக் கால் நோகிறது; இனி எங்களால் நடக்கவே முடியாது' என்று முறையிட்டார்கள். புலவரோ, 'கூடாது, கூடாது. பல்லக்குச் சுமப்பது உங்கள் வேலை, கன்றுக் குட்டியைத் தேடுவது என் வேலை; நடவுங்கள், நடவுங்கள்' என்றார்.


பல்லக்குத் தூக்கிகளுக்கு அறிவு வந்தது. அவர்கள் புலவரைப் பார்த்து 'ஐயா, எங்களை மன்னித்து விடுங்கள். எங்களுக்கு அறிவு வந்து விட்டது. கன்றுக் குட்டியை நாங்களே தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறோம்; தாங்கள் வீட்டிலேயே இருங்கள்' என்றார்கள். அவர்களுக்குத் தெளிவு வந்ததை அறிந்த புலவர் மகிழ்ந்து அப்படியே செய்ய அவர்களுக்கு அனுமதியளித்தார். *

1931 ஆம் ஆண்டில் வெளியானது.

பத்துவரை தெரியுமா? *

ஒன்று யார்க்கும் தலை ஒன்று
இரண்டு முகத்தில் கண் இரண்டு
மூன்று முக்காலி கால் மூன்று
நான்கு நாயின் கால் நான்கு
ஐந்து ஒருகை விரல் ஐந்து
ஆறு ஈயின் கால் ஆறு
ஏழு வாரத்தின் நாள் ஏழு
எட்டு சிலந்தியின் கால் எட்டு
ஒன்பது தானிய வகை ஒன்பது
பத்து இருகால் விரல் பத்து.

1931 ஆம் ஆண்டில் வெளியானது.



இந்திய மாநிலங்களில் வங்காளத்திற்கென்று சில தனிச் சிறப்புகள் உண்டு.

அரசியல், சமயம், கல்வி, அறிவியல், கலை போன்ற பல்வேறு துறைகளில் இந்தியாவின் முதல் நபர் என்று கூறும்சிறப்பைப்பெற்றவர்கள் பலரை அந்த வங்காள மாநிலம் உருவாக்கித் தந்துள்ளது. இந்திய மறுமலர்ச்சியின் தந்தை எனப்படும் ராஜாராம் மோகன் ராய், இந்திய தேசியக் காங்கிரசின் முதல் தலைவர் டபிள்யூ. சி. பானர்ஜி, வங்காளச் சிங்கம் சுபாஷ் சந்திர போஸ், சுவாமி விவேகானந்தர், ரவீந்திர நாத் தாகூர், அரவிந்தர் என்று இந்தப் பட்டியல் நீளும். இதில் இடம் பெற்று சிறப்பாகப் போற்றப்படும் ஒருவர்தான் கவிக்குயில் சரோஜினி தேவியார். அவரை 'நைட்டிங்கேல் ஆஃப் இந்தியா' (கவிக்குயில்) என்பார்கள். அவர் ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்ல. இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் கூட.



கவிக்குயில்

அவர் முதல் இந்திய பெண் கவர்னர் என்ற சிறப்பைப் பெற்றவர். அது மட்டுமல்ல, இந்திய தேசிய காங்கிரசுக்குத் தலைமையேற்ற முதல் பெண் மணியும் அவர்தான்.

வங்காளத்தில் சட்டோபாத்யாயா என்ற ஒரு அந்தணர் வகுப்பு உண்டு. அதில் தோன்றிய அகோரநாத் சட்டோபாத்யாயா மிகச் சிறந்த கல்விமான். வங்காள மொழி வல்லுனர். ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். இங்கிலாந்தின் எடின்பரோ பல்கலைக் கழகத்தில் அறிவியல் டாக்டர் பட்டம் பெற்றவர். அவர் ஹைதராபாத் நிஜாமிடம் ஓர் உயர்ந்த பதவியில் அமர்ந்தார். அவரது மனைவி வரதசுந்தரி தேவி. அவ்விருவருக்கும் மூத்த மகளாக 1879 பிப்பிரவரி 13 ஆம் நாள் சரோஜினி தேவி ஹைதராபாத்தில் பிறந்தார்.

'விளையும் பயிர் முளையிலே' என்பார்கள் அல்லவா? அதற்கு ஏற்ப சரோஜினி தனது தாய் மொழி வங்காளியுடன் தெலுங்கு ஆங்கிலம் போன்ற மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். துவக்கக் கல்வியை ஹைதராபாத்தில் முடித்து, சென்னை பல்கலைக் கழகத்தில் மெட்ரிகுலேஷன் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றார். அப்போது அவருக்கு வயது

ஜெயராம்ஜி

பன்னிரண்டு தான். அத்தனை சிறு வயதில் அத்தேர்வை எழுதித் தேர்ச்சி பெற்ற முதல் நபரும் சரோஜினி தான். அதை அறிந்த ஹைதராபாத் நிஜாம், அவரை மேல் நாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைக்க முன்வந்தார். அந்த நல்ல வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்ட சரோஜினி, இங்கிலாந்து சென்று கிங்ஸ் பல்கலைக் கழகத்தில்சேர்ந்துபயின்றார்.பின்னர் கேம்பிரிட்ஜ் காட்டன் கல்லூரியிலும் பயின்றார். ஆனாலும், அந்நாட்டுத் தட்ப வெப்பநிலை அவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. உடல்நலக் குறைவு காரணமாக, படிப்பைக் கைவிட்டு விட்டு, இந்தியா திரும்பினார். வரும் போது ஐரோப்பாவின் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு ஹைதராபாத் திரும்பினார்.

அவர் தந்தைக்குத் தன் மகள் ஒரு சிறந்த கணித – விஞ்ஞானியாக வேண்டும் என்பதில் விருப்பம். ஆனால், சரோஜினியின் மனது இயற்கை அழகிலும், கவிபாடுவதிலும் ஈடுபட்டது. தனது பதினொன்றாம் வயதிலேயே அவர் கவிதை புனையத் தொடங்கி விட்டார். பள்ளிப் பருவத்திலேயே அவர் ஆறே நாளில் 1300 வரிகள் கொண்ட காவியத்தை எழுதினார். அதற்கு 'லேடி ஆஃப் த லேக்'. (ஏரிப் பெண்மணி) என்று பெயர். அதேசமயத்தில் 2000 வரிகள் கொண்ட ஆங்கில நாடகத்தையும் நாவல் ஒன்றையும் கூட எழுதினார். அவர் கவிதைகள் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவரலாயின.

ஹைதராபாத்தில் கோவிந்தராஜுலு என்று ஒரு டாக்டர் இருந்தார். அவர் தெலுங்கு நாயுடு. இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினர். ஜாதிக் கட்டுப்பாட்டை மீறி இருவரும் திருமணம் செய்து கொண்டனர். அதன்பிறகே அவர் சரோஜினி நாயுடு எனப்பட்டார். திருமணம் சென்னையில் நடந்தது. இரண்டு பிள்ளைகள் இரண்டு . பெண்கள் பிறந்தனர். குடும்பத்தில் இருந்தவாறே, ஹைதராபாத்தில் பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டார். சரோஜினி, ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வில் அக்கரை செலுத்தினார். அவரது பொதுத் தொண்டை மதித்த இந்திய அரசு, அவருக்கு 'கேசரி ஹிந்த்' என்ற சிறப்புப் பதக்கத்தை அளித்துப் பெருமைப் படுத்தியது. காந்திஜி, தாகூர் இருவர் மட்டுமே பெற்ற உயர் விருது அது. அதைப் பெற்று, சரோஜினியும் அவர்களுக்கு நிகரானவர் ஆனார்.

அடிக்கடி பம்பாய் சென்று சமூக சேவையில் ஈடுபட்ட சரோஜினி, நாளடைவில் பம்பாயிலேயே தங்கி விட்டார். அரசியலில் ஈடுபட்டு பம்பாய் மாநகராட்சியின் உறுப்பினர் ஆனார். பல தேசத் தலைவர்களின் நட்புக் கிடைத்தது. குறிப்பாக, அவர் அன்னிபெசன்ட் அம்மையாருடன் சேர்ந்து, அவருடைய 'ஹோம் ரூல்' – இயக்கத்தில் ஈடுபட்டார். அச்சமயம் தனது ஆங்கிலக் கவிதைகளை மூன்று தொகுதிகளாக வெளியிட்டார். கோகலேயின் அறிவுரைப்படி அவர் நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளத் தொடங்கினார். நாடு முழுவதும் பயணம் செய்து, சமூக மாநாடுகள், கல்வி மாநாடுகள், சமூக சீர்திருத்த மாநாடுகள் போன்றவற்றில் மேடை

• உப்பு சத்யாக்கிரகத்தில்...





• இராஜாஜியுடன்...

யில் ஏறிப் பேசலானார். காந்திஜியின் கொள்கைகள் அவரை மிகவும் கவர்ந்தன. அவரது கொள்கைகளைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார். இலங்கைக்கும், ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளுக்கும் சென்று காந்திஜியின் சத்தியாக்கிரக இயக்கம் பற்றியும், இந்திய மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றியும் தெளிவுபடுத்தி ஆதரவு திரட்டினார்.

இங்கிலாந்தில் லண்டனில் கூட்டங்களில் பேசும் போது இந்தியாவில் ஆங்கில அதிகார வர்க்கத்தினர் புரியும் அடக்குமுறைகளைத் துணிவுடன் வெளியிட்டார். பஞ்சாப்பில் நடந்த துப்பாக்கிச் சூடுகள் பற்றிக் கூறிக் கண்டித்தார். அப்போது அங்கு மாண்டேகு பிரபு என்பவர் இந்தியா மந்திரியாக இருந்தார். அவர் சரோஜினியின் குற்றச் சாட்டுகள் தவறு என மறுத்துரைத்தார். எனினும், சரோஜினி தனது குற்றச் சாட்டுகளுக்குரிய ஆதாரங்களை எடுத்துக் கூறி அமைச்சரின் வாயை அடைத்தார். அத்துடன் நில்லாது, இந்தியா திரும்பியதும், அந்த அநீதி பற்றி இந்திய அரசுக்கு விரிவான ஒரு கடிதத்தை எழுதியதுடன் நில்லாது, 'மக்களுக்கு அநீதி; அதே நேரத்தில் தலைவர்களுக்கு விருதும் பாராட்டுமா' என்று கேட்டு ஆங்கில அரசு தனக்கு வழங்கியிருந்த 'கேசரி ஹிந்த்' தங்கப்பதக்கத்தை அரசுக்கே திருப்பி அனுப்பி விட்டார். வேறு யாருக்கு வரும் இந்த உள்ளத் திண்மை!

சத்தியமும் அகிம்சையும் காந்திஜியின் சத்தியாக்கிரக இயக்கத்தில் இரு ஆயுதங்கள். சத்தியாகிரக இயக்கம் முதன் முதலில் தோன்றியது தென்னாப்பிரிக்காவில் தான். அதன் மூலம் அங்கு வாழும் இந்தியர்களுக்கு காந்திஜி சில உரிமைகளைப் பெற்றுத் தந்திருந்தார். அவர் இந்தியா திரும்பிய பிறகு, அந்த ஒப்பந்தம் அங்கு மதிக்கப்படவில்லை. மீண்டும் இந்தியர்கள் பல இன்னல்களுக்கு ஆளானார்கள். எனவே காந்திஜிக்குப் பதிலாகக் காங்கிரஸ் அமைப்பு சரோஜினியை தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பியது. அங்கு அவர் பல கூட்டங்களில் பேசியும், பல அதிகாரிகளைச் சந்தித்தும் இந்தியர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு பெற்றுத் தந்தார். அவரது சொற்பொழிவின் ஆற்றலை ஆங்கிலேயரும் கூட வியந்து பாராட்டினர்.

நாடு திரும்பிய சரோஜினியை இந்தியா பெரிதும் பாராட்டியது. அடுத்த ஆண்டு அதாவது 1925 ஆம் ஆண்டு அவர் கான்பூர் காங்கிரசின் தலைவர் ஆனார். அப்பொறுப்பை



மிதக்கும் தபால் நிலையம்

கேரளாவில் ஆலப்புழை ஜில்லாவில் உள்ளது குட்டன்நாடு. இந்த ஊரில் ஒரு அதிசயம். படகிலேயே ஒரு தபால் நிலையம் இயங்குவது! இந்தத் தபால் நிலையம் ஆற்றின் ஓரமாகக் கலையோடு சென்று அங்காங்கே நிறுத்தப்பட்டு கார்டு, கவர், ஸ்டாம்புகள், போன்றவை மக்களுக்கு விற்பனை செய்வதுடன் தபால்களையும் பட்டுவாடா செய்கிறது. தபால் பெட்டி ஒன்றும் இதில் உள்ளது என்பதுடன் படகை ஓட்டுவதும் மற்ற பணிகளைச் செய்வதும் அதில் வரும் போஸ்ட் மாஸ்டரே! உலகிலேயே வேறு எங்கும் இதுபோன்ற மிதக்கும் தபால் நிலையம் கிடையாது.

எல். முத்து, ஊத்தங்கரை.

ஏற்ற முதல் பெண்மணி என்ற சிறப்பு அவரை நாடி வந்தது. அப்போது அவர் ஜாதி, மத, இனப்பாகுபாடு இன்றி இந்தியர் அனைவரும் ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அச்சமயம் அமெரிக்கர்கள் இந்திய விடுதலைப் போரின் உண்மை நிலையை அறிய விரும்பினர். அவர்கள் காந்திஜியைத் தம் நாட்டுக்கு வருமாறு விரும்பி அழைப்பு விடுத்தனர். காந்திஜிக்கு இந்தியாவில் பல பணிகள் இருந்தன. எனவே, அவர் தன் சார்பில் சரோஜினியை அமெரிக்கா அனுப்பினார். அங்கு சென்ற அவர், இந்திய தேசியத் இயக்கத்தின் நோக்கங்களையும், காந்திஜியின் கொள்கைகளையும் எடுத்துக் கூறினார். அத்துடன் ஆங்கிலேயர்கள் இந்தியர்களைப் பற்றி ஏற்படுத்தியிருந்த தவறான எண்ணங்களையும் போக்கி நாடு திரும்பினார்.

1930 ல் காந்திஜி உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார். அதில் பங்கேற்ற சரோஜினி 'தர்சனா' என்ற உப்பளத்தில் கைதாகிச் சிறை புகுந்தார். சிறையில் அவர் காந்திஜியின் சகோதரி போன்று, அவருக்குப் பல்வேறு உதவிகளைச் செய்தார். இந்தியரின் குறைகளைத் தீர்ப்பது பற்றி முடிவெடுக்க ஆங்கில அரசு வட்ட மேஜை மாநாட்டைக் கூட்டியது. இரண்டாவது வட்டமேஜை மாநாடு லண்டனில் நடந்தது. அதில் காங்கிரஸ் சார்பில் மூவர் கலந்து கொண்டனர். ஒருவர் காந்திஜி. அடுத்தவர் பண்டித மதன் மோகன் மாளவியா. மூன்றாவது நபர் சரோஜினி தேவியார்தான். அங்கிருந்து திரும்பியதும் காந்திஜி கைதானார். அதன் பிறகு, சரோஜினி இயக்கத்துக்குத் தலைமை ஏற்று நடத்தினார். எனவே, அவரும் கைதானார். மீண்டும் காந்திஜியுடன் சிறை வாழ்க்கை!

அதன் பிறகு, தொடர்ந்து நடந்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு, பல தடவைகள் சிறை சென்றார். 1942ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம். தேசமெங்கும் பெரும் கலவரம். அந்த ஆகஸ்ட் புரட்சியில் சரோஜினியும் சிறை புகுந்தார். அங்கு அவரது உடல் நலம் குன்றியது. எனவே, 1943 ஆம் ஆண்டு மார்ச்சில் விடுதலையானார். 1944ல் காந்திஜியும் விடுதலை ஆனார். அதைத் தொடர்ந்து தேச விடுதலைக்கான பேச்சு வார்த்தைகள் நடந்தன. இறுதியில் 1947 மார்ச்சில் டில்லியில் ஆசிய நல்லுறவு மாநாடு கூட்டப்பட்டது. அதற்கு சரோஜினி தேவி தலைமை ஏற்றார். அப்போது 'எழுக ஆசியா' என்று வீர முழக்கமிட்டார். அதன் பிறகு, 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. ஒரு பெரிய பொறுப்பை நிறைவேற்றி விட்ட நிம்மதியுடன், தனது உடல்

நலக்குறைவு காரணமாகத் தீவிர அரசியலிலிருந்து அவர் ஓய்வு கொள்ள விரும்பினார். ஆனால், நமது சுதந்திர பாரத அரசு அவரை ஓய்ந்திருக்க விடவில்லை. ஐக்கிய மாகாணத்தின் கவர்னர் பதவி அவரை நாடி வந்தது. அப் பதவியைப் பெறும் முதல் பெண்மணி என்ற பெருமையுடன் அவர் அப் பதவியை ஏற்றார். அப்போது அவர் என்ன சொன்னார் தெரியுமா? — 'சுதந்திரமாகப் பறந்து திரியும் காட்டுப் பறவையைக் கூட்டில் அடைத்து விட்டீர்களே..!' என்றார்.

அரசுப் பதவி என்ற கூட்டில் அவர் அடைக்கப்பட்டாலும், அவரது உயிர்ப் பறவை அவரை விட்டுப் பிரியும் நேரம் வந்து விட்டது போலும். கவர்னராக இருக்கும் போதே அவருக்கு மீண்டும் திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டது. 1949 மார்ச் 2ஆம் நாள் அதிகாலை 3.30 மணிக்கு கவிக்குயில் இவ்வுலகை விட்டுப் பறந்தது!

சரோஜினி தேவியார் மறைந்தாலும், அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் நம் நெஞ்சில் நிறைந்திருக்கும். மேல்நாட்டுக் கவிஞர்களான ஷெல்லி, டென்னிசன் போன்றோருக்கு நிகரான அவருடைய இன் கவிதைகள் என்றென்றும் அவர் திறமையைப் பாடுகின்றன. தேசத் தொண்டில் ஈடுபடுவதைச் சற்றுக் குறைத்துக் கொண்டிருந்தால், அவர் இன்னும் பல நல்ல காவியங்களைப் படைத்து, தாகூருக்கு நிகராகி, நோபல் பரிசைப் பெற்றிருப்பார்.

சரோஜினி தேவி பிறப்பால் ஒரு வங்காளி. பிறந்தது பிராமணர் குலம். வாழ்ந்தது ஹைதராபாத்தில். பட்டம் பெற்றது சென்னையில். மணந்தது தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவரை ஆட்சிப் பொறுப்பேற்றது ஐக்கிய மாகாணத்தில்! இந்திய ஒருமைப் பாட்டுக்குத் தானே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த கவிக்குயில் நமக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகும்.

டோக்கியோவில் நடராஜ்

''ஜப்பான்ல ஹிரோஷிமாவுக்குப் போனோம். இரண்டாவது உலகப் போரில் இந்த நகரத்தில் அணுகுண்டு வீசினார்கள். அந்த அழிந்த இடிபாடுகளை அப்படியே வைத்திருக்கிறார்கள். பார்க்கும் போது மனதுக்குள் என்னவோ ஒரு துக்கம் மனத்தை அடைக்கிறது. போர் விரும்பாத ஒரு சமுதாயத்தைப் படைக்க மாட்டோமா என்று மனம் ஏங்குகிறது.

ஹிரோஷிமா மேயர் திரு தாகேஷி அராகி, எங்களுக்கு விருந்து கொடுத்துக் கௌரவித்தார். என்னைப் பார்த்து அவர், 'உன் நெத்தியில என்ன?'ன்னு கேட்டார். நான் கோட்சூட் போட்டுக்கிட்டிருந்தாலும் என் தாத்தா, அம்மா, அப்பா சொன்ன வழக்கத்தை மீறாம நெற்றியில் விபூதி இட்டுக் கிட்டு இருந்தேன். அதைத்தான் அவர் என்னன்னு கேட்டார். நான் கொஞ்சங் கூடத் தயங்காம, 'எங்க இந்துமத வழக்கப்படி ஒரு மனிதர் இறந்திட்டா அவரை எரிச்சுடு வோம். அதாவது எவ்வளவு பெரிய மனித னாக ராஜாவாக இருந்தாலும்கூட அவனு டைய உடம்பும் ஒருநாள் சாம்பலாகக் கூடி யதுதான். இந்த உண்மையை மறக்காமல் இருந்தால் மனசிலே அகங்காரம், பொறாமை, குரோதம், பகை எதுவும் வராது. மற்றவர்களுக்கு உதவியாக, நல்லவர்களாக வாழ்வோம். அதை நாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், தினமும் நெற்றியில் இப்படி விபூதி இட்டுக் கொள்வது எங்க வழக்கம்'னேன். அதை அப்படியே ஜப்பானிய மொழியிலே, மொழி பெயர்ப்பாளரைச் சொல்லச் சொல்லி ஹிரோஷிமா மேயர் எழுதிண்டார். என் பதில் அவரை அயர வைத்திருக்க வேண்டும். ''மாடர்னா டிரஸ் போட்டுண்டு கூட உன் மனசிலே கர்வமில்லாம எளிமை குடிகொண்டிருக்கே; அதை நான் பாராட்டறேன். ஏன்னா, ஜப்பானியர்களின் தத்துவமே, 'மனதில் எளிமை வேண்டும்'ங்கிறது தான் என்றார்.

''ஹிரோஷிமா மேயர் கூறிய எளிமையை நான் ஜப்பான் முழுக்கப் பார்த்தேன்?

இப்படிச் சொல்வது பன்னிரண்டே வயதான நடராஜ் சர்மா.

பாண்டிச்சேரிவாசியான சிறுவன் நடராஜ், ஜப்பானுக்கு எங்கே, எதற்காகப் போனான்?

ஏர்—இந்தியா, நிப்பான் ஏர்வேஸ், ஹோகே இளப் (ஜப்பான்) ஆங்கிலப் பத்திரிகைகளான ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து, பாண்டிச்சேரி உட்பட தமிழ்நாட்டுப் பள்ளி மாணவர்களுக்காக ஒரு பேச்சு போட்டியை நடத்தின. வெற்றி பெறும் முதல் இரண்டு மாணவர்களுக்கு ஜப்பான் சென்று வர வாய்ப்பு அளிக்கப்பட்டது. இறுதிச் சுற்றுப் போட்டியில் ஆறு மாணவர்கள் பங்கு கொண்டனர். இந்த அறுவரில், பாண்டிச்சேரியைச் சேர்ந்த நடராஜ் சர்மா தான் வயதிலும் உருவத்திலும் சிறியவன் இவன் புதுவை பெடிட் சமனேர் மேநிலைப் பள்ளி மாணவன். இறுதிப் போட்டியில் இவன் இரண்டாவது பரிசு பெற்றான்.

அண்மையில் இவனை நேரில் சந்தித்த போது தனது ஜப்பான் அனுபவங்களைக் கூறினான்.

''சின்ன வயசிலேர்ந்தே எனக்கு ஜப்பான் மேல கொள்ளை ஆசை. எல். கே. ஜி. படிக்கறப்பவே 'எந்த ஊருக்குப் போணும்?'னு யாராவது கேட்டா, 'ஜப்பான்'னு சொல்வேனாம்! இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதற்கு எனக்கு என் பெற்றோரும், பள்ளி ஆசிரியர் ரெவரண்ட் ஃபாதர் ஜே. பால் அவர்களும் ரொம்ப உதவியாக இருந்தாங்க.

என்னை டோக்யோவில் உள்ள அஸாமோ ஆரம்பப் பள்ளிக்கூடத்துக்குக் கூட்டிக் கொண்டு போனாங்க. அங்கே உள்ள சிறுவர் சிறுமியருடன் இருக்கச் சொன்னார்கள். அப்பா! எவ்ளோ பெரிய பள்ளிக் கட்டிடம்! ஆனால், இருந்ததோ மொத்தமே 250 மாணவர்கள்தான்! ஒரு வகுப்புக்கு அதிகபட்சம் 20 மாணவர்கள் தான். அங்கே தினமும் பகலில் சத்துணவு தராங்க! மாணவர்கள் மட்டுமில்லாம, ஆசிரியர்களும் கூட அந்த உணவைத்தான் சாப்பிடறாங்க. சமச்சு வெச்சதை பசங்களே அழகா எல்லாருக்கும் பரிமாறிட்டு, சாப்பிடற அழகு... நான் அங்கே விருந்தாளியா போன அன்னிக்கு எல்லாருக்குமே வெஜிடேரியன் சாப்பாடுதான் — எனக்காக! அதை அறிந்ததும் என் மனசு ரொம்ப

நெகிழ்ந்து போச்சு!

"பாதாள ரயில் ஒரு அற்புதமான போக்குவரத்துச் சாதனம். ஒரு கட்டத்தில் எனக்கும், உடன் வந்திருந்த ஆசிரியர் ரெவரண்ட் ஜே. பால், மற்றவர்களுக்கும் வழிபுரிபடலே. அப்போ ஒரு பெரியவர் வலுவில் வந்து உதவி பண்ணினார். அவுஹ் எப்பவுமே ரயில்லதான் போய் வரு வாராம். ரொம்ப ரொம்ப எளிமை! பேச்சில் நிதானம்; கண்களில் அன்பு, சிரிப்பில் கருணை... கிரேட்மேன். அப்புறம் அவர் யார்னு விசாரிச்சுத் தெரிந்து கொண்ட போது, நான் அசந்து போயிட்டேன். அவர் பேர் திரு. ஓஹரா. அந்தப் பாதாள ரயில் போக்குவரத்துக்கு முதன் முதலா டிசைன் பண்ணிக் கொடுத்து அதன் இன்றைய அற்புதமான வளர்ச்சிக்கு வித்திட்டவராம்! எவ்வளவு முக்கியமான மனிதர்! எவ்வளவு எளிமையாக இருக்கிறார்!"

"பாதாள ரயில் பாதை ஸ்டேஷன்ல ஒரு பாட்டி, மாடிப் படிக்கட்டைப் பெருக்கிக்கிட்டிருந்தாங்க. கொஞ்சம் தள்ளாடினதால் விழப் போனாங்க. அப்ப, அந்தப் பக்கமா வந்த ஒரு ஜப்பானியப் பெண் அவங்களைத் தாங்கி நிறுத்தினா. 'நான் உங்களுக்காகப் பெருக்கி ஹெல்ப் பண்ணட்டுமா?'ன்னு கேட்டா. அவ ஆக்ஷன்லேந்து புரிஞ்சுக்கிட்டேன். உடனே பாட்டி, "வேண்டாம், வேண்டாம். இது என் வேலை. நான்தான் செய்யணும். எனக்குக் கிடைக்கிற சம்பளத்துக்கு நான் நியாயமா உழைக்க வேண்டாமா"ன்னு கேட்டாங்க.

நான் பிரமிச்சுப் போய் நின்னுட்டேன். கடுமையான உழைப்பு — எந்த வயசிலேயும், எவ்வளவோ முன்னேறிட்டாலும் — மேலை நாடுகளுக்கெல்லாம் சவால் விட்டாலும், தலையில் துளியும் கனம் ஏறாத எளிமை; யாருக்கும் எப்பவும் உதவுற இயல்பு, ஆடம்பரம் இல்லாத அடக்கம்... மனிதன் மனிதாபிமானத்தோட எப்படி வாழணும்ங்கிறதுக்கு ஒவ்வொரு ஜப்பானியரும் உதாரணமா இருக்கார். உண்மையாகவே கிரேட்தான்!"

"இவங்களைப் பார்த்துட்டு வந்தப்புறம் நானும் அவங்களைப் போலவே வாழத் தீர்மானிச்சிருக்கேன். புது இந்தியனா, அனாவசிய விவாதங்களில் ஈடுபடுத்திக் கொள்ளாது, தேவையில்லாத சச்சரவுக்கு இடம் கொடுக்காம, எல்லோருக்கும் உதவி, கடுமையா உழைச்சு, மனிதப் பிறவியோட அர்த்தத்திற்கு ஏற்ப வாழ விரும்பறேன். என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாருக்கும் கூட இதைச் சொல்றேன். இன்றைய நிலைமை இப்ப எப்படி இருந்தாலும், எங்களோட எதிர்காலம், நாட்டின் வளர்ச்சியைக் கண்டிப்பாகப் பார்க்கும். இன்னொரு ஜப்பானை நம் நாட்டிலேயே பார்க்க முடியும்ங்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு வந்திருச்சு."

இரண்டு இலட்சம் மாணவர்கள் கலந்து கொண்ட பேச்சுப் போட்டியில் 2 வதாக வந்தவனல்லவா? மூச்சு விடாமல் பேசிப் பிளந்து கட்டினான். பேச்சிலே, ஜப்பானுக்கு இணையாக நமது நாட்டை முன்னேறச் செய்து காண வேண்டும் என்ற துடிப்பு தெரிந்தது!


பெரியவர்களையெல்லாம் அயல்நாட்டுக்கு அனுப்புவதைவிட, சிறுவர்களை அனுப்பினால் சகோதரத்துவமும், உலக ஒருமைப்பாடு உணர்வும் வளரும். போட்டி, போர், துவேஷம் இன்றி, அன்பு மயமான ஒரு புதிய உலகம் படைப்பதற்கு உதவியாக இருக்குமே என்ற ஏக்கமே நடராஜ சர்மாவைப் பார்த்த பிறகு எனக்குத் தோன்றியது. இன்றைய சிறுவர்தானே நாளைய தலைவர்கள்?

கட்டுரை — பேட்டி, புகைப்படம்:

பிரபுசங்கர்.

அட்டைப்படம்: டோக்கியோவுக்கு அருகிலுள்ள டிஸ்னிலேண்ட்.

புகைப்படம் — உதவி: ஜப்பான் கான்சலேட் அலுவலகம், சென்னை — 31.




அமெரிக்காவில் "சில்ட்ரன்ஸ் எக்ஸ்பிரஸ்" என்ற குழந்தைகள் பத்திரிக்கை ஒன்று வெளி வருகிறது. இதற்குப் பணியாற்றும் பல நிருபர்கள் கூட சிறுவர்களே! வயது பத்து முதல் பன்னிரண்டு வரையிலானவர்கள். உலகில் வேறு எங்கும் எந்தப் பத்திரிக்கைக்கும் இத்தனை குறைந்த வயது நிருபர்கள் கிடையாது.

எல். முத்து, ஊத்தங்கரை.

துண்டு துண்டாய் கிடைக்கிறான்
உங்கள் உற்ற நண்பன் !



மீண்டும் அவனை ஒன்று சேர்க்க
முடியுமா உங்களால் ?

இந்த சதுரங்களை வெட்டி அவற்றை சேர்த்து ஹாண்டிபாயை முழுமையாக மீண்டும் உருவாக்கி மகிழுங்கள்.

நீங்கள் விரும்பிய போதெல்லாம் விளையாடலாம்... நிரந்தரமான ஒரு ஹாண்டிபாய் பசிலை பெறுவதற்கு அவற்றை ஒரு அட்டையில் ஒட்டி வைத்தால் இன்னும் நல்லது.



HTA 1035

குருவி...



சின்னத் தவிட்டுக் குருவியே
சிறகடித்துப் பறக்கிறாய்!
துட்டுத் தாரேன் என்னையும்
தூக்கிப் போக மறுக்கிறாய்!

அழகு வானம் தன்னையே
அருகில் சென்று பார்க்கவே
விரைந்து செங்கம் என்னையே
விட்டு விட்டுப் போகிறாய்!

வண்ண வான வில்லையே
வளைத்துப் பார்க்க விரைகிறேன்.
என்னை ஏய்க்கப் பார்க்கிறாய்!
ஏனோ மறுத்துப் பறக்கிறாய்!


— ப. ஆனந்த், கோவை — 38.

முருகன்...


பழனி மலை முருகனாம் — என்றும்
பக்தர் போற்றும் முருகனாம்.
தொழுது பாடிப் போற்றினால் — என்றும்
தொல்லை நீக்கி அருளுவான்.

காவடி தூக்கி ஆடினால் — என்றும்
காத்து வரம் அருளுவான்
பாவங் களைப் போக்கியே — என்றும்
பக்தர்க் கருளும் முருகனாம்.

— ம. ஜெயராமன், அரியலூர்.



பாப்பா...



சின்னச் சின்னப் பாப்பா
சிரிக்கும் நல்ல பாப்பா.
அன்னை முகம் கண்டால்
அழுகை நிறுத்தும் பாப்பா.

கட்டித் தனம் செய்யும்
சொக்கத் தங்கப் பாப்பா.
பட்டுச் சட்டைப் போட்டு
பலூன் ஊதும் பாப்பா.

தட்டா மாலை சுற்றி
தானே விழும் பாப்பா
பாட்டுப் பாடி என்னை
பார்த்துச் சிரிக்கும் பாப்பா.

— எஸ். சரவணன், போளூர்.

அம்மா...

அம்மா உன்னை வணங்கிடுவேன்
அன்பாய் உன்னிடம் நடந்திடுவேன்

அன்புடன் நீதரும் பழஞ்சோறு
அமுதாய் நினைத்து உண்டிடுவேன்.

ஆசையில் நீதரும் முத்தங்கள்
அழியா நெஞ்சில் முத்துக்கள்.

அள்ளி அணைத்துப் பாலூட்டி
அயர்வு இன்றிக் காத்தவளே.

தமிழை அமுதாய் வாயினிலே
தடைகள் இன்றித் தந்தவளே.

தாயே என்றும் நீவாழ்க
தரணி போற்ற உயர்வாக.

— மாத்தூர் பரமசிவம், தஞ்சாவூர்.



எனக்குத் தான் பரிசு



கொ.மா.கோதண்டம்

உலகப் புத்தகச் சந்தை அரங்கில் நுழைந்ததுமே சீதாராமன் பரமித்து நின்று விட்டான்.

அடேயப்பா! எத்தனை புத்தகக் கடைகள்! எத்தனை எத்தனை விதமான கண்ணைக் கவரும் புத்தகங்கள்! உலகின் அனைத்து மொழிகளிலும், அனைத்து நாடுகளும் அங்கே புத்தகக் காட்சி சாலைகளும் விற்பனைப் பிரிவுகளும் வைத்திருந்தன.

எத்தனை வரிசைகளில் எத்தனை கடைகள்!

மிகப் பெரிய கடையான சோவியத் கடையில் கூட்டம் அதிகமிருந்தது. அவர்கள் தென்னிந்திய மாநிலங்களின் கடைகள் உள்ள பகுதிக்கு வந்தனர்.

தெலுங்கு மொழி புத்தகக் கடை, கன்னட மொழி புத்தகக் கடை, அடே மலையாளத்திற்கு இரண்டு கடைகள்!

''ஐயா! தமிழ் மொழி புத்தகக் கடை எங்கே உள்ளது?''

சீதாராமன் கேட்டதும் ராஜாலிங்கம் ஒரு கடைக்கு அழைத்துச் சென்றார். அது சாகித்ய அகாடமி புத்தக விற்பனைப் பிரிவு. அவர்களின் தமிழ் வெளியீட்டு நூல்களும் அங்கே இருந்தன.

''நமது மொழிக்கு என்று தனியாகப் புத்தகக் கடை இல்லையா?''

''இல்லை தம்பி. முன்னால் சில தமிழ்ப் பதிப்பகத்தார் கடை போட்டார்கள். சரியா விற்பனை இல்லேன்னு இப்ப யாரும் கடை போடலை. தமிழக அரசு கூட இதுக்குன்னு சிரத்தை எடுத்து ஒரு கடை போடலையே?''

இதைக் கேட்டதும் சீதாராமனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. 'தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றி நமது ஆசிரியர் எப்படியெல்லாம் கூறினார். எங்கும் தமிழ் எதிலும் தமிழ்! என்று மேடையில் கூடப் பேசினார். இங்கே என்னடா என்றால், குட்டி மலையாளத்திற்கு இரண்டு கடைகள்! நமது மூத்த தமிழ் மொழிக்கு ஒரு கடை கூட இல்லையே!

''சரி சரி, பார்த்திட்டு வேகமாக போகலாம். தமிழ்மொழி கடை இருந்துட்டா மட்டும் இப்ப நீ ரெண்டாயிரம் ரூபாய்க்கு புத்தகங்க வாங்கிடப் போறயாக்கும்.''

மணி கேலியாகக் கூறியதும், சீதாராமனுக்கு மனம் மிகவும் வருந்தியது.

அவர்கள் அங்கிருந்து திரும்பினார்கள்.

புது தில்லியிலுள்ள இந்திய குழந்தைகள் சங்கம், அகில இந்திய அளவில் பள்ளி மாணவர்களுக்கு ஒரு ஓவியப் போட்டி நடத்தியது.

விண்ணப்பத் தாள்களை, டில்லியில் ஒரு கம்பெனியில் வேலை பார்க்கும் சீதா ராமனின் சித்தப்பா, அவனுக்கு அனுப்பி அவனை அதில் கலந்து கொள்ளுமாறு எழுதினார். அவர் மகன் மணியும் கலந்து கொள்கிறானாம்.

தனது தாத்தாவின் ஆலோசனைப் படி, அயோத்தியில் ராமபிரான் சிறு வயதில் சாலையில் தான் சந்திக்கும் முதியவர்களை நலம் விசாரிக்கும் காட்சியைச் சித்திரமாகத் தீட்டி, அதன் கீழே கம்பன் பாடல் வரிகளையும் எழுதி அனுப்பியிருந்தான்.

போட்டியில் சீதா ராமனுக்கே முதல் பரிசு! கடிதம் கிடைத்ததும் சித்தப்பாவிற்கு நன்றி தெரிவித்துக்

கடிதம் எழுதினான்.

'பரிசு வாங்க வரும் பொழுது தனது வீட்டில் தங்குமாறும், தான் பல இடங்களைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்வதாகவும்' சித்தப்பா எழுதியிருந்தார்.

சீதாராமன் புது டில்லிக்கு வந்துவிட்டான்.

இன்னும் இரண்டு நாட்களில் பரிசளிப்பு விழா.

சீதாராமன் என்றாலே சித்தப்பா மகன் மணிக்குப் பிடிப்பதில்லை. காரணம், மணியின் தந்தை தன் மகனிடம் எதற்கெடுத்தாலும் "நீ அவனைப் போலப் படிக்க வேண்டும். அவனைப் போல இருக்க வேண்டும்" என்று அடிக்கடி கூறுவதால். அதோடு, தனக்குப் பரிசு கிடைக்கவில்லை. இவனுக்குக் கிடைத்திருக்கிறதே என்ற எரிச்சல் வேறு. எண்ணி எண்ணிப் பொறாமையை வளர்த்துக் கொண்டான்.

சீதாராமனும் மணியும் ஓரளவு பார்ப்பதற்கு ஒன்று போலவே இருப்பார்கள். இவனுக்கு மணியின் இயல்புகள் சரியாகத் தெரியாததாகையால் மிக அன்போடுதான் பழகினான். மணியும் சீதாராமனுடன் அன்போடு பழகுவது போல நடித்தான்.

மணியின் தந்தை கம்பெனி வேலையாகக் கல்கத்தா போவதால் தனது நண்பர் ராஜலிங்கத்தை அழைத்துச் சிறுவர்கள் இருவருக்கும் பல இடங்களைச் சுற்றிக் காண்பிக்குமாறு ஏற்பாடு செய்து விட்டுப் போனார். அதன்படி அவர்கள் அன்று புத்தகச் சந்தைக்கு வந்திருந்தனர்.


இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை புது டில்லியில் நடைபெறும் உலகப் புத்தகச் சந்தையில் தமிழ் மொழிக்கு என ஒரு கடை இல்லையே என்ற வருத்தத்துடனேயே அவன் வெளியே வந்தான்.


ராஜலிங்கம் கூறும் செய்திகளை சீதாராமன் டைரியில் குறித்துக் கொண்டான். 'இந்த நகரத்தின் பழைய பெயர் இந்திரப் பிரஸ்தம். பாரதப் போர் நடந்த அஸ்தினாபுரம் பத்து மைல் தூரத்தில்தான் இருக்கிறது. இன்றைய புது தில்லியை நிர்மாணித்தவர் எட்வின் லூரியங் என்ற ஆங்கிலேயர். இந்த நகரின் மக்கள் தொகை ஒரு கோடியை எட்டிக் கொண்டிருக்கிறது' பேசிக் கொண்டே அவர்கள் வண்டியில் ஏறினார்கள்.

கன்னாட் பிளேஸ் மார்க்கெட், கரோல் பாக் பார்த்து விட்டு பூமிக்கு அடியில் புதுமையாக அமைக்கப் பட்டுள்ள பாலிகா பஜாருக்கு வந்தனர்.


'குளுகுளு' காற்றும், கண்ணைப் பறிக்கும் விளக்குகளும் அமைந்த தெருக்களின் இருபுறமும் வரிசையாகக் கடைகள். அவற்றில் ஆடம்பரப் பொருட்கள் விற்பனையாகிக் கொண்டிருந்தன. அதனைப் பார்த்து விட்டு பிரமிப்புடன் வெளியே வந்தனர்.

பழைய டில்லி மார்க்கெட்டில் சாலை ஓரக் கடைகளில் ஸ்வெட்டர், கம்பளி மற்றும் துணிகள் மலையாகக் குவிக்கப்பட்டிருந்தது. கூட்டமும் அதிகமாக இருந்தது.









ராஜலிங்கம்,. அவர்களுக்குப் பாராளுமன்றத்தையும், குடியரசுத் தலைவர் வசிக்கும் ராஷ்டிரபதி பவனையும் காண அனுமதி வாங்கி வைத்திருந்தார்.

வட்ட வடிவில் சுற்றிலும் தூண்களுடன் கூடிய பாராளுமன்றத்தின் அழகிய கட்டிடத்திற்குள் அவர்கள் சென்றனர். அந்தப் பெரிய வட்டத்திற்குள் மூன்று வட்டக் கட்டிடங்கள்.

லோக் சபா, ராஜ்ய சபா ஆகிய எல்லாவற்றிலும் அழகிய மெத்தைகளுடன் கூடிய அமரும் ஆசனங்கள் பிறை வடிவங்களில் இருந்தன. மைக் மற்றும் உடனுக்குடன் மொழிபெயர்க்கும் கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன. பார்த்து விட்டு வெளியே வந்தனர்.

மிகப் பெரிய அழகிய மாளிகையான ராஷ்டிரபதி பவனுள் நுழைந்தனர். அதில் மூன்று பெரிய அரங்கங்கள், அசோகா ஹால், சிட்டிங் ஹால், தர்பார் ஹால். இங்குதான் இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் தலைமையேற்று நடத்தும் பட்டமளிக்கும் விழா, விருதுகள் வழங்கும் விழாக்கள் நடைபெறும். மொத்தம் 340 அறைகள் உள்ளன. ஒரு ஹாலில் அற்புத வேலைப்பாடமைந்த ஆயிரம் கைகள் கொண்ட புத்தர் சிலை இருந்தது! ஒரு வெளிநாட்டு அதிபரின் அன்பளிப்பாம் அது.


இவற்றைப் பார்த்து விட்டுப் பெருமிதத்துடன் அவர்கள் வெளியே வந்தனர்.

ராஷ்டிரபதி பவனின் பின்பக்கம் மிகப் பெரிய பூங்கா இருந்தது. அதன் பெயர் மொஹல் கார்டன். ஆயிரக் கணக்கில் செடி கொடிகள், விதவிதமான வண்ண மலர்கள், அதையும் பார்த்து விட்டுத் திரும்பினார்கள்.

மறுநாள் காலை நகர சுற்றுலா பஸ்ஸில் ஏறிச் சென்றனர். 25 கோடி ரூபாய் செலவில் கட்டிய ஆசிய விளையாட்டரங்கம் காண வியப்பாக இருந்தது. அடுத்து குதுப்மினார்.

குத்புதீன் மன்னர் கட்டிய கலை வேலைப்பாட்டுடன் கூடிய 235 அடி உயர கோபுரம். அருகில் உள்ள இரும்புத் தூண் நீண்டகாலமாக துருப் பிடிக்காமல் இருக்கிறதாம்! அதனைக் கட்டிப் பிடித்து இருவரும் விளையாடினர்.

பின்னர் அலாவுதீன் கில்ஜி 13ம்



நூற்றாண்டில் கட்டிய மொட்டைக் கோபுரம் கண்டனர். தாஜ்மகாலைப் பின்பற்றிக் கட்டிய ஹுமாயூன் கோட்டைக்குச் சென்றனர். இதில் அரச வம்சத்தைச் சேர்ந்த 125 சமாதிகள் உள்ளனவாம். முதலாம் உலகப் போரில் உயிர்நீத்த 85 ஆயிரம் சிப்பாய்கள் நினைவாகக் கட்டிய 'இந்தியா கேட்' பார்த்தனர்.

தொழிலதிபர் பிர்லா, பதேபூர் பளிங்குக் கற்களால் கட்டிய லக்ஷ்மி நாராயணன் கோவிலைத் தரிசித்தனர். ராஜ்காட் காந்தி சமாதியில் வணங்கி விட்டு சாந்திவனம், குழந்தைகளின் மாமா நேரு சமாதி, இந்திரா அன்னை சமாதி இவற்றில் மலர்கள் வைத்து வணங்கினார்கள்.

மிகப் பெரிய ஜும்மா மசூதி கண்டு அதிசயித்தனர்.

செங்கோட்டை உள்ளே சென்று பழைய சிம்மாசனங்கள், கலைப் பொருட்கள் கண்டு மகிழ்ந்தனர்.

பின்னர் ஜந்திர் மந்தர் சென்றனர். 17ம் நூற்றாண்டில் ஜெய்ப்பூர் மன்னர் ஜய்சிங் கட்டிய வானிலை ஆராய்ச்சி நிலையம் இது. வளைவான, நீளமான, விதம் விதமான கட்டிடங்கள். அதன் நிழல், அங்கு வீசும் காற்று இதனை வைத்தே அக் காலத்தில் வானிலையை உணர்ந்தார்களாம். ராஜாலிங்கம் புகைப்படங்களை எடுத்து விட்டு,

"மணி நான் அவசரமாக இன்னும் சிறிது நேரத்தில் தமிழக எம். பி. ஒருவரைச் சந்திக்க வேண்டும். டவுன் பஸ் ஏறிப் போகிறேன். உனக்குத் தான் டில்லி முழுவதும் நன்றாகத் தெரியுமே. இனி, நீயே சீதாராமனுக்கு வேறு சில இடங்களைக் காட்டி விட்டு மாலையில் பரிசளிப்பு விழாவுக்கு வந்து விடு. நான் அங்கு வந்து உங்களைச் சந்திக்கிறேன்" என்று கூறி விட்டுச் சென்று விட்டார்.

"ஜந்தர் மந்திர் ஒளிந்து விளையாட நல்ல இடம். நாம் இங்கே

ஒளிந்து விளையாடலாம். நீ என்னைக் கண்டுபிடி!'' என்று கூறி விட்டு, மணி ஒரு கட்டிடத்திற்குள் ஓடினான்.

சீதாராமன் என்ன தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை.

நேரமும் ஆகிறது. மணியைக் காணோம்! சீதாராமன் தவியாய்த் தவித்தான். விழாவுக்குச் செல்ல வேண்டுமே! 'மணிக்கு இடம்தெரியுந் தானே, அவன் எப்படியும் வந்து விடுவான்' என நினைத்து அவனுக்குத் தெரிந்த அறைகுறை இந்தியில் விசாரித்து, பஸ் ஏறி, பரிசளிப்பு விழா அரங்கில் நுழைய அங்கே,

''சீதாராமன் தமிழ்நாடு...'' என்ற அறிவிப்பும், அதனைத் தொடர்ந்து மேடையை நோக்கி மணி செல்வதும் கண்டு திடுக்கிட்டான்.

இவனுக்குப் பதிலாக, தானே சீதாராமன் என்று கூறிப் பரிசு வாங்கவே இவனை விட்டு விட்டு மணி ஓடி வந்தான்! பாதை தெரியாமல் அவன் திண்டாடி, வந்து சேர்வதற்குள் பரிசு வாங்கி விடலாம். டி.வி.யிலும் பத்திரிகையிலும் நமது படம் வந்து விடும் என்று கனவு கண்டான்.

''மணீ...'' என்று கத்தினான் சீதாராமன். திரும்பி இவனைப் பார்த்ததும் அதிர்ச்சியால் அப்படியே நின்று விட்டான் மணி.

இருவரும் ஒன்று போல இருப்பதும், ஒரே சமயத்தில் பரிசு வாங்க மேடைக்கு வந்ததும் விழா அமைப்பாளர்களுக்கு சந்தேகத்தைத் தோற்றுவிக்கவே இருவரையும் விசாரித்தனர்.

மணி குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டான்.

சீதாராமன் பரிசுக் கோப்பையை வாங்கிக் கொண்டு வந்து மணியிடம் தந்தான்.

மணி தலைகவிழ்ந்தான். அவன் கண்களிலிருந்து பொலபொலவென கண்ணீர் வடிந்தது. அது தான் திருந்தி விட்டதற்கு அடையாளமோ!





• சுமதி

பயந்த விஷயம் துணிந்த விஷயம்

—4 பேர்பேட்டி

தெருவில் நடந்து கொண்டிருக்கிறோம். திடீரென்று ஒரு நாய் துரத்துகிறது. நாம் ஓடுகிறோம். அல்லது ஒரு கல்லை எடுத்து அடித்து அதை விரட்டுகிறோம். ஓடுவது பயந்த செயல். விரட்ட முயல்வது துணிந்த செயல். அன்றாட வாழ்வில் நாம் இப்படி எத்தனையோ பயந்த விஷயங்களையும், துணிந்த விஷயங்களையும் செய்கிறோம். இப்படித் தங்களுக்கு ஏற்பட்ட "துணிந்த," "பயந்த" அனுபவங்களை மதுரையைச் சேர்ந்த தம்பி, தங்கைகள் நால்வர் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள்...

அஜந்தா ராகவேந்தர்: "சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நடந்த நிகழ்ச்சி. நான் பள்ளி கோடை விடுமுறையில் என் தாத்தா வீட்டிற்குச் சென்று தங்கினேன். அங்கு என் மாமா குழந்தைகள் அபர்ணா, சொர்ணாவுடன் விளையாடி, பொழுதைக் கழித்தேன். அவர்களை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு அருகில் இருந்த ஏரியில் மீன்களை வேடிக்கை பார்க்கச் சென்றேன். திடீரென்று குழந்தை அபர்ணா ஏரிக்குள் விழுந்து விட்டாள். உயிருக்குப் போராடித் தத்தளிக்கத் துவங்கி விட்டாள். அருகில் பலர் இருந்தாலும், அவளைக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லை. வேடிக்கைதான் பார்த்தார்கள். நான் சட்டென்று துணிச்சலுடன் ஏரிக்குள் குதித்து எனக்குத் தெரிந்த அரைகுறை நீச்சல் அடித்து அபர்ணாவைப் பிடித்து இழுத்துக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்து விட்டேன். பிறகு, மற்றவர்கள் வந்து உதவினார்கள். வீட்டில் என்னை எல்லோரும் திட்டித் தீர்த்தாலும், நான் தைரியமாக ஏரியில் குதித்துக் குழந்தையைக் காப்பாற்றியதை மெச்சினார்கள்."

சுமதி: "அப்போது பரீட்சை நேரம். நான் மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு பரீட்சை எழுதி விட்டு அடுத்த நாள் 'அறிவியல்' பரீட்சை என்று படித்துக் கொண்டிருந்தேன். பரீட்சைக்குப் போக இரண்டு மணி நேரம் முன்னதாக என்னைப் பார்க்க வந்த என் தோழி 'பூகோளப் பரீட்சைக்கு நல்லா படிச்சிட்டாயா?' என்று கேட்ட போது குழம்பி விட்டேன். தோழி தேர்வு அட்டவணையைக் காட்டினாள். 'பூகோளம்' என்று இருந்தது. நான் தவறுதலாக 'அறிவியல்' பரீட்சைக்குப் படித்ததை நினைத்துப் பயந்து விட்டேன். எப்படி 'பூகோளம்' பரீட்சை எழுதுவது என்று நடுங்கினேன். என் அப்பா எனக்குத் தைரியம் சொல்லி, மிச்சம் இருந்த இரண்டு மணி நேரத்தில் 'பூகோளம்' படிக்க வைத்தார்.



• அகிலா

• கிருஷ்ணன்



• அஜந்தா ராகவேந்தர்



எப்படி எழுதப் போகிறேனோ என்ற அச்சத்துடன் பரீட்சை ஹாலுக்குப் போனேன். பரீட்சை வினாத்தாள் தந்ததும் தன்னம்பிக்கை வந்து விட்டது. இதற்குப் போய் பயப்படலாமா என்று தைரியமாக எழுதினேன். வகுப்பில் நன்கு கவனித்திருந்ததால் நல்ல மார்க்கும் கிடைத்தது. எல்லாம் நம் மனதில்தான் இருக்கிறது. வீண் பயங்களை விட்டு ஒழித்தால் வெற்றி நிச்சயம்.''

கிருஷ்ணன்: ''பொழுது போக்க என் மாமா வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர் ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியர். என்னைத் தான் பணிபுரியும் பள்ளிக் கூடத்திற்கு அழைத்துச் சென்றார். முழு ஆண்டுத் தேர்வு பரீட்சை பேப்பர்களைத் திருத்த ஆரம்பித்தார். அவருடன் பல ஆசிரியர்களும் பரீட்சைப் பேப்பரைத் திருத்தி 'மார்க்' போடுவதை வேடிக்கை பார்த்தேன். அப்போது எங்கிருந்தோ ஒரு நல்ல பாம்பு எப்படியோ அந்த அறைக்குள் நுழைந்து மாமா அருகில் படம் எடுத்து ஆடியது. பேப்பர் திருத்தும் மும்முரத்தில் மாமா அதைக்கூட கவனிக்கவில்லை. நான் பார்த்து விட்டுக் கத்தினேன். எல்லோரும் மிரண்டு போய் அலற, மாமா அரண்டு போய் என்ன செய்வதென்று அறியாமல் 'சிலை'யாகி விட்டார். யாரும் அருகில் செல்லவில்லை. பயந்து நடுங்கினார்கள். நான் மாமாவைக் காப்பாற்ற வேண்டும் என்ற அசட்டுத் துணிச்சலில் அருகில் இருந்த குடையை எடுத்து வந்து பாம்பைத் தள்ளி விட்டேன். அது தூரத்தில் போய் விழுந்து யாரையும் ஒன்றும் செய்யாமல் ஓடிவிட்டது.''

அகிலா: ''என் சித்தி குழந்தை சௌம்யா படுசுட்டி. ஏதாவது விஷமம் செய்து கொண்டே இருப்பாள். ஒரு முறை சின்ன விளக்கைக் கீழே ஏற்றி வைத்திருந்தார்கள். சௌம்யா அதன் அருகே போக, அவளுடைய பட்டுப் பாவாடையில் நெருப்புப் பற்றிக் கொண்டு விட்டது. சௌம்யா 'தீப் பொறி' பறக்க அலறி ஓடியதைப் பார்த்து, பயத்தில் நான் கத்தி விட்டேன். குழந்தையை எப்படிக் காப்பாற்றுவது? 'தீ' விறு விறுவென்று பரவி எரிய, என் மனதிலும் 'பயம்' பரபரப்பாக ஓடியது. டக்கென்று பெரிய கம்பளிப் போர்வையை எடுத்துக் குழந்தையைப் போர்த்திச் சுற்றினேன். நெருப்பு அணைந்து விட்டது. ஆஸ்பத்திரிக்குக் குழந்தையை அழைத்துச் சென்று சிகிச்சை செய்து காப்பாற்றினோம். இப்போதும் கூட விளக்கைப் பார்த்தாலே எனக்கு பயமாகவே இருக்கிறது!''

பேட்டி, படங்கள்:

விஜயா கண்ணன், மதுரை.



சேதுவின் வேப்பமரம்

''அப்பா, அப்பா, உங்க மனசைக் கொஞ்சம் மாத்திக்குங்கப்பா,'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான் சேது.

சேதுவின் வீட்டின் முன்புறம் ஒரு பெரிய வேப்ப மரம் இருந்தது. அது, வீட்டின் முகப்பழகையே கெடுத்து விடுவதாக நினைத்தார் சேதுவுடைய தந்தை. அதனால், அந்த மரத்தை வெட்டி எறிய அவர் முடிவெடுத்து விட்டார்.

''அதெல்லாம் முடியாது. நாளைக்கு முதல் காரியமாக அதை வெட்டுவதுதான் என்னுடைய வேலை,'' என்று கூறிவிட்டு வெளியே கிளம்பினார்.

''வேப்பமரமே! உன்னை அம்பாள் சக்தியென்றெல்லாம் போற்றிவணங்குகிறார்கள். உன்னை நீயே எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்,'' என்று மனத்திற்குள் வேண்டிக் கொண்டான் சேது.

சேதுவின் தந்தை நெற்றி வியர்வையைத் துண்டால் துடைத்துக் கொண்டே நடந்தார்.

மேற்குச் சூரியன் சுள்ளென்று அவரைத் தாக்கியது. அந்தக் கொடூரமான வெயிலில் மண்டையே பிளந்துவிடும் போல இருந்தது.

நாலாவது வீட்டை அவர் கடக்கும் போது, அந்த வீட்டுக்காரர் அவரை உள்ளே வரும்படி அழைத்தார்.

உற்ற நண்பர் அப்படி அழைக்கும் போது மறுத்துவிட்டுப் போக முடியவில்லை.

உள்ளே சென்று சோபாவில் உட்கார்ந்து கொண்டார்.

கொடுக்கப்பட்ட சர்பத்தை மெல்லப் பருகத் தொடங்கினார்.

என்ன இது!

மேலே நிமிர்ந்து பார்த்தார். மின் விசிறி வேகமாகச் சுழன்று கொண்டுதான் இருந்தது. இருந்தும் ஏன் இந்த வெம்மை!

''என்ன சார்! உங்க வீடு இப்படி வெக்கையாக இருக்கு?'' என்று அவர் நண்பரைக் கேட்டார்.

''இருக்காதா சார்! எல்லோருக்கும் உங்களை மாதிரி வீடு வாய்ச்சுடுமா? கொடுத்து வைத்திருக்கணும் சார்,'' என்றார் நண்பர்.

''நீங்க எதைச் சொல்றீங்க?'' — சேதுவின் தந்தை புரியாமல் கேட்டார்.

நண்பர் சிரித்தார்.

''எதையா! அருமையா ஒரு வேப்ப மரம் மேற்கு வெயில் உங்க வீட்டிலே விழாமே தாயா நின்னு பாதுகாக்குதே சார்! அதனாலேதான், உங்க வீட்டிலே இவ்வளவு வெக்கை தெரியலே. நான் கூட ஒரு வேப்பங்கன்று நடணும்னு இருக்கேன். இன்னைக்கு எனக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு, என் குழந்தைகளுக்குக் குளிர்ச்சியைத் தரும். இல்லையா?'' என்று கூறினார் அவர்.

சேதுவின் தந்தை நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டு நேராகச் சேதுவிடம் வந்தார்.


''சேது! உன் விருப்பம் போலவே ஆகட்டும். வேப்ப மரத்தை வெட்டப் போவதில்லை,'' என்றார்.

அவர் முடிவில் மாற்றம் ஏற்பட்டதற்கான காரணத்தைச் சேது அறியவில்லை. ஆனால், அவனுடைய மகிழ்ச்சி மட்டுப்பட்டுவிடுமா என்ன?

பாய்ந்து வெளியே ஓடிய அவன் தாவிக் குதித்து ஒரு கொம்பைப் பிடித்துக் கொண்டு உற்சாகத்தோடு ஆடினான்.

மரமும் சலசலத்துத் தனது மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டது.

கைலாஸ்



கொளுத்துகிற வெயிலிலும் குதூகலத்தோடு கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்கள், 'டிரிங்க்ஸ் இன்டர்வெல்' என்று சொல்லிக்கொண்டு, அந்தமைதானத்தின் கீழ்ப்புறம் இருந்த மரத்தடியில் ஒதுங்கினார்கள். உடனே, டெஸ்ட் மேட்சின் டிரிங்க்ஸ் இன்டர்வெல் போல;பானங்கள் நிறைந்த வாகனம் அங்கே வரவில்லை. ஏன், சிறுவாணி தண்ணீர் கூட இல்லை. பள்ளி மாணவர்களின் கிரிக்கெட்டில் இதற்கெல்லாம் இடமேது?

மாணவர்கள் மரத்தடியில் குழுமியதும், சற்றுத் தூரத்தில் சிதம்பரம் பூங்காவின் பிரதான வாசலருகே நின்று 'ஐஸ்...' என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்த ஒருவன், ஐஸ் வண்டியைத் தள்ளிக் கொண்டு மரத்தடிக்கு வந்தான்.

''ஐஸ்.... ஆரஞ்... கிரேப்... மாங்கோ... சாக்கோ பார்... ஐஸ்....''

ஏழைப்பாவி பிச்சைக்காரர்!

வெயிலில் விளையாடியதால் ஏற்பட்ட தாகத்தை விட, ஐஸ்காரனின் குரல் இன்னும் அதிக தாகத்தை ஏற்படுத்தியது. அத்தனை பேருக்கும் ஐஸ் சாப்பிட ஆசைதான். ஆனால் காசு...?

மற்றவர்கள் விழித்துக் கொண்டிருக்க, மாதவன் முன்னே வந்தான். ஒரு பத்து ரூபாய்த் தாளை மிக அலட்சியமாக எடுத்து ஐஸ்காரனிடம் கொடுத்து, ''ஒரு சாக்கோபார்'' என்றான்.

ஐம்பது காசிலிருந்து ஐஸ் இருந்தது. ஆனாலும், இரண்டு ரூபாய் விலையுள்ள சாக்கோபாரை வாங்கிக் கொண்ட மாதவன், திரும்பி மற்றவர்களைப் பார்த்தான். நண்பர்களில் பெரும்பாலோர் அவனையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''தம்பி, மீதி காசு...''

ஐஸ்காரன் மீதி எட்டு ரூபாயை எடுத்து நீட்டினான். மாதவன் அதை வாங்கிக் கொள்ளவில்லை.

''காசு இருக்கட்டுங்க. முதல்லே

டாக்டர் பூவண்ணன்

ஆளுக்கு ஒரு ஐஸ் கொடுங்கோ. சாக்கோபார் கொடுத்திடாதீங்க. ஐம்பது காசு ஐஸ் புரூட் கொடுங்க'' என்று கூறிய மாதவன், நண்பர்கள் பக்கம் திரும்பி, ''பிரண்ட்ஸ், ஐஸ் வாங்கிக்கோங்க'' என்று பெருமையோடு கூறினான்.

''ஹைய்யா! மாதவன்தான் உண்மையான நண்பன்!''

ஒருவன் குரல் கொடுத்தான். மற்றவர்கள் ஐஸ் வண்டியைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள்.

இத்தனை தாராளமாகச் செலவிடும் மாதவன் மில் முதலாளி மகனா? தொழிலதிபரின் செல்லப் பிள்ளையா? இல்லை! இல்லை! அவன் மாதச் சம்பளம் வாங்கும் ஒரு சாதாரணத் தொழிலாளியின் மகன் தான்! அவன் தந்தை, மகனிடம் மிகுந்த பாசம் கொண்டவர். அதனால், அவன் கேட்கும் முன்பே தேவைக்கு அதிகமாகப் பணம் கொடுப்பார். அதைத்தான் மாதவன் கர்ணமகாராசனைப் போலச் செல



விட்டு வந்தான்.

ஐஸ் வாங்கிய மாணவர்கள் மாதவனுக்கு நன்றி கூறியபடி நாவையும் தொண்டையையும் குளிர்வித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் புகழுரையில் மயங்கிய மாதவன், பெருமிதத்தோடு சுற்று முற்றும் பார்த்தான்.

மரத்தடியில் உட்கார்ந்திருந்த செல்லப்பன் அவனது பார்வையில் பட்டான்.

செல்லப்பனும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால், மரத்து வேரின் மீது உட்கார்ந்த செல்லப்பன் ஓசி ஐஸ் வாங்க ஓடிச் செல்லவில்லை.

மாதவன் செல்லப்பன் அருகே வந்தான்.



''என்ன செல்லப்பா, இங்கேயே உட்கார்ந்திருக்கே? போய், ஐஸ்புரூட் வாங்கிக்கோ...''

செல்லப்பன் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை.

''செல்லப்பா, உனக்கு ஐஸ் புரூட் வேண்டாமா?''

''வேண்டாம்.''

''ஏன்? ஐஸ்புரூட் சாப்பிட்டா உனக்கு ஜலதோஷம் வருமா?''

''வரும். நீ வாங்கிக் கொடுக்கிற ஐஸ்புரூட்டைச் சாப்பிட்டா, ஜலதோஷமில்லே... பலதோஷம் வரும்.''

மாதவனின் முகம் இறுகியது.

'இவன் பேச்சிலே வேற ஏதோ அர்த்தம் இருக்கும் போலத் தெரியுதே!'

மாதவன், ''பலதோஷம் வருமா! என்னென்ன தோஷம் வரும்னு சொல்லேன்?'' - என்று கேட்டான்.

ஐஸ்புரூட்டின் இனிப்பிலும் குளிர்ச்சியிலும் ஈடுபட்டிருந்த நண்பர்கள், மாதவனது குரலில் ஏற்பட்ட கடுமையை உணர்ந்து, 'என்னமோ நடக்குது' என்று நினைத்தபடி, அவனை நெருங்கி நின்றனர்.

செல்லப்பன் முதலில் பதில் சொல்லாமல் ஒரு வெறுப்பான பார்வையை மாதவன் மீது வீசினான். ''நான் கேக்கறேன் இல்லே..? பதில் சொல்லுடா...'' என்று மாதவன் உறுமியதும் நிதானமாகப் பதில் சொன்னான்.

''முதல் தோஷம்: நீயே ஒரு பிச்சைக்காரன். பிச்சையெடுத்ததாம் பெருமாளு; அத்தைப் பறிச்சதாம் அனுமாருன்னு உன் பிச்சைக் காசிலேயிருந்து நான் ஐஸ் புரூட் வாங்கிச் சாப்பிடறது ஒரு தோஷம்! இரண்டாம் தோஷம் என்ன தெரியுமா? வெளிப்படையா கையேந்திப் பிச்சை எடுக்கிறவன் காசிலே கூட ஐஸ் புரூட் வாங்கிச் சாப்பிட்டுடலாம். ஆனால், பிறரை ஏமாற்றிப் பணம் பறிக்கிற பிச்சைக்காரனின் பணத்திலே ஐம்பது காசு ஐஸ் புரூட் என்ன... அஞ்சு காசு பொறி கடலை வாங்கிச் சாப்பிடறதும் தோஷம்! மகா தோஷம்! தோஷம்னா தெரியுமா? குற்றம்.''

செல்லப்பன் சொல்ல, மற்றவர்கள் விழிக்க, மாதவன் கொதித்தான்.

''அயோக்கியப் பயலே, நானாடா பிச்சைக்காரன்...?''

கையிலிருந்த, கால் பகுதி கூடக் கரையாத சாக்கோபாரைத் தூக்கியெறிந்து விட்டுச் செல்லப்பன் மீது ஆத்திரத்தோடு பாய்ந்தான் மாதவன். அருகே இருந்த நண்பர்கள், ஒரு கையிலிருந்த ஐஸ் புருட்டுக்கு ஒரு ஆபத்தும் நேராதபடி எச்சரிக்கையாக மறு கையால் மாதவனை இழுத்துப் பிடித்தனர்.

செல்லப்பன் அப்போதும் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. அவன் நா மட்டும் நிதானமாக அசைந்தது.

''நீ பிச்சைக்காரன்னு சொன்னா, நீயே பிச்சை எடுக்கறேன்னு அர்த்தமில்லே. ஒரு தொழிற்சாலைக்கு அப்பா முதலாளி. அவர் மகனை எப்படிக் கூப்பிடறாங்க? சின்ன முதலாளின்னுதானே? உங்கப்பா பிச்சைக்காரர்! வேணுமின்னா உன்னைச் சின்ன பிச்சைக்காரன்னு சொல்லலாம்.''

இதற்கு மேல் மாதவனால் பொறுக்க முடியவில்லை. தன்னைப் பிணைத்திருக்கும் சங்கிலியை அறுத்துக் கொண்டு, மனோகரா படத்தில் சிவாஜி பாய்வது போல, தன்னைத் தடுத்த கைகளை உதறி விட்டுச் செல்லப்பன் மீது பாய்ந்தான். மறு நிமிடம் இருவரும் மண்ணில் புரண்டனர்.

செல்லப்பன், மிக எளிதாக மாதவனைப் புரட்டித் தள்ளி விட்டு எழுந்தான். மாதவனும் அதே வேகத்தில் எழுந்து, செல்லப்பன் மீது மீண்டும் பாய முயன்றான்.

அதற்குள் செல்லப்பன், ''பொறு மாதவா! உங்கப்பா பிச்சைக்காரன் தான். இதை இப்பவே நிரூபிக்கிறேன். அதுக்குப் பின்னாடி அவர் பிச்சைக்காரர் இல்லேன்னு உன்னாலே சொல்ல முடிஞ்சா, நான் என் வார்த்தையை வாபஸ் வாங்கிக்கறேன். நீ எனக்கு நாலு அறை கொடுத்தாலும் வாங்கிக்கறேன்'' என்றான்.

''எங்கே, நிரூபி பார்க்கலாம்.''

செல்லப்பன், உடனே முன் போலவே நிதானமாகப் பேசத் தொடங்கினான். அவன் பேசப் பேச நாலரை அடி உயரமிருந்த மாதவன் நாலரை அங்குலம் உயரத்துக்குக் குன்றிப் போனான். மற்றவர்களை நிமிர்ந்து பார்க்கக் கூசி, கவிழ்ந்த தலையோடு, கலங்கிய கண்களோடு அங்கிருந்து மெதுவாக வெளியேறினான்.

கையில் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் பொட்டலத்துடன் வீட்டுக்குள் நுழையும்போதே, மயில்சாமி, ''மாதவா, கண்ணா, மாதவா'' என்று அழைத்தார்.

எப்போது மயில்சாமி வீட்டுக்குத் திரும்பினாலும் தன் மகனை அழைத்தபடிதான் உள்ளே நுழைவார். மகனிடம் அவர் கொண்ட பாசத்தைக் கண்டு பெருமைப்பட்ட மனைவி பவானியே, சமயங்களில் பொறாமைப்படுவதும் உண்டு. அந்த அளவு மயில்சாமி மகனிடம் அன்பு செலுத்தினார். மகனே முக்கியம் என்பதால், மனைவியை அலட்சியப்படுத்தவும் நேர்ந்ததுண்டு.

மயில்சாமி திரும்பி மனைவியைப் பார்த்து, ''மாதவன் எங்கே?'' என்று கேட்டார்.

ஒரு முறை பரிதி மாற் கலைஞர் சூரிய நாராயண சாஸ்திரியார் வகுப்பில் பாடம் நடத்தும் போது, ஒரு மாணவர் பாடத்தைக் கவனிக்காமல் வெளியில் எதையோ



மும்முரமாய்க் கவனித்துக் கொண்டிருந்தார். உடனே சாஸ்திரியார் அம்மாணவனை நோக்கி, ''எனது பாடத்தை விரும்பாத நீ இடமிருந்து எழுவாய், நீ வேறு சிந்தனையில் இருந்தமையால், உனக்கோ, பிறருக்கோ பயனிலை. இந்த வகுப்பில் உன்னால் செயல்படுபொருள் இல்லை. ஆதலால், நீ வகுப்பைவிட்டு வெளியேறு'' என்று நகைச்சுவையுடன் கூறினார்.

— எம். ஆனந்தன், வந்தவாசி.

''மாதவன் எங்கேயும் மறைஞ்சிடலே. மொட்டை மாடிக்குப் போயிருக்கான். நீங்க, இந்தக் காக்கிச் சட்டையை மாத்திக்கிட்டு ஒரு வாய் காப்பி குடிச்சிட்டு மாடிக்குப் போய் மகனைப் பார்க்கலாம்!

மனைவியின் சொற்களை அவர் என்றும் கேட்டதில்லை.

''மாதவனுக்கு மைசூர்பாகுன்னா பிடிக்கும். சுடச்சுட வாங்கிட்டு வந்திருக்கேன். அதைக் கொடுத்துட்டு வந்துடறேன்.''

பொட்டலத்துடன் மயில்சாமி மாடிக்குப் போனார்.

மொட்டை மாடியின் ஒரு மூலையில் சிமெண்ட் பெஞ்சு. அதில் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தான் மாதவன்.

மகனின் நிலை கண்டு திகைத்த மயில்சாமி, ''கண்ணா, உனக்கு ரொம்பவும் பிடிச்ச மைசூர்பாகு... கிருஷ்ணா ஸ்வீட்லேருந்து சுடச்சுட வாங்கிட்டு வந்திருக்கேன். சாப்பிடு...'' என்று வேண்டினார்.

''வேணாம்! மைசூர்பாகும் வேணாம்! ஒரு மண்ணும் வேணாம்... போ.''

சொல்லும்போதே மாதவனுக்கு அழுகை வந்து விட்டது.

''என்னடா ராஜா, ஏன் அழுவுறே? சொல்லு கண்ணா!''

பொட்டலத்தைப் பெஞ்சியில் வைத்து விட்டு, மகனைக் கட்டி அணைத்தபடி கேட்டார் மயில்சாமி.

''அப்பா... அப்பா... இன்னிக்கு ஒருத்தன் உங்களைப்பிச்சைக்காரர்னு சொல்லிட்டாம்பா. உங்க மகனான நானும் பிச்சைக்காரன்தானாம். சின்ன பிச்சைக்காரன்... ஜூனியர் பிச்சைக்காரன்.''

மாதவன் சொல்லி விட்டு அழுதான்.


மயில்சாமி கண்கள் சிவக்க, மீசை துடிக்க, எழுந்து நின்றார். ''மாதவா, என்னையும் உன்னையும் பிச்சைக்காரன்னு சொன்னவனைக் காட்டு. அவனைப் பின்னிடறேன்... பின்னி"

மாதவனால் அதை மறக்க முடியுமா?

மாதவனின் நண்பர்கள் சுற்றிலும் நிற்க, அன்று காலை வ. உ. சி. பூங்காவின் விளையாட்டு மைதானத்தில் செல்லப்பன் சொன்ன ஒவ்வொரு சொல்லும் அவன் காதில் அப்போதும் ஒலித்துக் கொண்டுதான் இருந்தன.

''ஒவ்வொருத்தரிடமும் அஞ்சு காசு, பத்துக் காசுன்னு ஒருத்தன் வாங்கிக் கொண்டா அவனைப் பிச்சைக்காரன்னுதானே, சொல்வோம்? மாதவா, உங்கப்பா ஒரு கண்டக்டர். அவர் என்ன செய்யறார்? ஒரு ரூபா கொடுத்து அறுபது காசு டிக்கெட் வாங்கினா, ஒரு இருபத்தைந்து காசும் ஒரு பத்துக் காசும் கொடுக்கிறார், அஞ்சு பைசா குறையுதேன்னு சுட்டிக்காட்டினா அந்தக் காசு இல்லேன்னு சொல்றார். தொண்ணூறு காசு டிக்கெட் வாங்கினா, மீதி பத்துக் காசு தர மாட்டார்!''

''நேத்து நான் உங்கப்பா இருந்த பஸ்ஸிலே வந்தேன். ஒரு ஏழைக் கிழவருக்கு அறுபது காசு டிக்கெட்டும் மீதி முப்பத்தைந்து காசும் கொடுத்தார். கிழவர் மீதி ஐஞ்சு காசு கேட்டா, இல்லேன்னு சொல்லிட்டார். கிழவர் விடலே. தம் மடியைத் துழாவி ஒரு ஐஞ்சு பைசா எடுத்துக் கொடுத்து. ''இந்தாங்க ஐஞ்சு பைசா. இதை வச்சுக்கிட்டுப் பத்துப் பைசா கொடுங்க'ன்னு கேட்டதுக்கு, அவர் மேலே எரிஞ்சி விழுந்தார். 'இருந்தா கொடுக்க மாட்டேன்? என்னமோ உங்க காசை மோசம் பண்ற மாதிரி நினைக்கிறீங்களே..? பத்துக் காசும் எங்கிட்டே இல்லேன்னு சொல்லி,



"என்ன சிலந்தியாரே, பொங்கல் வந்திட்டுதே, உங்க வீட்டில ஒட்டடையெல்லாம் அடிக்கிறதில்லையா...?''

— சா. காணிக்கைராஜ்,
கிடாரங்கொண்டான்.

மணியடிச்சு, வண்டியை நிறுத்தினார். 'இந்தா, உன் ஒரு ரூபாயை எடுத்துக்கிட்டு, டிக்கெட்டைக் கொடுத்துட்டு இறங்கு'ன்னு சொன்னார். கிழவர் 'ஐஞ்சு காசு வேணாங்க... நீங்க வண்டியை விடுங்க'ன்னு சொல்லிட்டார். இப்படி ஏழை பாழைகளையும் ஏமாத்தி, ஐஞ்சு காசும் பத்துக் காசும் எடுத்துக்குற உங்கப்பா பிச்சைக்காரரில்லையா? அவர் கையேந்திக் கேக்காம ஏமாத்திப் பிழைக்கிற பிச்சைக்காரர்! நீ ஜூனியர் பிச்சைக்காரன். அந்தப் பிச்சைக் காசிலே நீ வாங்கித் தர்ற ஐஸை நான் செத்தாலும் தொட மாட்டேன்.''

செல்லப்பன் சொன்னதைக் கண்ணீரும் கம்பலையுமாய்ச் சொல்லி முடித்த மாதவன், ''அப்பா, செல்லப்பன் சொன்னது உண்மைதானேப்பா?'' என்று கேட்டான்.

மயில்சாமி கலங்கிப் போனார்.

மயில்சாமி ஒரு பேருந்து நடத்துநர். நடத்துநர்கள் சில சமயம் 'ஐஞ்சு காசு இல்லே... சில்லறை வந்தா தரேங்கோ' என்று சொல்வதுண்டு. மயில்சாமி அந்த ரகம் இல்லை. அவர் நிச்சயம் ஐந்து காசு, பத்துக் காசு குறைத்துக் கொண்டுதான் தருவார். மீறிக் கேட்டால் குரைத்துத் தள்ளுவார்! பயணிகள் தரும் ஐந்து — பத்துக் காசுகளைக் கவனமாகப் பாக்கெட்டில் போட்டுக் கொள்வார். பணப் பையில் போட மாட்டார். யாராவது விடாக்கண்டனாய்ச் சண்டைக்கு நின்றால், ''இந்தாங்க பேக்... இதிலே ஐஞ்சு காசு இருந்தா எடுத்துக்கோங்கோ'' என்று காட்டுவார்.

நாளடைவில், நடத்துநர் மயில்சாமி என்றால், ஐந்து — பத்துக் காசு வராது என்று பயணிகளுக்கு உறுதியாகத் தெரிந்து விட்டது. இதனால் அவருக்கு ஒரு டிரிப்புக்கு ஐந்து ரூபாய்க்கு மேலே பணம் கிடைத்தது. இதை மேல் வருமானம் என்று மயில்சாமி நினைத்தாரே தவிர, 'பிச்சைக் காசு' என்று எண்ணிப் பார்க்கவே இல்லே.

''ஒவ்வொரு பயணியிடமும் அஞ்சு காசுன்னு வசூல் பண்றது.. பிச்சை தான். மாதவனோட சிநேகிதன் சொன்னது நிசந்தான்! என் பிச்சைக்காரப் பிழைப்பால் என் கண்மணி மாதவன் அவமானப்பட்டுட்டானே!''

மயில்சாமி கண்ணீர் வழிய மகனை மீண்டும் கட்டி அணைத்துக் கொண்டே பேசினார்.

''கண்ணா! கண்ணா! நாளையிலிருந்து நீ ஜூனியர் பிச்சைக்காரனில்லே! நானும் சீனியர் பிச்சைக்காரன் இல்லே! உன் மேலே சத்தியமா சொல்றேன்... பிச்சைத் தொழிலை இன்னியோடு விட்டுடறேன்.''

மறுநாள் மயில்சாமி இருந்த பேருந்தில் ஏறிய பயணிகளுக்கு ஒரே அதிர்ச்சி!

''கண்டக்டரையா, என்னங்க மீதி நாப்பது காசுக்கு ஒரு கால் ரூபாயும் ஒரு இருபது காசும் கொடுத்திருக்கிறீங்க? ஐஞ்சு காசு அதிகமா இருக்குங்க!''

இப்படிக் கேட்ட பயணிகளுக்கு, ''இருக்கட்டுமுங்க. எத்தனை நாளு நீங்க ஐஞ்சு காசு விட்டுக் கொடுத்திருக்கீங்க... இப்ப நான் விட்டுக் கொடுக்கறேன்னு வைச்சுக்கோங்களேன்'' என்று சொல்லும் போது மயில்சாமியின் மனம், ஏதோ ஒரு வகை நிறைவு கண்டது.



அவர்களுக்கும் அதுவே சுதந்திர தினம்

ஆகஸ்ட் 15 நமது சுதந்திர நாள்.. அதே நாளை இன்னொரு தேசம் தனது சுதந்திர தினமாகக் கொண்டாடுகிறது. அந்த தேசம் தென் கொரியா.

— மு. லட்சுமணன், தக்கோலம்.



பெரியவர் ஒருவர் தனது நிலத்தை விவசாயி ஒருவருக்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்தார். அந்த விவசாயி நல்ல உழைப்பாளி, அதோடு புத்திசாலி.

குத்தகை கொடுத்த நிலத்தின் பெரியவர் நிபந்தனை ஒன்றைச் சொன்னார். ''இந்த வருஷம் பூமியின் மேல் விளையுறதை எனக்குத் தந்து விடணும். பூமிக்கு கீழே விளையுறதை நீ எடுத்துக் கொள்'' என்று.

புத்திசாலியின் அறுவடை!

விவசாயிதான் புத்திசாலி ஆயிற்றே! சிந்தித்துத் தனக்குச் சாதகமான பயிரைப் பயிர் செய்திருந்தான்.

அறுவடை சமயம் வந்திருந்தார் நிலத்துப் பெரியவர். அவர் ஆச்சரியப்பட்டுப் போனார்!

புத்திசாலியான விவசாயி வேர்க்கடலை பயிர் செய்திருந்தான். பெரியவர் தனது நிபந்தனைப்படி பூமிக்கு மேல் உள்ள கொப்பு, கொழைகளைக் கொண்டு சென்றார்.

''இந்தத் தடவை நிபந்தனையில் ஒரு சின்னத் திருத்தம். இந்தத் தடவை பூமிக்கு மேல் விளையுறதை நீ எடுத்துக்கோ. பூமிக்குக் கீழ் விளையுறதை நான் எடுத்துக் கொள்கிறேன்'' என்று சொன்னார் நிலத்துப் பெரியவர்.

அந்தத் தடவையும் விவசாயி தனக்குச் சாதகமான 'பயிரை'யே பயிர் செய்திருந்தான்.

வழக்கம் போல் அறுவடை சமயம் நிலத்துப் பெரியவர் வந்தார்.

அவர் பிரமித்துப் போனார்!

விவசாயி 'நெற் பயிரை' பயிர் செய்திருந்தான். பெரியவர் வேறு வழியின்றித் தனது நிபந்தனைப்படி ஒன்றுக்கும் உதவாத வேரைப் பிடுங்கிச் சென்றார்.

இந்தத் தடவை விவசாயிடம் ஏமாறக் கூடாது என்ற எண்ணத்

ஆ.ய. அண்ணாதுரை



தோடு, விவசாயியைப் பார்த்து "நம்ம நிபந்தனையில் மறுபடியும் ஒரு சின்னத் திருத்தம். இந்தத் தடவை பூமிக்கு கீழே விளையறதையும், பூமிக்கு மேல் விளையறதையும் எனக்குத் தந்து விடு. இடைப்பட்ட பாகத்தை நீ எடுத்துக்கோ" என்று போகும் சமயம் சொன்னார்.

வழக்கம் போல அறுவடை சமயம். நிலத்துப் பெரியவர் வந்தார். விவசாயி செய்திருந்த பயிரினைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைத்தார்! விவசாயி 'கரும்பினை'ப் பயிர் செய்திருந்தான். பெரியவர் வேர்களையும் கரும்பின் மேல் பாகத்திலுள்ள கந்தாழைகளையும் கொண்டு செல்ல நேர்ந்தது.

போகும் சமயம் பெரியவர் சொன்னார். "இனிமேல் நமக்குள்ளே நிபந்தனையே வேண்டாம். விளைவதில் ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்ள வேண்டும்".

குரங்கும் மின்மினியும்!



ஒரு காட்டில் குரங்குக் கூட்டம் வசித்து வந்தது. குளிர்காலம் தொடங்கியதும், குரங்குகள் குளிரால் வாடிக் கொண்டிருந்தன.

இரவில் ஒரு மின்மினிப் பூச்சியைக் கண்டு 'நெருப்பு' என்று எண்ணிய குரங்குகள் அதைப் பிடித்துக் காய்ந்த புல்லையும், சருகுகளையும் அதன் மேல் போட்டு மூடி விட்டன. அதைச் சுற்றிலும் குளிர் காய்வதற்கு உட்கார்ந்து கொண்டு, கைகளையும் வயிற்றையும், மார்பையும் அதன் முன் காட்டியபடியே குளிர் காய்வதாக நினைத்து இன்புற்றுக் கொண்டிருந்தன.

அவற்றில் ஒரு குரங்கு குளிரில் மிகவும் வாடியது. சருகுக் குவியலின் மீது கவனம் செலுத்தி, தீப்பற்றிக் கொள்வதற்காக 'பூ பூ' என்று வாயால் ஊதிக் கொண்டிருந்தது.

அந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த ரிஷிமுகன் என்னும் பறவை, மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தது. அதற்கு ஆயுள் நெருங்கி விட்டது போலும்.

குரங்கை நோக்கி, "தோழா! வீணாக ஏன் சிரமப்படுகிறாய்? அது நெருப்பு அல்ல! மின்மினிப் பூச்சிதான். எவ்வளவுதான் நீ சிரமப்பட்டு ஊதியபோதிலும், அதிலிருந்து நெருப்பு உண்டாகாது' என்று சொல்லியது.

பறவை சொன்னதைக் காதில் வாங்காமல், குரங்கு ஊதிக் கொண்டே இருந்தது. பலமுறை சொல்லியும் குரங்கு ஊதுவதை நிறுத்தவே இல்லை. பறவையும் விடவில்லை. மறுபடியும் அந்தப் பறவை குரங்கின் காது அருகில் போய் உரக்கக் கத்தியது. குரங்கு உடனே அதைப் பிடித்து, அருகில் இருந்த கல்லின் மீது ஓங்கி அறைந்தது. அவ்வளவு தான்! பறவையின் வாழ்வு முடிந்தது.

மூடருக்குச் சொல்லும் புத்திமதி தனக்கே ஆபத்தை விளைவிக்கும்.

— ந. நவமணி, நல்லாலம்.



கோழி கூவுற நேரமாச்சு! இன்னும் என்ன தூக்கம், எழுந்திரு!
அம்மா! உடம்பு குணமாகிற வரைக்கும் டாக்டர் தினமும் என்னை கோழிமுட்டை, சாப்பிடச் சொன்னாரு!...
ஐயா, பேண்ட் போட்டுண்டு போறவரே! கண்ணு தெரியாதவன், ஏதாவது தாமம் பண்ணுங்க...
காசில்லாம சாப்பிட்டா மூணுபடி தானே அரைக்கச் சொல்லுவீங்க!... ஏன், அஞ்சு படி அரைக்கச் சொல்றீங்க?...
இப்ப நீங்க சாப்பிட்டது ஆனியனும்ல!
ஜோக்...
எஸ். குருமூர்த்தி
நீ மளிகைக் கடைக்காரர் பையன்னு வாத்தியாருக்கு எப்படித் தெரிஞ்சுது?
பரீட்சையில் "குலோத்துங்கன்னு எழுதறதுக்கு "கிலோதுங்கன்னு எழுதிட்டேன்.
காலங்கார்த்தால குளிக்கணும்னா ரொம்பவும் குளிருதடா!
ஸ்வெட்டர் போட்டுக்கிட்டு குளிச்சிடறதுதானேடா!
மொரப்பூர் அ. கஸ்சாத்
பாளை. பாலன்

நாய் தந்த புதையல்!

ஒரு கிராமத்தில் வயதான ஒரு விவசாயியும், அவர் மனைவியும் இருந்தனர். அவனுடைய நிலம் மிகவும் சிறியது. ஆகையால், அவனால் சேமிக்க முடியவில்லை. ஆனாலும், அவன் தன் எளிய நிலையைக் கண்டு மனம் தளரவில்லை. வருஷம் முழுவதும் அவன் சுறுசுறுப்பாக உழைத்தான். கோடையில் நெல் சாகுபடி செய்தான். குளிர் காலத்தில் மலைக்குப் போய் விறகு வெட்டிக்கொண்டுவந்தான். இயன்றவரை மற்றவர்களுக்கும் உதவினான்.

அவர்களுக்குக் குழந்தை இல்லை. அதனால், அவர்கள் மிகவும் பிரியமாக ஒரு நாயை வளர்த்தனர். அந்த நாயை 'அழகு' என்றோ, 'உயர்ந்த இனம்' என்றோ சொல்ல முடியாது.

அந்த நாய்க்குக் குள்ள உருவம். கூரிய காதுகள். கரடுமுரடான முகம். நீண்ட கரிய வால். பழுப்பு நிற உடம்பு. நெற்றியிலும், உடலிலும் கொஞ்சம் வெள்ளை. அந்த நாயின் கவர்ச்சியான ஒரே அம்சம், தவிட்டு நிறமான அதன் அகன்ற கண்கள் தான். பொருள் பொதிந்த அதன் பார்வையைக்கொண்டே அது என்ன நினைக்கிறது என்பதை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்வார்கள். அதற்குப் பசிக்கிறதா — இல்லையா, அது சந்தோஷமாக இருக்கிறதா — இல்லையா, அதற்கு நடக்கப் போக வேண்டுமா — வேண்டாமா — இம்மாதிரிப் பல விஷயங்களை அதன் பார்வையைக் கொண்டே அவர்கள் சொல்லி விடுவார்கள். தன் எஜமானன் வயலில் வேலை செய்யும் போது, அந்த நாய் பொறுமையோடு அவனைப் பார்த்துக் கொண்டிருக்கும். அவன் மலைக்குப் போனால், அதுவும் கூடவே துணையாகப் போகும்.

அவர்களுடைய இன்னொரு பொழுதுபோக்கு இயற்கையை ரசிப்பது. பூச்செடிகளையும், பூ, மரங்களையும் அவர்கள் வளர்த்தார்கள். செர்ரி மலர்கள் என்றால் அவர்களுக்குக் கொள்ளைப் பிரியம். வசந்த காலத்தில் கொத்துக் கொத்தாகப் பூக்கும் அந்தச் சின்னச் சிவப்பு நிற செர்ரி மலர்களின் அழகில் அவர்கள் தங்கள் மனத்தைப் பறிகொடுப்பார்கள்.

ஒரு நாள் உழவனும், மனைவியும் மலைப் பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தனர். சூரியன் மேற்கில் மறையும் அழகையும், அந்த ஒளியில் பள்ளத்தாக்கில் இருந்த செர்ரி மரப் பூக்கள் ஜொலிப்பதையும் ரசிப்பதற்' காகவே அவர்கள் மலை உச்சிக்குப் போய்க் கொண்டிருந்தனர். வழக்கம் போல் நாயும் அவர்களுடன் போனது.

மலைப்பாதையின் ஓரங்களில் புற்கள் உயரமாக முளைத்திருந்தன. அந்தப் புற்களின் இடையில்

மூலம் : ஜப்பான் நாட்டுக் கதை

தமிழில்: வாமனன்



வசிக்கும் முயல்களை மோப்பம் பிடித்துக் கொண்டே நாய் முன்னால் ஓடியது. திடீரென நாய் ஒரு புதரிலிருந்து வெளிப்பட்டது. பாதையில் சிறிது நின்றது. பிறகு, வட்டமிட்டுக் கொண்டே பரபரப்பாகக் குரைத்தது.

அவர்கள் நாயை நோக்கி விரைந்தனர்.

நாய் குரைத்துக் கொண்டும், பின்னங்கால்களால் மண்ணைக் கிளறிக் கொண்டும் ஒரு பள்ளம் தோண்டியது. எஜமானின் ஆடையைப் பற்றி, அவனை அந்தப் பள்ளத்திற்கு இழுத்து வந்தது. அந்தப் பள்ளத்தில் தங்கக் காசு நிறைந்த பானைப் புதையல் ஒன்று பாதி வெளிப்பட்டு, அவர்களை வரவேற்றது!

புதையலை வெளியே எடுத்தனர். சந்தோஷமாக வீடு திரும்பினர். நாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டனர். அது வாலை ஆட்டியது. அவர்களுடைய கையை நக்கியது. சந்தோஷத்தில் அதன் தவிட்டு நிறக் கண்கள் சுடர்விட்டுப் பிரகாசித்தன.

ஏழை உழவன் பெரிய செல்வந்தன் ஆனான்! புதையலின் ஒரு பகுதியைத் தன் நாய்க்காக அன்போடு செலவழித்தான். இன்னொரு பகுதியை அந்தக் கிராமத்தில் இருந்த ஏழை எளியவர்களின் நலனுக்காகச் செலவழித்தான். அவன் மனைவியும் உதவி செய்தாள். நாளடைவில் அந்த உழவன் மேலும் மேலும் நிலம் வாங்கினான். வேலையின்றி வாடும் இளைஞர்களுக்கு வேலை தந்தான். நல்ல சம்பளமும் கொடுத்தான். 'நல்ல எஜமான்' என்றும், 'ஏழைகளின் நண்பன்' என்றும் ஊரார் உழவனை மதித்தனர்.

உழவனுக்கும், அவன் மனைவிக்கும் விறகு வெட்டுவதற்காக மலைப் பாதைக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. மற்ற வேலைகள் பெருகின. ஆகவே, நாயைக் காலாற நடக்க வைக்க அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை.

சுமார் ஒரு வருஷம் ஆகியது. திடீரென பிற்பகலில் ஒருநாள் அந்த உழவனைப் பார்ப்பதற்காக அவனு



''கேப்டன் சாப்...! அட்டென்ஷன்ல கையைக் காலை அசைக்கக் கூடாது தான். ஒத்துக்கிறேன். ஆனால், காதையும் அசைக்கக் கூடாதுங்கறீங்களே...! நடக்கிற காரியமா... இது...?''

— ச. காணிக்கைராஜ், இடாரங்கொண்டான்.

டைய அடுத்த வீட்டுக்காரன் வந்தான். அவன் மகாப் பொல்லாதவன். கிராமத்தில் அவனுக்கு நல்ல பெயரே கிடையாது. இதுவரையில் அவன் உழவன் வீட்டிற்கு வந்ததே இல்லை.

அன்று உழவன் வெளியே போயிருந்தான். மனைவி மட்டும் இருந்தாள். மனைவி அவனை வரவேற்றுத் தேநீர் கொடுத்தாள். அவன் முதலில் பொதுவான விஷயங்களைப் பற்றி மிகவும் இனிமையாகப் பேசினான். அப்போது தோட்டத்திலிருந்த நாய் உள்ளே வந்தது. நீண்ட நேரம் அதை அன்போடு தடவிக் கொடுத்தான். ''எல்லாம் புதிராக இருக்கிறதே?'' என்று கண்களாலேயே எஜமானியிடம் பேசியது நாய்... மனைவி அதைக் கவனித்தாள்.

தான் வந்த நோக்கத்தை அவன் சொன்னான். ''எனக்கு நாய் என்றால் ரொம்பப் பிடிக்கும். இவ்வளவு சீக்கிரமாக என்னிடம் இது எப்படி ஒட்டிக் கொண்டு விட்டது பாருங்கள்! உங்களுக்கு இதை வெளியே அழைத்துப்போக நேரமில்லை. வீட்டிலேயே அடைந்து கிடக்கிறது. பாவம்! எனக்கும் வீட்டில் யாரும் இல்லை. நேரமே போகவில்லை. உங்களுக்குப் பதிலாக இந்த நாயை நான் வெளியே அழைத்துப் போய் வருகிறேனே?'' என்று கனிவான குரலில் அந்த வீட்டுக்காரன் கேட்டான்.

உழவனின் மனைவிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ''அடுத்த வீட்டுக்காரன் இவ்வளவு நல்லவனாகிவிட்டானே!'' என்று ஆச்சரியப்பட்டாள். இருட்டுவதற்குள் நாயைத் திருப்பி அழைத்து வருவதாக அவன் உறுதியோடு சொன்னான். அவள் சம்மதித்தாள். ஆனால், நாயின் கண்களில் பிரதிபலித்த பய உணர்வை அவள் கவனிக்கத் தவறிவிட்டாள்.

மாலையில் உழவன் வீடு திரும்பினான். நடந்தவற்றை அறிந்தான். ''நாய் சந்தோஷமாகப் போய்விட்டுத் திரும்பி வந்தால் சரி,'' என்று அவன் நினைத்தான். ஆனால், அந்த வீட்டுக்காரனுக்கு ஊரில் நல்ல பெயர் இல்லையே என்ற சந்தேகமும் மனத்தில் எழுந்தது.

பொழுது சாய்ந்தது. இரவு வந்தது. இருள் சூழ்ந்தது. அடுத்த வீட்டுக்காரனும் வரவில்லை. நாயும் வரவில்லை.

உழவன் அடுத்த வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டிக் கேட்டான்.

''கிழவரே! உன் நாய் போன வருஷம் உடிக்கு ஒரு புதையலைத் தேடிக் கொடுத்தது இல்லையா? எனக்கும் அப்படிப்பட்ட ஒரு புதையல் வேண்டும் என்பதற்காகத்தான் உன் நாயை மலைப் பாதைக்கு அழைத்துப் போனேன். ஆனால், 'அந்தச் 'சனியன்' என்னோடு வரமாட்டேன் என்று சண்டித்தனம் செய்தது. நன்றாக அடி கொடுத்து, அதைத் தரதரவென்று இழுத்துப்போனேன். பாதையில் ஒரு பள்ளம் தோண்டச் சொன்னேன். என்ன கிடைத்தது தெரியுமா? கரிக்கட்டிதான் கிடைத்தது! அதனால், மண்வெட்டியால் ஒரு போடு போட்டு அதைக் கொன்றேன்!'' என்று ஆத்திரத்தோடு விவரம் சொன்னான் அந்தக் கல்நெஞ்சன்.

அருமை நாய் இறந்து விட்டதைக் கேட்டுக் கணவனும் மனைவியும் துடிதுடித்தனர். தங்கள் அன்பு நாய்க்காக அன்று இரவு முழுவதும் அவர்கள் கண்ணீர் வடித்தனர்.

பொழுது புலர்ந்தது. இருவரும் மலைப் பாதையில் விரைந்தனர். நாயின் பழுப்பு நிற உடல், சாலை ஓரமாகப் பரிதாபமாக விழுந்து கிடந்



தது. ஒரு வெள்ளைப் பட்டுத் துணியால் சுற்றி, அதைக் கவனமாக வீட்டிற்கு எடுத்துச் சென்றனர். தோட்டத்திலிருந்த செர்ரி மரத்தடியில், ஒரு குழி வெட்டி, நறுமணப் பூக்களைப் பரப்பி, நன்றியுள்ள நாயை அழுது கொண்டே அதில் புதைத்தனர்.

நாட்கள் நகர்ந்தன. உழவனும், மனைவியும் நாயின் கல்லறையைப் புனிதமாகப் போற்றி வந்தனர்.

ஊரில் உணவுப் பஞ்சம் வந்தது. பசியால் வாடும் மக்களுக்கு உணவும், பொருளும் கொடுத்து இருவரும் காத்து வந்தனர்.

நாயின் கல்லறைக்கு அருகில் இருந்த செர்ரி மரம் வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. நாயை அடக்கம் செய்து, ஒரு வருஷம் ஆவதற்குள், அந்த மரம் மூன்று பங்கு பெரிதாக வளர்ந்து விட்டது! அதன் ஒரு கிளை நீண்டு கொண்டே போய் அவர்களுடைய வரவேற்பு அறைக்குக் குடை பிடித்த மாதிரி விரிந்திருந்தது.

தங்களுடைய நல்ல நாயின் ஆன்மா அந்தக் கிளையில் தங்கியிருப்பதாகவும், அதனால்தான் அது அதி வேகமாக வளர்ந்து வருவதாகவும் அவர்கள் நம்பினர். ஆனாலும் அந்தக் கிளை அவர்களுடைய வீட்டுச் சுவரை இடித்து விடுமோ என்ற பயமும் அவர்களுக்குத் தோன்றியது. ஆகவே, அதைக் கொண்டு நாயின் நினைவுச் சின்னமாக ஓர் உரலும், உலக்கையும் செய்வதென உழவன் தீர்மானித்தான். மனைவி ஆமோதித்தாள். உரலும் உலக்கையும் தயாராயின.

ஊரில் உணவுப் பஞ்சம் அதிகரித்தது. காசு கொடுத்தால் கூட, ஊரில் அரிசி கிடைக்கவில்லை. உழவனிடம் காசு இருந்தாலும், அதைக் கொண்டு, பசியால் வாடுபவர்களுக்கு உணவு வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என வருந்தினான்.

தங்களிடம் இருந்த கடைசி ஒரு பிடி அரிசியை உழவனின் மனைவி உரலில் போட்டாள். மறைந்த தங்கள் அருமை நாயை நினைத்துக் கொண்டே அவள் அதை இடித்தாள். அவள் இடிக்க இடிக்க, உரலில் இருந்த மாவு அதிகரித்துக் கொண்டே போயிற்று!



உழவனுக்கும், மனைவிக்கும் ஆச்சர்யம் தாங்க முடியவில்லை. இருவரும் மாறி, மாறி இரவு முழுவதும் அந்த அரிசியை இடித்தனர். அதிலிருந்து மாவு பெருகிப் பெருகி அறையை நிரப்பியது!

காலையில் அந்த வயதான உழவனும் மனைவியும் மாவை எடுத்துக் கொண்டு ஊருக்குள் சென்றனர். பட்டினியால் அவதிப்படும் மக்களுக்கெல்லாம் அதைப் பகிர்ந்து அளித்தனர். அந்தப் பனிக்காலம் முழுவதும் பஞ்சம் தாண்டவமாடியது. எனினும், உழவனும் மனைவியும் தங்கள் கையாலேயே இடித்துக் கிடைத்த அரிசி மாவைத் தாராளமாக வழங்கி வந்ததால், பஞ்சத்தின் கடுமை தணிந்தது.

ஒரு நாள் காலையில் அடுத்த வீட்டுக்காரன் உழவனின் வாசல் முன்பு வந்து நின்றான். தங்கள்



அருமை நாயை இரக்கமின்றிக் கொலை செய்த அவனை அவர்களால் இயல்பான மரியாதையுடன் வரவேற்க முடியவில்லை.

"நல்லவர்களே! நாயின் கல்லறைக்கு அருகிலிருந்த மரத்திலிருந்து நீங்கள் உரல் செய்ததைக் கேள்விப்பட்டேன். நீங்கள் இடித்தால், அதிலிருந்து மாவு தொடர்ந்து வருகிறதாமே! என் கெட்ட புத்தியினால் உங்கள் நாயை நான் கொன்றுவிட்டேன். இப்போது உங்களிடம் உணவு யாசிப்பதற்கு எனக்கு வெட்கமாக இருக்கிறது," என்று சொல்லி அடுத்த வீட்டுக்காரன் தலைகுனிந்து நின்றான்.

"நானே மாவு இடித்துத் தருகிறேன். அதை வாங்கிக் கொண்டு போகலாம்," என்றாள் மனைவி.

"நீங்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும்? கொஞ்ச நேரத்திற்கு உரலையும் உலக்கையையும் இரவலாகக் கொடுங்கள். நானே மாவை இடித்துக்கொண்டு உடனே திருப்பிக் கொடுக்கிறேன்," என்று கேட்டான் அடுத்த வீட்டுக்காரன். உரலை எடுத்துச் செல்ல அவர்கள் அனுமதித்தனர்.

சிறிது நேரமானதும் அடுத்த வீட்டுக்காரன் தோட்டத்து மூலையில் தீமூட்டி எதையோ எரித்துக் கொண்டிருந்தான்.

உழவன் சென்று பார்த்தான்.

"உன் உரலையும் உலக்கையையும் தான் எரித்துக் கொண்டிருக்கிறேன்," என்று எரிச்சலோடு சொன்னான் அடுத்த வீட்டுக்காரன்.

"ஐயோ, ஊருக்கே உணவளித்த அதை எரிக்க உனக்கு எப்படி மனம் வந்தது?" என்று பதறினான் உழவன்.

"உன் அருமை உரலில் என்னிடம் மிச்சம் மீதி இருந்த அரிசியைக் கொட்டி, நானே இடித்தேன். என்ன ஆச்சு தெரியுமா? எல்லாம் கூழாங் கற்களாக மாறின! நான் இடிக்க, இடிக்க, கற்கள் வளர்ந்து, வளர்ந்து

பெரிதாகிக் கொண்டே போயின. மட்டமான அந்த நாய்தான் இதற்குக் காரணம். அது உயிரோடு வாழ்ந்த போதும் சரி, செத்த பிறகும் சரி — அதற்கு என்னைப் பிடிக்கவில்லை. என்னால் அதை இரண்டாவது முறை கொல்ல முடியாதல்லவா? அதனால்தான் அதன் ஞாபகச் சின்னமான உரலை எரித்து விட்டேன்'' என்று அனலாக எரிந்து விளக்கினான்.

உழவன் அதிர்ந்து போனான். ஊர் மக்கள் பட்டினியால் வருந்துவார்களே என்று கண்ணீர் விட்டான்.

எரிந்த உரலின் சாம்பலை மூட்டை கட்டிக் கொண்டு திரும்பினான் உழவன். நேராகச் செர்ரி மரத்தடிக்குச் சென்றான். நாயின் கல்லறை மீது கொஞ்சம் சாம்பலைத் தூவினான். நினைவுச் சின்னமாக விளங்கிய உரலைக் காப்பாற்ற முடியாவிட்டாலும், அதன் சாம்பலையாவது காப்பாற்ற முடிந்ததே என்று திருப்தி அடைந்தான்.

காற்று வீசியது. கல்லறையில் இருந்த சாம்பல் பறந்து சென்று, மரத்தின் மேல் பறந்தது. உடனே, மாய மந்திரம் போல அந்தச் செர்ரி மரம் கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்கியது!

''வசந்தகாலம் வருவதற்கு முன்னாலேயே மரம் பூத்து விட்டதே! இதுவும் நாய் செய்யும் நன்மை தானோ?'' என்று ஆச்சரியத்தோடு மனைவி உழவனிடம் கேட்டாள். பிறகுதான் அவன் நடந்தவற்றை அவளிடம் சொன்னான். சாம்பலின் மகிமையால்தான் செர்ரி மரம் பூத்துள்ளதையும் விளக்கினான். அழகிய செர்ரி மலர்களைப் பார்த்துப் பார்த்து அவர்கள் பரவசம் அடைந்தனர்.

தாங்கள் அடைந்த அந்த மகிழ்ச்சியை ஊரிலுள்ள மற்றவர்களும் அடைய வேண்டும் என உழவன் எண்ணினான். ஆகவே, கிராமத்திலிருந்த செர்ரி மரங்களின் மீது, அந்த மாயச் சாம்பலைத் தூவினான். முதிர்ந்த மரங்கள், காய்ந்த மரங்கள், கருகிய மரங்கள் — என்று எல்லா மரங்கள் மீதும் அவன் அந்தச் சாம்பலை வாரி இறைத்தான். எல்லா மரங்களும் பூத்துக் குலுங்கின! கனிகளைச் சொரிந்தன! பஞ்சம் பறந்தோடியது! மக்கள் உழவனை வாயார, மனமார வாழ்த்தினர்.

உழவனின் தன்னலமற்ற தொண்டின் புகழ் எங்கும் பரவியது. அரசர் அவரைக் காண விரும்பி அழைப்பு அனுப்பினார்!

வந்த அழைப்பை, பொறாமை பிடித்த அடுத்த வீட்டுக்காரன் கேட்டான். அரசனின் அழைப்பு தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஏங்கினான்.


உழவன் தூவும் போது மரங்களின் கீழே சிந்திய சாம்பலைத் திரட்டிக் கொண்டு நேராக அரண்மனைக்குப் போனான்.

அரசர் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். அடுத்த வீட்டுக்காரன் அவருக்கு வணக்கம் சொன்னான். ''உழவனுக்குவயது அதிகமாகிவிட்டது. அவனால் இங்கே வர முடியவில்லை. என்னிடமும் அந்த மாயச் சாம்பல் இருக்கிறது. அதை இந்தச் சிறிய மரங்களின் மேல் தூவுகிறேன். எவ்வளவு வேகமாக அவை பூக்கப் போகின்றன பாருங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே அவன் அருகிலிருந்த சில பழ மரங்களின் மேல் சாம்பலைத் தூவினான்.

அந்தப் பூ மரங்கள் வளரவும் இல்லை; துளிர்க்கவும் இல்லை; பூக்கவும் இல்லை. பதிலாக நிறம் மாறின. காய்ந்து, கருகிப் போயின!

அரசர் கோபமடைந்தார். பொய் சொல்லி ஏமாற்றியதற்கும், மரங்களை அழித்த குற்றத்திற்கும் அவனுக்குத் தண்டனை கொடுக்கும்படி உத்தரவிட்டார்.


நாயின் அன்பும், நாயை நேசித்துத் தங்களுக்காக வாழாத உழவர் தம்பதியின் அன்பும் கலந்திருந்ததாலேயே அந்தச் சாதாரணச் சாம்பல் அவ்வளவு அற்புதங்களை விளைவித்தது என்ற உண்மையை அதற்குப் பிறகே அந்தப் பக்கத்து வீட்டுக்காரன் உணர்ந்தான்.



மந்திரதேசத்து அரசன் அசுவபதி, மனைவி மாளவியுடன் கானகம் சென்று வேள்வி செய்தான்...
அக்னியிலிருந்து சாவித்திரி தேவி தோன்றி...
பலகுமாரர்களையும் உலகம் புகழும் ஒரு பெண் குழந்தையையும் பெறுவீர்கள்!
யாகம் முடியப்போகிறது; சாவித்திரி தேவியைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்...
சாவித்திரி அம்மனை வேண்டிப் பெற்ற மகளுக்கு சாவித்திரி என்றே பெயர் சூட்டி...
அன்பைப் பொழிந்தார்கள்...
ஆண்டுகள் செல்ல...
எவ்வளவு நன்றாக வீணை வாசிக்கிறாள்... படிப்பிலும் அபார தேர்ச்சி...
சாவித்திரி தேவி அருளால் பிறந்த பெண் அல்லவா!
சாவித்திரி
கதை: ஆனந்தி
படம்: விஜு


மேலும் சில வருஷங்கள் உருண்டோட...
சாவித்திரிக்குத் திருமணம் செய்ய வேண்டுமே... குழந்தை நம்மைப் பிரிந்து விடுவாளே...
அதற்கென்ன செய்வது? அந்த வருத்தத்தை நாம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்... ஆனால்..
ஆனால் என்ன?
இவள் அழகுக்கும் அறிவாற்றலுக்கும் ஏற்ற கணவனை எங்கே தேடுவது...?
கவலைப்படாதே; சாவித்திரி யாரைத் தேர்ந்தெடுக்கிறாளோ, அவருக்கே மாலையிடட்டும். அவளைத் தீர்த்த யாத்திரை அனுப்புவோம்...
சாவித்திரிக்கு விடைகொடுத்து அனுப்பினார்கள்...
சாவித்திரி புண்ணிய நதிகளில் நீராடி, அம்மன் அருளால் மனத்துக்கு இசைந்த மணாளனை அடைவாய்...
சாவித்திரி அவ்வப்போது செய்தி அனுப்பக் குதிரை வீரர்கள் உடன் வந்தார்கள்.
அதோ, அந்தக் கானகத்தைக் கடந்து போக வேண்டும்...



காட்டினூடே
போகும்போது...
இந்த வனத்தில்தான்
கௌதம முனிவரின்
ஆசிரமம் இருக்கிறது.
அமைதி குலைக்காமல்
நடந்து கொள்வோம்...
உடன் வந்த வீரர்கள்
சற்று ஓய்வெடுக்க
சாவித்திரி தோழியுடன்...
அடடா! அந்த மான்
கூட்டத்தைப் பார்...
என்ன அழகு...
அரண்யத்தின்
அழகுகளைப் பார்த்துக்
கொண்டே நடந்தபோது...
விறகு வெட்டிக்கொண்டிருக்கும் அவர்
யார்? முனிகுமாரர் போல் தோன்றினாலும்
ராஜ களை ததும்புகிறதே!
சாவித்திரியும் தோழியும் நெருங்கி வர...
நீங்கள்
யார்?
நாங்கள் மந்திர தேசத்திலிருந்து
வருகிறோம். இவள் இளவரசி
சாவித்திரி... நீங்கள்...?
நான் சத்தியவான். என்
தந்தை சாளுவ தேச
மன்னர். எதிரிகள் நாட்டைக்
கைப்பற்றிக் கொள்ளவே
நாங்கள் காட்டில்
வசிக்கிறோம். என் தாய்க்கும்
பார்வையற்ற தந்தைக்கும்
பணிவிடை செய்து
வருகிறேன்.


மணவாளனைத் தேடும் என் பயணம் முடிந்ததும் நான் பெற்றோரிடம் திரும்புகிறேன்...
சாவித்திரி திரும்பிச் சென்று விட, சத்தியவான்...
என்னைப்போல் நாடு, நகரம் இழந்த இளவரசன், சாவித்திரியை எப்படி அடைய முடியும்...?
சாவித்திரி, மந்திர தேசம் திரும்பிய சில காலத்தில் மன்னரைக் காண நாரதர் வந்தார்...
என்ன, சாவித்திரிக்குத் திருமணம் நிச்சயித்து விட்டீர்களா?
இல்லை சுவாமி; சாவித்திரி தன் மனதில் யாரையோ நினைத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் சொல்லக் கூச்சப் படுகிறாள். அவள் தோழியும் மௌனம் சாதிக்கிறாள்...
நான் விசாரிக்கிறேன்...
நாரதர் தனிமையில் சாவித்திரியைச் சந்தித்து...
என்னிடம் கவலைப்படாமல் சொல்... உன் சார்பில் நான் உன் பெற்றோரிடம் பேசுகிறேன்...
நான் தயங்குவதற்குக் காரணம் இருக்கிறது சுவாமி...


நான் காதலிப்பவர் இளவரசர் ஆனாலும் நாடிழந்து காட்டில் வாழ்கிறார். அப்படிப்பட்டவருக்கு என்னைக் கொடுக்க என் பெற்றோர் விரும்புவார்களா?
என்னது, சத்தியவானையா மணக்க விரும்புகிறாய்?
ஆம், சுவாமி!
நாரதர், மீண்டும் சாவித்திரியின் பெற்றோரிடம் சென்றார்....
அசுவபதி! சாளுவ நாட்டு இளவரசன் சாவித்திரிக்கு சகல விதத்திலும் ஏற்றவன்...
ஹும், விறகு வெட்டுபவனையா சாவித்திரி தேர்ந்தெடுக்க வேண்டும்?
அரசி! அப்படி நினைக்க வேண்டாம். தவமே தனம். சத்தியவான் கல்வியில், குணத்தில் வீரத்தில், அடக்கத்தில் தோற்றத்தில் ஈடு இணையற்றவன்... ஆனால்...
ஆனால்...?
ஆனால் என்ன, சுவாமி?
இன்னும் ஓராண்டு காலம் தான் அவன் உயிர் வாழ்வான்!


திகைப்பு நீங்கியபின் அசுவபதி சாவித்திரியை அழைத்து...
முக்காலமும் உணர்ந்த முனிவர் கூறுவது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்க எங்களால் முடியாது.
அம்மா! அப்பா! நான் அவரையே கணவராக நினைத்து விட்டேன். இன்னொருவரை மனத்தாலும் எண்ண மாட்டேன்!
சாவித்திரியின் மன உறுதியை மாற்ற முடியாத அசுவபதி, மனைவி, மகளுடன் கானகத்துக்குப் புறப்பட்டார்...
காட்டில் அசுவபதி...
முனிவர்களே, வணங்குகிறேன். சாளுவ தேச அரசர் துயுமத்சேனரைக் காண வந்தேன்...
ரிஷிகள், பார்வையற்ற துயுமத்சேனரிடமும் அவர் மனைவியிடமும் அசுவபதியை அழைத்துச் சென்றனர்.
சாளுவ ராஜனே! என் மகள் சாவித்திரியைத் தாங்கள் மருமகளாக ஏற்க வேண்டும்...


துயுமத்சேனர் துணுக்குற்று...
நான் நாடிழந்து காட்டில் வாழ்பவன்...
என் மகள் அரசபோகத்தை விரும்பவில்லை ; சத்தியவானுக்கு மாலையிடவே விரும்புகிறாள்.
அப்போது நாரதர் தோன்றி...
நாராயண... நாராயண... துயுமத்சேனரே! தயக்கம் வேண்டாம்... சத்தியவானுக்கு சாவித்திரி சகல விதத்திலும் ஏற்றவளே!
முனிவர்கள் ஹோமம் வளர்க்க சத்தியவான்-சாவித்திரி திருமணம் அடக்கமாக நடந்தது...
அன்றிரவு...
இந்த சத்தியவான் பாக்கிய வானும் கூட... அரண்மனை வாழ்வைத் துறந்து எனக்காகக் காட்டுக்கு வந்து கஷ்டப்படுகிறாயே..
உங்களுடன் இருப்பதே இன்பம்...
சாவித்திரி ஆசிரம வாசி களுக்கும் பலவிதங்களிலும் உதவினாள்...
ஏனம்மா இப்படி சிரமப் படுகிறாய்...?
மனப்பூர்வமாகச் செய்யும் எந்தப் பணியும் இன்பமே தரும், அம்மா.


நாரதர் யமலோகம் சென்றார்...
வருக! வருக!
நாராயண! அப்பனே! நீ எல்லாரையும் ஏற்றத் தாழ்வு பார்க்காமல் சமமாக நடத்துபவன் என்பதால்தானே யமதர்மராஜன் என்று பெயர் பெற்றாய்?
ஆம், நாரதரே! அற்பப் பூச்சியானாலும், பேரரசனானாலும் எனக்கு ஒன்றுதான். அவர்கள் ஆயுள் முடிந்துவிட்டால் பாசத்தை வீசி விடுவேன்!
யாருமே தப்ப முடியாதா?
முடியவே முடியாது!
நான் சொல்கிறேன், பக்தர்களிடமும் கற்புடைய பெண்களிடமும் நீ தோற்று விடுவாய் என்று!
ஏதேது, எனக்குச் சவால் விடுகிறீரா?
இல்லை, உனது சமதர்மத்துக்கு ஒரு சோதனை வர இருக்கிறது என்கிறேன்!
சந்திப்பேன்! பயமென்ன?
நாரதர் பூலோகம் வந்தார்...
சுவாமி! தங்களை நினைத்தேன். வந்து விட்டீர்கள்... மாங்கல்யம் பெருக வழி சொல்லுங்கள்!...


சாவித்திரி தேவியை நம்பி விரதம் இரு. உன் பயம் எல்லாம் நீங்கும்.
நாரதர் உபதேசப்படி மாதந்தோறும் திரியோதசி முதல் பிரதமை வரை சாவித்திரி உண்ணாமலும் உறங்காமலும் விரதம் இருந்தாள்.
பெற்றோர் அதிசயித்தனர்...
இத்தனை இளம் வயதில் இவ்வளவு கடுமையான விரதமா?
எடுத்த விரதத்தைத் தொடர சாவித்திரி தேவி இவளுக்குச் சக்தி அளிக்கட்டும்.
சாவித்திரி விரத பூஜை -களைத் தொடர்ந்தாள்...
ஓம் காயத்ரியை நம: ஓம் சாவித்ரியை நம: ஓம் பார்வதியை நம:
விரத காலம் முடிந்து சாவித்திரி பெரியோர்களை வணங்கினாள்...
எல்லா நலன்களும் பெருகட்டும்!



அன்று சத்தியவான் வழக்கம் போல் காய் கனிகள் பறித்து வரப் புறப்பட்டான்...
சாவித்திரி, போய் வருகிறேன்...
இன்று நானும் உங்களுடன் வருகிறேன்...
சாவித்திரி முன்னால் நடந்தாள்...
விரதம் முடிந்து, களைத்திருக்கிறாய். எதற்கு வீண் சிரமம்?
ஓராண்டு காலம் முடியப் போகிறது... இவரைத் தனியே விடக் கூடாது...
அம்பிகே! என் மணாளனைக் காத்தருள்!
சாவித்திரி இன்று பரபரப்புடன் இருக்கிறாள்... என்ன காரணமோ?
காய் கனிகளைப் பறித்தார்கள்...
என்னைக் கணவனாக அடைந்ததால் வெறும் கனிகளையும் கிழங்குகளையும் நீ சாப்பிட வேண்டியிருக்கிறது.
இப்படி பேசுவார்களா? உங்களைப் பதியாக அடையாமலிருந்தால் அரண்மனை வாழ்வும் அரச போகமும் கூட சுவைக்காதே! மனம் விரும்பிய மணாளனை அடைவதைவிடப் பெரிய பாக்கியம் ஏது?



மாலதிக் கொடியிலிருந்து மலர்களைப் பறித்துத் தந்தான் சத்தியவான்.
ஆசிரமம் திரும்பி மாலை தொடுத்து... ...உங்களுக்குப் போடுகிறேன்!
சாவித்திரி! கூடை நிரம்பி விட்டது. கொஞ்சம் விறகும் வெட்டிக் கொண்டு திரும்பலாம்....
பட்டுப்போன மரங்களை சத்தியவான் வெட்டும்போது திடீரென்று...
சாவித்திரி! எனக்குத் தலை சுற்றுகிறது... நெஞ்சு வலிக்கிறது...
ஒன்றுமில்லை... வெயிலின் கடுமை... இப்படி நிழலில் இளைப்பாறலாம்...
சாவித்திரி மடியில் தலை வைத்துப் படுத்தான் சத்தியவான்...


அப்போது யமதூதர்கள் வந்து...
சத்தியவானின் உயிர் பிரிய வேண்டிய நேரம் வந்து விட்டது...
ஆமாம்... வா, அவன் உயிரைப் பறித்துப் போவோம்...
சாவித்திரி நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களிலிருந்து எழுந்த கனல்...
ஐயோ தகிக்கிறதே!
இவள் சாமானியப் பெண் அல்ல... தபஸ்வினி!
பார்வதிதேவியின் அருள் பெற்றிருக்கிறாள். இவளை நெருங்கவே முடியாத போது, இவள் மடியில் படுத்திருக்கும் சத்தியவானின் உயிரைப் பறிப்பது எப்படி?
யமதூதர்கள் கணப்போதில் யமலோகம் திரும்பிச் சென்று...
யமதர்ம ராஜனே! நாங்கள் தோற்றுப் போனோம். சத்தியவானை அணுகவே முடியவில்லை!
என்னது!
யமனின் கட்டளையை மீறும் உயிரும் உலகில் இருக்க முடியுமா? இதோ நானே போகிறேன்!


யமன் சத்தியவானை நெருங்க...
தர்மராஜனே! தேவியைப் பூஜித்து விரதம் இருந்தேன். என் கணவரைக் கொண்டு செல்ல வேண்டாம்.
யமன் திடுக்கிட்டான்...
பெண்ணே! என்னை மானுடர் யாரும் பார்க்க முடியாது. நீ கற்பரசியான -தால் இந்த அற்புதம் நிகழ்கிறது.
எளிய அழகே வடிவான சாவித்திரியின் சோகம் யமனையும் உருக்கியது...
பெண்ணே! 'காலன்' என்பது என் பெயர். சத்தியவானின் காலம் முடிந்து விட்டது. என் கடமையை நான் செய்ய வேண்டும்.
யமன் பாசக்கயிற்றை வீச, சத்தியவானின் உயிர் பிரிந்தது.
யமதர்மராஜனை சாவித்திரி பின் தொடர்ந்தாள்.


யமன் நின்றான்...
இதென்ன அதிசயம்! உன் கற்பின் சக்தியால் என்னை விண்ணிலும் பின்தொடர் -கிறாயே!...
யமன் மனம் இளகி பரிவுடன்...
சாவித்திரி! நீ என்னைப் பின்தொடர்வதை அனுமதிக்க முடியாது... திரும்பிப் போ! உன் கணவனுடைய உயிரைத் தவிர வேறு வரம் கேள், தருகிறேன்.
சாவித்திரி சற்று யோசித்து...
என் மாமனாருக்குக் கண்கள் தெரிய வேண்டும்...
வரம் தந்தேன்!
கரிய இருள் சூழ்ந்தது... அப்படியும் சாவித்திரி யமனைப் பின்தொடர...
ஆச்சர்யம்! இந்த இருட்டிலும் உன்னால் என்னைப் பார்க்க முடிகிறதே!....
நான் கற்புக்கரசி என்பது உண்மையானால் என் கணவரை நான் பின்தொடர்ந்து வருவதைத் தடுக்காதீர்கள்.
சாவித்திரி! வேறுவரம் கேள்.


என் மாமனாருக்கு அவரது ராஜ்யம் திரும்பக் கிடைக்க வேண்டும்.
அப்படியே வரம் தந்தேன்!...
அக்னி ஆற்றைக் கடந்து சென்றான் யமன்...
அம்பிகே! நீயே துணை!
சாவித்திரி அக்னி ஆற்றையும் கடந்தாள்.
பராசக்தி... பார்வதி... சாவித்திரி... காயத்ரி...
அக்கரையில்...
அட! இன்னுமா என்னைப் பின் தொடர்கிறாய்! யமனையே சோதிக்கிறாயே!.. சரி, இன்னும் ஒரு வரம் கேள். அப்புறம் திரும்பிப் போய்விட வேண்டும்!
தர்மராஜனே! என்னை 'அம்மா' என்று அழைக்கக் குழந்தைகள் வேண்டும்.
வரம் தந்தேன்! போய்வா.



யோசிக்காமல்
வரம் தந்து விட்டு
முன்னேறினான்
யமன்.
யமலோக வாசல்கள்
திறந்தன...
யமதர்ம ராஜனின் சபை...
பெண்ணே!
இன்னுமா
என்னைப்
பின் தொடர்கிறாய்!
என் கணவர் உயிரைப் பறித்த
பிறகு, என்னை 'அம்மா' என்று
அழைக்கப் பிள்ளைகள் வரம்
தந்தால் அந்தக் குழந்தைகள் யாரை
'அப்பா' என்று அழைப்பார்கள்?
யமன் திடுக்கிட்டான்...
பெண்ணே! உன் கற்பினாலும்
பக்தியாலும் மட்டுமின்றி
உன் அறிவாலும் என்னை
வென்று விட்டாய். உன்
கணவன் உயிரைத்
தந்தேன்!
யமனை இருவரும் வணங்க...
சாவித்திரியின்
புகழ் இந்த
உலகம் உள்ள
அளவும் நிலைத்து
நிற்கும்!
துயுமத்சேனர்
சத்தியவானுக்கு
முடி சூட்டினார்...
சாவித்திரி!
உன் பக்தியின்
சிறப்பால் நான்
பார்வையையும்
சாளுவ
ராஜ்யத்தையும்
திரும்பப் பெற்றேன்.
'சாவித்திரி நோன்பு' இருக்கும்
எல்லாப் பெண்களுக்கும் இதே
போல் விரும்பும் நலன்கள்
பெருகட்டும்!



15

ஒரு மரத்துப்

வெளியிலே இலேசாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது. வகுப்பிலே மாணவிகள் 'கேரம்' விளையாடிக் கொண்டிருந்தார்கள். உடற்பயிற்சி ஆசிரியை இருவருமே அன்றைக்குப் பள்ளிக்கு வரவில்லை. எனவே, பவித்ரா நான்கு கேரம்போர்டுகளைக் கொண்டு வந்து வகுப்புக்குள்ளேயே சிலரை விளையாடிக் கொண்டிருக்கும்படி செய்தாள். மாணவிகள் சிலர் விளையாட்டுத் திடலிலே ஓடிப் பிடித்து ஆடிக் கொண்டிருந்தார்கள்.

ரம்யா, வடிவழகி, எஸ்தர் மூவரும் பவித்ராவோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மீனாவும் ஷஹிதாவும் தனியாக ஒரு பெஞ்சில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''என்ன ஆச்சு... உனக்கும் மீனாவுக்கும்? ஒரு வாரம் ஆகப் போகுது. வடதுருவம் தென்துருவம் மாதிரி மூலைக்கு ஒருத்தரா போயிட்டீங்க?'' என்று கேட்டாள் ரம்யா.

''ஏய் ரம்யா! நீயும் பாதி திவ்யா ஆயிட்டே. பத்தாவது முறையா என்னையே கேட்டிருக்கியே... நீ அவ்ளை இப்படிக் கேட்டியா?'' என்றாள் பவித்ரா.

''எவளை?''

''மீனாவைத்தாண்டி!''

''கேட்காமல் இருப்பேனா? நீயாவது அவள் பெயரை வாயாலே உச்சரிக்கிறே! மீனா... உன் பெயரைச் சொல்லக் கூட மாட்டேங்கிறா...! என்ன ஆச்சு உங்களுக்கு...?'' என்று மீண்டும் கேட்டாள் ரம்யா.

''இவள்தான் சொல்ல விரும்பலையே... அப்புறம் ஏன் சும்மா தொந்தரவு பண்ணிக்கிட்டிருக்கே?'' என்று ரம்யாவைக் கடந்து கொண்டே பவித்ராவின் முகத்தைப் பார்த்தாள் எஸ்தர். அவளுக்கும் அந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்வதில் உள்ளூர நிறைய ஆர்வம் இருப்பதை உணர்ந்து கொண்டாள் பவித்ரா.

''நீங்க ரெண்டு பேருமே பேச மாட்டேங்கறீங்க. ஆனால், அந்தத் திவ்யா ஏதேதோ கதை கதையாக் கட்டி விட்றா? அவள் சொல்றதை நம்பவும் முடியல்லே. நம்பாமலிருக்கவும் முடியல்லே. உன் சொந்தக்காரி. சும்மாவா சொல்லுவா?'' என்றாள் ரம்யா.

''சும்மா சொல்வாளோ... சுமந்துகிட்டு சொல்வாளோ? இது ஒரு பெரிய விஷயமா உங்களுக்கு? வேற விஷயம் பேசுவோம்...'' என்று ஆரம்பித்தாள் பவித்ரா.

''விருப்பமில்லேன்னா விடேன்டி. ரெண்டு பேரும் பேசிக்கிடறது இல்லையே தவிர, ஏசிக்கிட்டு இல்லையே..! விடு! பவித்ரா நீ வேற விஷயத்துக்கு வா!'' என்று கேட்டாள் எஸ்தர். பவித்ராவுக்குச் சிரிப்பே வந்து விட்டது.

நம்ம ஸ்கூல்லே கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டின்னு நடத்தறோமே, சரியான முறையிலேதான் செய்யறமா?" என்று வினவினாள் பவித்ரா.


''ஆமாம்... வேண்டப்பட்ட மாணவிகளுக்கு நிறைய மார்க் போட்டுப் பரிசு கொடுக்கறாங்க'' என்றாள் ரம்யா.

''சேச்சே! நான் அதைச் சொல்லல்லே. போட்டிகள் நடக்கிற விதத்தை மாற்றி அமைக்கணுமின்னு நான் நினைக்கிறேன்''

''எப்படி?''

''எல்லாப் போட்டிகளிலும் தலைப்புகளைச் சில தினங்களுக்கு முன்னாலேயே சொல்லிடறாங்க. அதனாலே வீட்டிலே விஷயம் தெரிந்தவர்கள் இருந்தால் நல்ல முறையிலே தயாரித்துக் கொடுத்து, மனப்பாடம் செய்ய வச்சி, பேசவோ எழுதவோ

றவைகள்



செய்திடறாங்க. நெட்டுரு போட்டு அப்படியே கக்கிடறாங்க. இதிலே, போட்டியிலே கலந்து கொள்கிற மாணவிகள் திறமை எங்கேயிருக்கு? போட்டி அவங்க வீட்டிலேயிருக்கிற பெரியவர்களுக்கு வைக்கிற மாதிரியில்லே ஆகிறது?'' என்று பவித்ரா சொல்லிக் கொண்டிருந்த போது, மீனா அங்கே இருமிக் கொண்டிருந்தாள். அப்படி அவள் பலமுறை இருமியதை ஏற்கெனவே கவனித்திருந்தாள் பவித்ரா.

''என்னடி! மீனாவுக்கு உடம்பு சரியில்லையா? இருமிக்கிட்டிருக்காளே?'' என்று எஸ்தரைக் கேட்டாள்.

''ஏண்டி... எங்களைக் கேட்டுக்கிட்டு? நீயேதான் நேரா போய்க் கேளேன்?'' என்று உசுப்பினாள் எஸ்தர்.

''அன்னைக்கு இவள் மயக்கம் போட்டு விழுந்திட்டாளே. அது தெரிஞ்சி மறுநாள் மீனா என்கிட்டே கேட்டாள். ஏன்... பவித்ரா மயக்கம் போட்டா? உடம்பு சரியில்லையா... அப்படின்னு!'' என்றாள் ரம்யா.

''ஏண்டி இப்படி வேஷம் போட்டு எங்களை ஏமாத்தறீங்க...'' என்றாள் எஸ்தர்.

''உங்களை யாரும் ஏ ம ா ற் ற வில்லை'' என்றாள் பவித்ரா வேதனையை அடக்கிக் கொண்டு.

''உங்களுக்குள் ஏ...மாற்றம்...? அதாவது ஒரு மாற்றம்...'' என்றாள் ரம்யா.

''அறுக்க ஆரம்பிச்சிட்டாடி! முடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டியது தான்'' என்று சிரித்தாள் எஸ்தர்.

''ஆமாம்... அன்றைக்கு என்ன திடீரென்று உனக்கு மயக்கம்?'' என்று அவளே கேட்டாள்.

''அன்றைக்குக் காலையிலே சரியா டிஃபன் சாப்பிடல்லே. மத்தியானம் சாப்பாடு கொண்டு வந்திருந்தும், சாப்பிடவே இல்லை.''

''ஏன்?''

''தெரியாது, உனக்கு? மத்தியான இடைவேளையில்தான் மீனா வீட்டுக்குப் போயிருந்தாளே? அதனாலே சாப்பிடல்லே...''

''நேரம் இல்லையா?''

''மனசு சரியில்லே. அதோடு... திவ்யா மீனாவைப் பற்றித் தாறுமாறாப் பேசிக்கிட்டு என் எதிரே வந்தாள். கோபம் கோபமாக வந்தது. கை கால் எல்லாம் நடுங்கிற மாதிரி இருந்தது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். மயங்கி விழுந்திருக்கேன்'' என்றாள் பவித்ரா.

வெளியே இலேசாக ஆரம்பித்த காற்று, கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தைக் கூட்டிப் பலமாக வீசியது. வகுப்புக்குள்ளும் தெரிந்தது. டெஸ்கின் மேலிருந்த புத்தகங்களின் ஏடுகள் 'பரபர'வென்று பறந்தன. சில சரிந்தன. கரும்பலகை கூடச் சிறிது ஆடிவிட்டு, ஸ்டேன்டோடு கீழே விழுந்து விட்டது.

சில நொடிகளில் பலத்த காற்றோடு தூறலும் சேர்ந்து கொண்டது. வெளியே திடலில் விளையாடிக் கொண்டிருந்த பெண்கள் விரைவாக அவரவர் வகுப்புக்கு ஓடினார்கள்.

பவித்ரா இருந்த வகுப்புக்கு வெளியே, பழைய தென்னங்கீற்று ஓலைகள் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு வந்து விழுந்தன. கீழே நான்கு வகுப்பு அறைகளிருந்த அந்த மொட்டை மாடிக் கட்டிடத்தின் மேலே, தென்னை ஓலைகளால் கூரை வேயப்பட்டு மூங்கிலால் கட்டப்பட்ட ஐந்து வகுப்பு அறைகள் இருந்தன.

பூவை அமுதன்

அதில் ஆறாவது ஏழாவது வகுப்பு களின் சில பிரிவுகள் இருந்தன.

நிமிடத்துக்கு நிமிடம் காற்றின் வேக மும் அதிகரித்தது. தூரலும் பலத்த மழையாகக் கொட்டத் தொடங்கும் போல் தெரிந்தது. மேலேயிருந்து ஓலைகள் நிறைய பிய்ந்து விழுந்து கொண்டிருந்தன. சிறிய வகுப்புகளி லிருந்து மாணவிகள் கூச்சலிடும் சத்தம் அதிகமாகக் கேட்டது.

ஆசிரியைகள் சில பேர் மாடிப் படிக்கட்டு வழியே மேலே ஓடினார் கள். பவித்ராவும் வகுப்பை விட்டு வெளியே வந்தாள். எஸ்தர், மீனா முதலியோரும் வெளியே ஓடி வந்து மேலே நிமிர்ந்து பார்த்தார்கள்.

மேலேயிருநத தென்னங்கீற்றுக் கொட்டகை, காற்றின் வேகத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது. பவித் ராவும் மாடிக்கு ஓடி அங்கிருந்த மாணவிகளைப் பத்திரமாகக் கீழே அனுப்பி வைக்கும் பணியில், ஆசிரியைகளோடு கலந்து கொண் டாள். அவளைத் தொடர்ந்து மீனா வும் எஸ்தரும் மற்றும் சிலரும் படிக் கட்டு அருகே சென்று மாணவிகளை வேகவேகமாக இறக்கி விட முயன்ற னர்.

பள்ளிப் பியூன்களும் வேலைக் காரர்களும் கூச்சலிட்டு ஓடி வர, தலைமை ஆசிரியையும் மழையில் நனைந்தபடி அந்தக் கட்டடத்தை நோக்கிக் கூவிக் கொண்டு ஓடி வந் தார்.

அவர்கள் எல்லோரும் பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தபோதே, அந்தக் கொட்டகை, தூண்கள் முறிந்து கீழே சாய்ந்தது. ஆசிரியை எழில்வதனி ஓலைகளைப் பிரித்துக் கொண்டு வெளியே தலையைக் காட்டினார். அவர் நெற்றியிலிருந்து இரத்தம் வழிந்தது. அதைக் கையால் அழுத்திக் கொண்டே, "பவித்ரா! பவித்ரா!" என்று கூவினார். பவித் ராவின் காதில் குரல் கேட்கவில்லை.

"பவித்ரா! பவித்ரா!! ஐயோ ஓடி வாங்க... பவித்ரா உள்ளே மாட்டிக் கிட்டாள்" என்று கதறினார் எழில் வதனி. தலைமை ஆசிரியையும் மற்ற வர்களும் தாவிக் கொண்டு ஓடினார் கள் மேலே.

பவித்ரா, மேலேயிருந்து சரிந்து விழுந்த கூரைக்கடியிலே சுருண்டு விழுந்திருந்தாள். அவள் மண்டை யிலிருந்து இரத்தம் கொட்டிக்கொண் டிருந்தது!

ஓலைகளையும் கழிகளையும் விலக்கி விட்டு அவளைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினார்கள். இரத்தம் வழிவது நிற்கவில்லை.

சாலைக்கு ஓடிச் சென்று, ஒரு காரை நிறுத்தி உள்ளே கொண்டு வந்தரர்கள். தலைமை ஆசிரியையும், நெற்றியில் அடிபட்ட நிலையில் தமிழாசிரியையும் எஸ்தர்மேரியும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். திவ்யாவும் ஓடி வந்து காரில் ஏறிக் கொண்டாள். மீனாவும் வேறு சில மாணவிகளும் வ்ழியும் கண்ணீரோடு அந்தக் கார் சென்ற வழியே ஓடினார் கள்.

பவித்ராவை அருகிலிருந்த ஒரு தனியார் மருத்துவமனைக்கு அழைத் துச் சென்றார்கள். மீனாவுக்கு வேதனை தாங்க முடியவில்லை.

"பவித்ரா, பவித்ரா!" என்று கேவிக் கேவி அழுதாள். பக்கத்தி லிருந்த ரம்யா அவளைத் தேற்றிக் கொண்டிருந்தாள். அவள் கண்களும் மாலை மாலையாகக் கண்ணீரைச் சொறிந்தன. திடீரென்று எதோ நினைவுக்கு வந்தவள் போல் மீனா, "ரம்யா! பக்கத்தில்தானே பவித்ரா வீடு! நீ ஓடிப் போய் சேதியைச் சொல்லு" என்றாள்.

"நீயும் வாயேன்!" என்று கண்ணீ ரைத் துடைத்துக்கொண்டே அழைத் தாள் ரம்யா.

"இல்லை ரம்யா! என்னாலே இங் கிருந்து ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாது. நான் பவித்ராவைப் பார்க் கணும். இங்கே இவள் பக்கத்திலேயே இருக்கணும்" என்று விம்மினாள் மீனா.

ரம்யா அங்கிருந்து விரைந்து சென் றாள். மீனா வேதனையே உருவாக, பவித்ரா கிடத்தி வைக்கப்பட்டிருந்த அவசர மருத்துவ அறைக்கு வெளியே மற்ற ஆசிரியைகளோடு கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தாள்.

"பவித்ராவின் பெற்றோர்களுக் குச் சொல்லி அனுப்புங்க. அவங்க



ஃபோன் நெம்பர் தெரியுமா?'' என்று கேட்டார் தலைமை ஆசிரியை, பக்கத்திலிருந்த ஆசிரியையிடம்.

''எனக்குத் 'தெரியும்' மேடம்!'' என்று அந்த டெலிஃபோன் நெம்பரைக் கூறி விட்டு, ''மேடம்! பவித்ராவின் ப்ளட் குரூப் கூட எனக்குத் தெரியும்'' என்றாள் மீனா.

''ஓ! நீ பவித்ரா ஃபிரண்டில்லே?'' என்று அவள் தலையை அன்பாகத் தடவி விட்டார் தலைமை ஆசிரியை.

''ஆமாம்... உன் 'பிளட் குரூப்' என்னன்னு தெரியுமா?'' என்று அவளை வினவினார்.

''தெரியாதுங்க மேடம்! என் பிளட் குரூப்பைத் தெரிந்து கொள்ள எனக்குச் சந்தர்ப்பமே வாய்க்கலே'' என்றாள் மீனா.

''டீச்சர்! முதல் வேலையாக, நம் ஸ்கூல்லே எல்லாப் பிள்ளைகளுக்கும் 'பிளட் குரூப்' தெரிஞ்சாகணும். அதுக்கு ஸ்கூல்லேயே நாமே கூட செய்யறதுக்கு வழி பண்ணலாம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''எச். எம். எங்கே, எச். எம். எங்கே?'' என்று பரபரப்புடன் கேட்டுக் கொண்டு வெளியே ஓடி வந்தார் ஒரு நர்ஸ்.

''என்னம்மா என்னம்மா! நான் இதோ இருக்கேன். என்ன விஷயம்?" என்று பதட்டப்பட்டவராக முன்னே சென்றார் தலைமை ஆசிரியை.

''மண்டையிலே அடிபட்டு, பிளட் வெளியேறிட்டிருக்கு. முதல்லே 'பிளட்' ஏத்தணும்.. வாங்க... வாங்க" என்று அழைத்தார் நர்ஸ்.

''வாங்கவாங்க... என் இரத்தத்தை எடுத்துக்குங்க'' என்று விரைந்து அவர் பின்னே சென்றார் எச். எம்.

''யாரு ரத்தம் பொருந்துதோ... பார்க்கணுமே!''

''என் ரத்தம் எடுத்துக்குங்கோ!'' என்று மீனாவும் எச். எம். பின்னே ஓடினாள்.

''பார்ப்போம்... இன்னும் இரண்டொருத்தர் கூட வரலாமே?'' என்று அழைத்தார் நர்ஸ்.

ஆசிரியைகளும் மாணவிகளும் போட்டியிட்டு விரைந்து சென்றார்கள். திவ்யா ஒதுங்கி நின்றாள். அதைக் கவனித்தாள் வடிவழகி.

''திவ்யா! நான் ரொம்பவும் வீக்காயிருக்கேன். எனக்கு ஜாண்டீஸ் வந்து இன்னும் சரியா குணமாச்சா இல்லையான்னு கூடத் தெரியாத நிலைமை.. நீ போயேன்... சொந்தக்காரப் பொண்ணு. உன் ரத்தம் பவித்ராவுக்குப் பொருந்தினாலும் பொருந்தும்!'' என்றாள் வடிவழகி.

''ஐயய்யோ...: எனக்கு ரத்தமின்னா ஒரே பயம்மா. அது மட்டுமில்லே... நான் இதுவரைக்கும் ஒரு சின்ன ஊசி கூடப் போட்டுக்கிட்டது கிடையாது. இப்ப, பாட்டில் நிறைய ரத்தம் எடுத்துக்கிட்டா... என்னாலே தாங்க முடியுமா...? என் வீட்டிலே கேட்காம நான் எதையும் செய்யறதில்லே...?'' என்று பயந்து ஒதுங்கிக் கொண்டாள் திவ்யா.

''சரியான பொண்ணு நீ... சொந்தம் பந்தமுன்னு சொல்லிக்கிட்டிருப்பே... அந்த மீனா கூட அவள் பழகறதையே வெறுத்துக்கிட்டிருந்தே... இப்ப பார்... அவள் ரத்தம் கொடுக்கப் போயிருக்கா!'' என்றாள் வடிவழகி.

''எல்லாம் சரிதான். நீ ஏன் சுலபமா சொல்ல மாட்டே...? உனக்கு ஜாண்டீஸ் ஒரு சாக்கு...! என் பயம் எனக்கு?'' என்று திவ்யா சொல்லிக் கொண்டிருந்த போது நெற்றியில் கட்டுடன் எழில்வதனி அங்கே வந்தார்.

சிறிது நேரத்தில் ரம்யா பவித்ராவின் பெற்றோருடன் அந்த மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தாள்

''சிவிங்கியாரே, வெளவால் அண்ணாச்சி வீட்டிற்குப் போனீரே...? வீடு ரொம்ப ஒட்டடையாயிருந்திச்சா...?''

''அதெப்படி உனக்குத் தெரிஞ்சது!''

''போகும் போது ஒட்டகச் சிவிங்கியாராகப் போனீர்... வரும் போது ஒட்டடைச் சிவிங்கியாராக வந்துள்ளீரே!''

— சா. காணிக்கைராஜ், இடாரங்கொண்டான்.

சேதியறிந்து மீனாவின் அம்மா கமலம்மாளும் பதறியடித்துக் கொண்டு அங்கே ஓடி வந்தாள். பவித்ரா இருந்த அறைக்குள்ளே போக முயன்றார்கள்.

அவர்களை நர்சுக்கள் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

எல்லோரும் பதைபதைப்புடன் வெளியேயிருந்தார்கள். தலைமை ஆசிரியை டாக்டர் அறையிலிருந்து வெளியே வந்து, பவித்ராவின் பெற்றோர் அருகே சென்றார்.

''நான் எத்தனையோ முறை மானேஜ்மெண்ட்டுக்கு நேரிலும் ரிப்போர்ட் பண்ணினேன். எழுத்து மூலமும் கேட்டுக்கிட்டிருக்கேன். மெத்தை மேலே கொட்டகை கட்ட வேண்டாம். அப்படிக் கட்டினாலும் இரண்டு வருஷத்துக்கு ஒருமுறையாவது கம்ப்ளீட்டா மாற்றிப் புதுசாக் கட்டியாகணும், அப்பதான்னு தலை தலையாய் அடித்துக் கொண்டேன். நிர்வாகம் கேட்கவே இல்லை. வெறும் ஓலைகளை மட்டும் மாற்றிக்கிட்டிருந்தாங்க. கம்புகள் உளுத்துப் போய் காற்று மழையிலே முறிஞ்சி விழுந்திருக்கு. நல்லவேளை உயிர்ச் சேதம் ஏதுமில்லாமல் ஆண்டவன் தான் என் குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கார். அக்கறை காட்டாமல் அசட்டையாயிருக்கும் பள்ளி நிர்வாகிகளுக்கு இனிமேலாவது புத்தி வந்தால் நல்லது. பவித்ராவுக்கு ஆபத்து ஒண்ணும் இல்லை. பயப்படாதீங்க. கொஞ்சம் ரத்தம் ஏத்தணும்.. அவள் குரூப் ரத்தம் எங்களிலே யாருக்குமே இல்லை...'' என்று கூறிக் கண் கலங்கினார் மிஸஸ் ஜெயலட்சுமி கிருஷ்ணமூர்த்தி.

''ஐயய்யோ! எங்க ரத்தத்தை எடுத்துக்குங்க!'' என்று பதறினார்கள் உதயாவும் முத்துமணியும்.

''மேடம்! என் ரத்தம் சேருமான்னு கேளுங்க!'' என்று விம்மினாள் கமலம்மாள்.

''உங்க யாரு ரத்தமும் தேவையில்லை! அதோ... அவள் சிநேகிதி மீனா ரத்தம் கொடுத்துக்கிட்டிருக்கா. சீக்கிரத்திலே பவித்ரா கண்ணைத் திறந்திடுவாள்'' என்று அங்கு வந்து கூறினாள் எழில்வதனி.

அப்போதுதான் சைக்கிளில் வேகமாக அங்கு வந்து சேர்ந்தான் சந்தோஷ்.

''டாடி! பவித்ராவுக்கு என்ன ஆச்சு! தலையில் அடி பட்டுதாமே..?'' என்று பரபரப்புடனும் கவலையுடனும் கேட்டான் சந்தோஷ்.

''என்ன தம்பீ! நீ ஏன் இந்த மழையிலே சைக்கிள்ளே வந்தே? உனக்கு உடம்புக்குக் காய்ச்சலாயிருக்கவே தானே உன்கிட்டே ஒரு வார்த்தைக் கூட சொல்லாமே வந்தோம்?'' என்று பரிவுடன் கேட்டாள் உதயா.

''இல்லே... மம்மி! நான் விழிப்பு வந்த பார்த்தால் உங்களை யாரையும் காணோம். இந்நேரமாகியும பவித்ராவையும் காணோம். அதற்கப்புறம் தான் தோட்டக்காரரைக் கேட்டேன். அவர்தான் சொன்னார் எல்லாம்! நான் இப்போ... பவித்ராவைப் பார்க்கணுமே!'' என்று துடித்தான் சந்தோஷ்.

''இன்னும் கொஞ்ச நேரத்திலே நாம் எல்லோருமே பவித்ராவைப் பார்க்கலாம். பயப்படும்படியா ஒன்றும் இல்லை'' என்றார் தலைமை ஆசிரியை. அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக இலேசாகச் சிரிக்க முயன்றார். ஆனால், அவரால் முடியவில்லை. அவர் மனம் மிகவும் வேதனைப்பட்டது.

பவித்ரா, எவ்வளவு கெட்டிக்காரி...! கெட்டிக்காரத்தனத்தோடு நல்ல குணங்களும் சுறுசுறுப்பும்



நிறைந்தவளாக இருக்கிறாளே...! பள்ளியிலே அவளுக்கு எவ்வளவு நல்ல பெயர்? இப்படிப்பட்ட அறிவும் ஆற்றலும் மிகுந்த பெண்களோடு இந்த நாட்டுக்கு வருங்காலத்திலே எவ்வளவு நன்மைகள் ஏற்படும்? யார் செய்த புண்ணியமோ... உயிருக்கு ஆபத்து இல்லாமல் தப்பித்தாள்! ஒரு வேளை... அநியாயமாக அவளுக்கு அப்படி ஏதாவது நடந்து விட்டிருந்தால்... அப்பப்பா... எத்தனை பேருக்குக் கஷ்டம்... எவ்வளவு பெரிய நஷ்டம்!

நினைத்து நினைத்து நொந்து நொந்து சோர்ந்து போனார் தலைமை ஆசிரியை. மற்ற ஆசிரியைகளும் அந்த மருத்துவமனையிலேயே சோகமே உருவாகச் சமைந்து அமர்ந்திருந்தார்கள்.

மருத்துவமனைக்கு வந்து இரண்டு மணி நேரம் ஆகியிருக்கும். எல்லோருடைய அகங்களிலிருந்தும் முகங்களிலிருந்தும் வேதனை மெள்ள மெள்ள விலகிக் கொண்டிருந்தது.

"இனி ஒரு ஆபத்தும் இல்லை. பவித்ரா கண் விழித்திருக்கிறாள். எல்லோரும் உள்ளே போய் தொந்தரவு செய்ய வேண்டாம். முக்கியமானவங்க சில பேர் போய்ப் பார்க்கலாம்" என்று அனுமதித்தார் டாக்டர்.

உதயாவும் முத்துமணியும் ஓட்டமும் நடையுமாக உள்ளே சென்றார்கள். சந்தோஷ் கமலம்மாளையும் அழைத்துக்கொண்டு பின்னே சென்றான். அவர்களைப் பின்தொடர்ந்த மற்ற மாணவிகளையும் ஆசிரியைகளையும் எச். எம். தடுத்து நிறுத்தி விட்டார்.

உள்ளே சென்ற உதயா, பவித்ராவின் பக்கத்து படுக்கையில் மீனாவும் சோர்வோடு படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். தன் மகளுக்கு இரத்தம் கொடுத்த அவளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, தன் இரு கரங்களையும் கூப்பினாள். அதை விரும்பாதவளாகவும் அவர்கள் துயரத்தில் பங்கு கொள்பவளாகவும் தோன்றிய மீனா, படுக்கையை விட்டு எழுந்திருக்க முயன்றாள்.

பவித்ரா, தன் பெற்றோருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த சந்தோஷையும் கமலம்மாளையும் நோக்கி, இலேசாகப் புன்முறுவல் செய்தாள். சந்தோஷ் அவள் அருகே சென்றான். அவன் கரத்தை ஒரு கரத்தால் பாசத்தோடு பற்றிக் கொண்டு, மறு கரத்தால் நேசத்தோடு மீனாவைச் சுட்டிக் காட்டினாள். அப்போது மீனா, அழுகையும் ஆனந்தமும் போட்டியிட்ட நிலையில் பொங்கி வந்த தன் கண்ணீரை வழித்து விட்டுக் கொண்டிருந்தாள்.

"பவித்ரா! நாம் ஏற்கெனவே திட்டமிட்டிருந்ததை அப்பா அம்மாவிடம் கொஞ்ச நேரத்துக்கு முன்னே தான் இங்கே சொன்னேன். அம்மா மனசிலே இப்போது யார் மேலேயும் எந்தத் துவேஷமும் இல்லை. மீனாவுக்கும் கமலம்மாவுக்கும் இனி ஒரு கஷ்டமும் இருக்காது" என்றான். அதைக் கேட்டதும் பவித்ராவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

அன்போடு அருகே சென்று கமலம்மாள் பவித்ராவின் கண்ணீரை வழித்து விட்டு முகத்தைத் துடைத்து விட்டாள். அப்போது மீனா, "அம்மா!" என்று குரல் கொடுத்தாள். தாவி ஓடித் தன் மகளை அப்படியே அணைத்துக் கொண்டாள் அந்தத் தாய்.

"அதற்கப்புறம் பவித்ராவோடு நான் ஒரு வார்த்தைக் கூடப் பேசவே இல்லைம்மா. அவளோடு சேரவேயில்லைம்மா" என்றாள். அவள் சொல்லும் போது, நா தழதழத்துப் போனதை எல்லோராலும் புரிந்து கொள்ள முடிந்தது.

"நீ என் மகளோடு சேரலைன்னு ஏம்மா சொல்றே? இப்போ உன் ரத்தமே என் மகளோடு சேர்ந்திருக்கே" என்றார் முத்துமணி.

"ஏழைகள் ரத்தமும் சிகப்புதான் என்பது தெரியாதா என்ன அம்மாவுக்கு?" என்று சிரித்தான் சந்தோஷ்.

"சந்தோஷ்! எனக்கு ரொம்பவும் வேதனையாயிருக்கப்பா. நீயும் குத்திக் காட்டாதே" என்று அன்போடு அவனைத் தன் பக்கம் அணைத்துக் கொண்டாள் உதயா.

அப்போது பவித்ரா தன் கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்திலே அழகழகான காட்சிகள் அடுத்து அடுத்துத் தோன்றிக் கொண்டிருந்தன.

தன் பங்களாவின் அவுட் ஹவுஸ் ஒரு நர்ஸரி பள்ளியாக மாறியிருந்தது. அங்கே சின்னஞ்சிறு குழந்தைகள் வண்ண வண்ண விளையாட்டுப் பொருள்களையும் பொம்மைகளையும் வைத்துக் கொண்டு ஆடியும் பாடியும் விழுந்தும் எழுந்தும் மகிழ்ச்சியோடு காணப்பட்டனர். கமலம்மாள் அவர்களையெல்லாம் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து நல்ல பழக்கமும் படிப்பும் ஏற்படுத்தும் அன்புள்ள ஓர் ஆசிரியையாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தார்.

பவித்ரா தன் சிநேகிதி மீனாவோடு ஒரு கல்லூரி வளாகத்திலே, மற்ற மாணவிகளோடு அளவளாவி மகிழ்ந்து கொண்டிருக்கிறாள்.

சந்தோஷூம் அம்மாவும் சந்தோஷமாகக் காரிலே 'ஷாப்பிங்' சென்று, அந்தச் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு நிறைய பரிசுப் பொருள்களை வாங்கிக் கொண்டு திரும்புகிறார்கள்!

அப்பா... கவலையே கொஞ்சமும் இல்லாதவர் போல, அந்தக் குழந்தைகளோடு குழந்தையாக, அந்த இனிய மாலைப் பொழுதிலே, பசும் புல்வெளியிலே மண்டியிட்டுத் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்!

மனக்கண்ணில் தெரிந்த அந்தக் காட்சிகளையெல்லாம் கண்டு மகிழ்ந்து, புன்னகையோடு கண்களைத் திறந்தாள் பவித்ரா. அவள் பார்வையிலே, தன் படுக்கைக்கு அருகே முதலில் தெரிந்தது மீனாவின் முகம்தான்!


அவளையிழுத்துத் தன் முகத்துக்கு அருகே சாய்த்து அன்போடு அவள் கன்னத்தில் முத்தமிட்டாள். மீனா அந்தக் கடனை உடனே திருப்பிக் கொடுத்தாள். அதற்குப் பிறகு அவர்களிடையே தோன்றிய முத்த மழை, மகிழ்ச்சி வெள்ளமாகப் பெருகியது.

(நிறைந்தது)



அறுபது ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தின் பிரபலமான கிரிக்கெட் வீரர் சி. பி. பிரை. இவர் ஒரு முறை அடித்த பந்து, மைதானத்தின் ஓரத்தில் உயரமான மரத்தின் இரு கிளைகளுக்கிடையே போய்ச் சிக்கிக் கொண்டது. ஆட்ட விதிகளின்படி வெளிப்படையாகத் தெரிந்த அந்தப் பந்தை, தொலைந்த பந்து எனக் கருத முடியாது. எனவே, ஏணி கொண்டு வந்து பந்தை எடுத்து வீசுவதற்குள் பிரை 66 ரன்களை எடுத்து விட்டார்!

— எஸ். விஜயா சீனிவாசன்.



"என்ன யானையாரே, நாடித் துடிப்பைப் பார்க்கணும், கையைக் கொண்டாங்கன்னா.. துதிக்கையை நீட்டுகிறீரே...?"

— சா. காணிக்கைராஜ்,
இடாரங்கொண்டான்.

அடி அந்தச் சோனியை!

ரமேஷ் குனிந்து ஒரு பெரிய கல்லை எடுத்து, வேகமாக நாயின் மீது வீசி அடித்தான். குறிதவறாமல் கல் சோனியின் வயிற்றில் போய் விழ, சோனி பரிதாபமாய் ஓலமிட்டபடி ஓரமாய் ஒதுங்கியது. தொடர்ந்து பிள்ளைகளின் 'ஹோ, ஹோ' சிரிப்பொலி!

இது ரமேஷின் அன்றாடப் பொழுது போக்கு.

ஒருநாள் அவ்வூரை அடுத்த கோயி



வில் கும்பாபிஷேகம் நடைபெற இருந்தது. அதைக் காண அவ்வூர் மக்கள் ஆவலோடு சென்றனர். விடுமுறை தினமாதலால், ஓரிரு வயதானவர்களைத் தவிர, அனேகமாக ஊரார் எல்லோரும் சென்று விட்டனர்.

ஒரு வீட்டில் வயதான பாட்டி ஒருத்தி திண்ணையில் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவளுக்குச் சரியாகக் கண் தெரியாது. அவளைத் திண்ணையில் உட்கார வைத்து விட்டுத் தேவையானவற்றை அவளருகில் வைத்துவிட்டு, வீட்டார் கதவைப் பூட்டிக் கொண்டு சென்று விட்டனர். நம்முடைய நாயடி வீரர் ரமேஷின் வீடுதான்.

பாட்டி பாவம், திண்ணையில் அமர்ந்து ஏதோ பழைய காலத்துப் பாட்டை முணுமுணுத்தபடி இருந்தாள்.

அப்போது, ''பாட்டி! வூட்லே யாரும் இல்லியா? எனக்குக் குடிக்கத் தண்ணி வேணும்,'' என்று ஒருகரகரப்பான ஆண் குரல் கேட்டது.



''அடப்பாவமே! எங்க வீட்டிலே யாரும் இல்லையேப்பா. எல்லோரும் கும்பாபிஷேகத்திற்குப் போயிருக்காங்க. எனக்கோ கண்ணும் தெரியாது. நீ வேற ஏதாவது வீட்டிலே போய்க் கேளுப்பா,'' என்றாள் பாட்டி உண்மையான அனுதாபத்தோடு.

''சரி பாட்டி!'' என்றவன், அங்கிருந்து போவது போல் போக்குக் காட்டிவிட்டு, ஓரமாய் ஒளிந்திருந்து கவனித்தான். வேறு வீடுகளிலும் இதே போல் வயதானவர்களே இருப்பதையும், அதுவும் இந்த வீட்டில் பாட்டி மட்டும் தனியாளாக இருப்பதையும், வீடுகள் தள்ளித் தள்ளி இருப்பதையும் கவனித்த அவன், இன்று தனக்கு நல்ல வேட்டை என்று எண்ணிச் சந்தோஷப்பட்டான்.

மெல்ல நடந்து வந்த திருடன் பூட்டை உடைக்கத் துவங்கினான். பாட்டி, ''என்ன, கோவிலில் இருந்து வந்துட்டீங்களா? கும்பாபிஷேகம் நல்லா நடந்ததா? பிரசாதம் கிடைச்சுதா?'' என்று சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டாள்.

வேகமாய் வந்த திருடன், ''ஏதாச்சும் சத்தம் போட்டே, ஒரே குத்து, கொன்னுடுவேன்,'' என்று மிரட்டவே, பாட்டி, ''ஐயோ, திருடன் திருடன்,'' என்று கூச்சலிட்டாள்.

உடனே திருடன் அவள் வாயில் துணியைச் சுருட்டி அடைத்து, கைகளைப்பின்பக்கம் இழுத்துக்கட்டினான். கால்களையும்கட்டி விட்டான். பிறகு வீட்டில் புகுந்தான். ''சே! கிழவியை முன்னாலேயே கவனிக்காமல் விட்டுவிட்டோம். நேரம் ஆவுது. எல்லோரும் வர்றதுக்குள்ள முடிஞ்ச மட்டும் சுருட்டணும்,'' என்று மனத்திற்குள் எண்ணியபடி, பரபரவென்று பீரோவின் அருகில் சென்று சுற்றுமுற்றும் பார்த்தான். சாவி, ஆணியில் தொங்கியது. அதை எடுத்து பீரோவைத் திறந்தான்.

ஜி.மீனாட்சி

அப்போது அங்கே வந்தது சோனி. பாட்டியைப் பார்த்தது. அதற்கு என்ன தோன்றியதோ, பாட்டியையே ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தது. மறுநிமிடம் உள்ளே பாய்ந்தது.

எங்கிருந்துதான் அத்தனை ஆவேசம் வந்ததோ சோனிக்கு! திருடனைப் பார்த்து 'வள் வள்' என்று குரைக்க ஆரம்பித்தது. அதுமட்டுமின்றி மேலே விழுந்து கடிக்கவும் செய்தது! நகங்களால் பிராண்டியது! திருடனை அங்கே இங்கே அசைய விடாமல், தாவித் தாவிக் குதித்துப் பிடுங்கியது. மூலையில் இருக்கும் தடியை எடுத்து நாயை அடிக்கலாமென்றால் கூட அவனால் நகர முடியவில்லை!

இதற்குள், கோவிலுக்குச் சென்றவர்கள் திரும்பிவர ஆரம்பித்து விட்டார்கள். எங்கேயோ நாய் குரைக்கும் ஓசையை மட்டுமே அவர்களால் கேட்க முடிந்தது.

பாட்டியின் வீட்டார், சற்றுக் கிட்டத்தில் வந்தவுடன்தான், நாய் சத்தம் தங்கள் வீட்டிலிருந்து வருவதை உணர்ந்தனர். ஓடிவந்து, பாட்டியின் கோலத்தையும், கதவு திறந்து கிடப்பதையும் கண்டு பதறி, உள்ளே ஓடினர். கூட வந்த வேறு வீட்டுக்காரர்கள் உதவிக்கு வர, பாட்டியின் கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. பாட்டி நடந்ததைக் கூறினாள்.

உள்ளே நாயால் தாக்கப்பட்டுத் தவித்தபடி இருந்த திருடனைக் கையும் களவுமாகப் பிடித்து, நையப்புடைத்து, போலீஸில் ஒப்படைத்தனர்.

பாட்டி கூறினாள். ''சமயத்தில் இந்த நாய் மட்டும் வரலைன்னா, எல்லாப் பொருளும் போயிருக்கும்.''

சோனியின் திறமையறிந்த மக்கள் அதைப் பெரிதும் பாராட்டினர்.

பள்ளிச் சிறுவர்களுக்கு, முக்கியமாய்ப் பாட்டியின் பேரன் ரமேஷுக்கு மிகவும் வெட்கமாகவும், வருத்தமாகவும் இருந்தது. அவன்தான் அதை மிக அதிகமாகத் துன்புறுத்தியவன். தான் அதை அடித்துத் துன்புறுத்திய போதும், அதை மறந்துவிட்டு அது தங்களுக்கு நன்மையே செய்ததையும் உணர்ந்து உருகினான் அவன்!

இப்பொழுதெல்லாம் ரமேஷும் அவன் நண்பர்களும் சோனியை மட்டுமல்ல, வேறு எந்தப் பிராணிகளையும் துன்புறுத்துவதில்லை!

ஓவிய வல்லான்

மன்னர் ஒருவர் தம் படத்தை வரைந்து வருமாறு ஓவியர்களுக்கு உத்தரவிட்டார். அனைவரும் பயந்தனர். ஏனெனில், மன்னருக்கு ஒரு கண்ணில் பார்வை இல்லை. அதோடு, சற்று மூடியது போலிருக்கும். ஒரே ஓர் ஓவியன் மட்டும் துணிச்சலுடன் வரைந்தான். மன்னரிடம் காண்பித்தான். மன்னர் வேட்டையாடுவது போல வரைந்திருந்த அதில், மன்னர் மானைக் குறி வைப்பது போல (ஒரு கண் மூடியிருக்கும்படியாக) வரைந்திருந்தான். மன்னர் அவனுடைய ஓவியத் திறமையைப் பாராட்டி ஏராளமாகப் பரிசளித்தார்.

— சுகா ராஜ், மதுரை — 2.

பிரான்சின் பதினான்காம் லூயி மன்னர் வாழ்நாளிலேயே மூன்று முறைதான் குளித்திருக்கிறார்! இவருக்கு 413 படுக்கைகள் இருந்தன. ஹை-ஹீல் ஷூவை முதன் முதலில் அணிந்தவர் இவரே! பிறக்கும் போதே முழுப் பற்களுடன் பிறந்தார். மிகவும் பெரிய வயிற்றை உடையவராக விளங்கியவர்!

— அ. க. கிருஷ்ணன், வியாசர் நகர், சென்னை — 39.





பிரதமர் சந்திரசேகர்

கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் நாள் காலை, சரியாக 11 மணி. புதிய பிரதமராக எஸ். சந்திரசேகர் பொறுப்பேற்றார். அவருக்கு முன்பு ஜவஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, மொரார்ஜி தேசாய், சௌத்ரி சரண் சிங், ராஜீவ் காந்தி, வி. பி. சிங்., ஆகிய ஏழு பேர் நமது நாட்டுப் பிரதமராக இருந்துள்ளனர். சந்திரசேகர் நம் நாட்டின் எட்டாவது பிரதமர்.

சந்திரசேகர் 1927 ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதி பிறந்தார். இடம், உத்திரப்பிரதேசத்தில் உள்ள பல்லியா மாவட்டத்தைச் சேர்ந்த இப்ராஹிம்பேட்டை என்ற சிற்றூர். அவர் தாகுர் வகுப்பைச் சேர்ந்தவர். 'சிங்' என்பது அவர்களது பட்டப் பெயர். ஆனால், அந்தப் பட்டத்தை அவர் பயன்படுத்துவதில்லை. தந்தை ஒரு நடுத்தர விவசாயி. பெயர் தாகுர் சதானந்த் சிங். சந்திரசேகர் இரண்டாவது மகன்.

1947 ஆம் ஆண்டு. சந்திரசேகருக்கு இருபதே வயது. கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதே அவர் பொது வாழ்வில் ஈடுபடத் துடித்துக் கொண்டிருந்தார். கல்லூரியின் கட்டணத்தை நிர்வாகத்தினர் உயர்த்தி விட்டனர். அவ்வளவுதான்! சந்திரசேகர் அந்தக் கட்டண உயர்வை எதிர்த்துப் போராடி வெற்றியும் பெற்றார். அதைத் தொடர்ந்து, காங்கிரஸ் கட்சியோடு தன்னை இணைத்துக் கொண்டார். உத்திரப்பிரதேசத்தின் பல்லியா மாவட்ட மாணவர் காங்கிரசின் தலைவரானார். அன்று மாவட்ட மாணவர் காங்கிரசின் தலைவராகி அரசியல் பிரவேசம் செய்த சந்திரசேகர், இன்று நாட்டின் பிரதம மந்திரியாகியுள்ளார். ஒரு குறிப்பிடத்தக்க செய்தி என்ன தெரியுமா? கடந்த 43 வருடங்களாக அரசியலில் தொண்டாற்றிவரும் இவர், இன்று வரையில் எந்த ஒரு அமைச்சரவையிலும் அங்கம் வகிக்காதவர்!

நாட்டில் எல்லாரும் சந்திரசேகரை திருமணமாகாத ஒரு பிரம்மச்சாரி என்றே நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அவர் திருமணம் ஆனவர்தான்! மனைவி பெயர் துஜா தேவி. மிகச் சிறிய வயதிலேயே திருமணம் ஆகி விட்டது. துஜாதேவி மிகவும் அடக்கம் நிறைந்தவர். இன்றும் இருக்கிறார்! மிகுந்த பணிவும், கூச்ச சுபாவமும் உள்ளவர். உங்களுக்கு எப்போது திருமணம் நடந்தது என்று யாராவது விசாரித்தால், 'அது பற்றிய நினைவே இல்லை' என்கிறார்! அவ்வளவு சிறிய பெண்ணாக இருந்தபோதே மணமாகி விட்டது!

துஜாதேவி கடவுள் பக்தி உள்ளவர். தினசரி வழிபாடு செய்யாது நீர் கூட அருந்த மாட்டார். இவருக்கு அரசியல் பற்றி எதுவுமே தெரியாது. அறிய வேண்டும் என்ற ஆர்வமும்

ஜானகிமணாளன்



''அரண்மனைப் பால்காரர் கொடுக்கும் பாலில் தண்ணீர் கலந்திருக்கிறதா என்பதை அறிய மன்னருக்கு அன்னம் வேண்டுமாம்!''

— ச. காணிக்கைராஜ்.



''பத்திரிகை ஆசிரியர் சாட்சி சொல்லிவிட்டு, பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே'ன்னுட்டார்! கேஸ் தோத்துப் போச்சு.''

— ச. காணிக்கைராஜ்.

கிடையாது. ஆனால், தன் வீட்டைப் பற்றியும் கிராமப்புறச் செய்திகளைப் பற்றியும் கணவனிடம் மிகுந்த ஈடுபாட்டுடன் பேசி விவாதிப்பார்.

சந்திரசேகருக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் பங்கஜ் சிங். 32 வயதாகிறது. அவர் காசியில் பள்ளிப் படிப்பை முடித்தவுடன், டில்லியில் மேற்படிப்பை நிறைவு செய்தார். சந்திரசேகர் தமது மகன்களின் விஷயத்தில் எந்தவிதக் கட்டுப்பாட்டையும் விதித்தவரல்ல. மகன்களை சுயமாக அவரவர் போக்கில் செயல்பட அனுமதித்தவர். அவர்களும் தந்தையின் செல்வாக்கை எதிர்பார்ப்பவர்களல்ல! சொந்தக் காலில் நிற்கவே விரும்புகின்றனர். பங்கஜ் தனது சொந்த முயற்சியால் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவி, அதை நன்கு நடத்தி வருகிறார். அத்துடன், தனது தந்தை தொடங்கிய 'யங் இந்தியன்' என்ற பத்திரிகையின் வளர்ச்சிக்கும் மிகவும் துணையாக நின்றார். இரண்டாவது மகன் நீரஜ் சேகருக்கு, 20 வயதாகிறது. இவரும், 'சிங்' பட்டத்தை விட்டவர். நகரத்தில் பிறந்து அங்கேயே வாழ்ந்ததால், அவருக்குக் கிராமங்களைப் பற்றி எதுவுமே தெரியாது. டில்லி ஆத்மாராம் சனாதன தர்ம கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் பி. ஏ. பட்டம் பெற்றுள்ளார்.

துவக்கப் பள்ளிக் கல்வியை முடித்ததும், சந்திரசேகர் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்து அலகாபாத் பல்கலைக் கழகத்தில், அரசியலைப் பாடமாக எடுத்து, 1950 — 51ல் முதுகலை எம். ஏ. பட்டம் பெற்றார்.

ஆச்சார்ய நரேந்திர தேவ் என்று ஒரு சோஷலிஸ்ட் தலைவர். அவரது கொள்கைகளும் போதனைகளும் சந்திரசேகருக்கு மிகவும் பிடித்திருந்தன. எனவே, அவருடைய பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். கட்சியின் உத்திரப்பிரதேசக் கிளைக்கு 1955 ஆம் ஆண்டு இணைச் செயலாளரானார். இது நடந்தது 1962 ஆம் ஆண்டு. கட்சியின் நாடாளுமன்ற (மாநிலங்

களவை) மேலவை உறுப்பினர் ஆனார். அசோக் மேதா போன்றோருடன் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார்.

1965 ஆம் ஆண்டு, சந்திரசேகர் சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து விலகி, மீண்டும் காங்கிரசிலேயே சேர்ந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ஆன சந்திரசேகர், அக் கட்சியின் நாடாளுமன்ற கட்சிப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காலப்போக்கில், காங்கிரசில் இருவிதக் கருத்துக் கொண்டோர் உருவாயினர். ஒரு சாரார் பழமை விரும்பிகள். அதாவது, கட்சியின் மூத்த தலைவர்கள். அவர்களது செயல்பாட்டில் ஒருவித மெத்தனமும் பழமைவாதமும் காணப்பட்டன. மற்றொரு பிரிவினர், இளைஞர்கள். சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் செயல்பட விரும்பியவர்கள். அந்த இளைஞர்கள் கட்சிக்குள்ளேயே இருந்து கொண்டு, மூத்த தலைவர்களை எதிர்த்தனர். அத்தகையோருக்கு ''இளம் துருக்கியர்'' என்று பெயர். அவர்களின் தலைவராக விளங்கியவர் சந்திரசேகர்தான்.

அச் சமயம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர் இந்திரா காந்தி. அவர் மிகவும் முற்போக்குக் கொள்கை உடையவர். சந்திரசேகர் அவருக்கு மிகுந்த பக்கபலமாக விளங்கினார். 1966ல் லால்பகதூர் இறந்தவுடன் இந்திராவைப் பிரதமராக்க அசோக் மேத்தா தலைமையில் சந்திரசேகரும் அவரது இளம் துருக்கி நண்பர்களும் அரும்பாடு பட்டனர்.

அதையடுத்து 1969ல் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டது. ஒரு பிரிவுக்கு பழைய காங்கிரஸ் என்று பெயர். மற்றொரு பிரிவு காங்கிரஸ் (இந்திரா) எனப்பட்டது. சந்திரசேகர் இந்திரா காங்கிரசில் இணைந்தார். இந்திரா காந்தி கொண்டு வந்த மன்னர்மான்ய ஒழிப்பு, வங்கிகள் தேச உடைமை ஆக்கியது ஆகிய முற்போக்குத்திட்டங்களுக்கு சந்திரசேகர் மிகுந்த ஆதரவு தந்தார். அடுத்து அவர் அகில இந்திய இந்திரா காங்கிரசில் பணிக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயினும் நீண்ட நாள் அவரால் அந்தக் கட்சியில் இருக்க முடியவில்லை.

1974 ஆம் ஆண்டு ஜயப்பிரகாஷ் நாராயண் ''ஊழல் எதிர்ப்பு இயக்கம்'' ஒன்றைத் தொடங்கினார்.



சந்திரசேகர் அதற்கு ஆதரவு அளித்தார். அதைத் தொடர்ந்து, இந்திராவுடனான கருத்து வேறுபாடு அதிகமாகியது. அப்போது திடீரென்று 1975 ஜூன் 25 ஆம் நாள், இந்திரா நாட்டில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தினார். காங்கிரஸ் உயர் மட்டத் தலைவர்களுடன் அப்போது அவருக்கு இணக்கமான உறவு இல்லை. எனவே, சந்திரசேகர் 'மிஸா' என்ற உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார். அத்துடன் கூட, அவரும் அவரது இளம் துருக்கி நண்பர்களும் காங்கிரசிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

1977ல், மற்ற தலைவர்களுடன் விடுதலையான சந்திரசேகர், ஜனதா கட்சியில் சேர்ந்தார். அதன் பிறகு அக் கட்சியின் தலைவர் ஆனார்.

1979ல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. அதன் பிறகு 1983 ஜனவரி 6 ஆம் தேதி முதல் ஜூன் 25 வரையில் கன்னியாகுமரி முதல் டில்லி வரையில் 4260 கி. மீ. தூரத்திற்குப் பாத யாத்திரை ஒன்றை சந்திரசேகர் நடத்தினார். அந்தப் பயணம், மக்களிடையே நம்பிக்கையை வளர்க்கவும், அவர்களது குறைகளை அறியவும், அவர்களுடைய ஆதரவைத் திரட்டவும் மேற்கொள்ளப்பட்டது. அப் பயணத்தின் மூலம் அவர் இந்திய மக்களின் மனத்தில் அசைக்க முடியாத ஒரு இடத்தைப் பெற்றார்.

1984ல் சந்திரசேகர் ஜனதாவுடன் லோக்தள் கட்சியை இணைத்தார். பிறகு, பல தலைவர்களின் கூட்டு முயற்சியால், ஜனதா தளம் உருவாயிற்று. அதைத் தொடர்ந்து 1989 பொதுத் தேர்தலில் அக் கட்சி வெற்றியும் பெற்றது. எனினும், தனித்து நின்று ஆட்சியை அமைக்கும் அளவுக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதே நேரத்தில் காங்கிரசுக்கும் தனிப்பெரும் பலம் கிடைக்கவில்லை. எனவே, பிற கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஜனதா தளம் ஆட்சியமைத்து, வி. பி. சிங் பிரதமர் ஆனார். எனினும், அவரால் நீண்ட நாள் ஆட்சி பீடத்தில் இருக்க முடியவில்லை. அவர் ராஜினாமா செய்த பிறகு சந்திரசேகர் பிரதமராகியுள்ளார். கீழுள்ள அமைச்சர் பதவி எதையும் வகிக்காது, நேரடியாகப் பிரதமராகியுள்ள இவரிடமிருந்து நாடு அதிகம் எதிர்பார்க்கிறது!



எகிப்து நாட்டில் சிடி-எல்-டார் என்று சொல்லப்படும் ஒரு சமாதி உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் வசந்த காலம் தொடங்கியதும் எகிப்தில் உள்ள எல்லாப் பறவைகளும் அந்தச் சமாதியிடத்தில் வந்து சேர்ந்து, மகாநாடு நடத்துகின்றன! பறவைகளின் பாதுகாவலர் எனப் போற்றப் பட்ட ஒரு முகம்மதிய ஞானி எழுபது ஆண்டுகள் காலம் தனிமையில் வாழ்ந்து சமாதியடைந்த இடம் அது.

இலட்சக் கணக்கில் பறவைகள் இங்குக் கூடுகின்றன. எகிப்தில் உள்ள எல்லாப் பறவைகளும் அப்போது அங்கே காணப்படுகின்றன. அப்பறவைகள் அனைத்தும் ஒழுங்காக அமர்ந்து, சில நாட்கள் வரை உரத்த குரலில் விவாதம் நடத்துகின்றன. அந்த ஆண்டிற்கான தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காகவே, அவை சொற்பொழிவு புரிவதாக அங்குள்ள மக்கள் கூறுகின்றார்கள்.

அந்த மகாநாட்டின் முடிவில் எல்லாப் பறவைகளும் ஒன்று சேர்ந்து பாடுகின்றன. அவையெல்லாம் கலைந்து செல்வதற்கு முன், அந்தச் சமாதியைக் காவல் புரிவதற்காக ஒரு பறவையை நியமிக்கின்றன. அந்த ஆண்டு முழுவதும் அந்தச் சமாதியைக் காவல் காக்க வேண்டியது, நியமிக்கப்பட்ட அந்தப் பறவையின் வேலையாகும்.

1880 ஆம் ஆண்டில் தொடங்கிய அந்தப் பறவைகளின் குடியரசு இன்றும் நடைபெற்று வருகின்றது.

— பன்னீர் செல்வன், செங்கல்பட்டு.

சரயூ எங்கே?

தா.ஜானகி



''அம்மா... அம்மா.''

குதித்தபடி உள்ளே நுழைந்தாள் சரயூ. முகமெல்லாம் மத்தாப்புப் புன்னகை! அம்மாவிடம் பிராகரஸ் கார்டை நீட்டாமல் தன் முதுகுப் பக்கம் மறைத்துக் கொண்டு நின்றாள்.

''என்ன சரயூ? ஏதோ சொல்ல வந்தவ ஒண்ணும் சொல்லாம அப்படியே நிக்கறே. என்ன விஷயம்?''

''இந்த மாசம் நான் எத்தனையாவது ரேங்க்ன்னு சொல்லு பார்க்கலாம்?''

''ம்... இந்த மாசம் உங்க அத்தைக்குக் கல்யாணம்னு நீ ஸ்கூலுக்கு ஒரு வாரம் மட்டம் அடிச்சியே! அதனால நீ... நாலு அல்லது ஐந்தாவது ரேங்க் தான் வாங்கியிருப்பே.''

''அதான் இல்லே. நான் ''க, ரேங்க் வாங்கியிருக்கேன்.''

ஒன்றும் புரியாமல் அம்மா விழித்தாள்.

''போம்மா. உனக்கு ஒண்ணுமே தெரியலே! அத்தை கல்யாணத்துக்குக் கிராமத்திலேருந்து வந்திருந்த தாத்தா என்ன சொன்னார் தெரியுமா?''


''என்ன சொன்னார்?''

''சரயூ! என்னதான் நீ கான்வென்டிலே ரெண்டாம் கிளாஸ் படிச்சுண்டிருந்தாலும், நம்ப தாய்மொழி தமிழை நன்றாகப் படிக்கணும். முடிஞ்ச பொழுது முடிஞ்ச இடத்திலே நம்ப தாய்மொழியைப் பயன்படுத்தணும். சின்ன வயசிலே படிக்கறது, பசு மரத்திலே ஆணி அடிச்ச மாதிரி நன்றாகப் பதியும். அதனால, இளம் வயசிலேயே சின்ன விஷயங்களாக இருந்தாலும் நல்ல பயனுள்ள விஷயங்களாகக் கத்துக்கோ. நம்மோட வாழ்க்கைக்கு என்னிக்காவது பயன்படும்னு சொல்லி விட்டு, அவர்தான் எனக்கு தமிழ் எழுத்திலே ஒண்ணு, ரெண்டு எல்லாம் சொல்லிக் கொடுத்தார். தமிழ்லே 'க'ன்னா என்னன்னு தெரியுமா? ஒன்றுன்னு அர்த்தம். அதாவது...இந்த மாசமும் நான்தான் முதல் ரேங்க்'' விளக்கினாள் சரயூ.

''அப்படியா!'' என்று வியந்து கேட்டபடி, சரயூவின் முன்னேற்ற அறிக்கைச் சீட்டை வாங்கிப் பார்த்துப் பெருமை பொங்கச் சிரித்தாள் அம்மா.

மறுநாள் காலை... பள்ளிக்குக் கிளம்பும் சமயம்.

''அம்மா! என் காப்பி நோட்டு தீர்ந்து போச்சு. புது நோட்டு வாங்க எங்க மிஸ் 'உ' ரூபாய் கொண்டு வரச் சொன்னாங்க'' என்று அம்மாவிடம்



கையை நீட்டினாள் சரயூ.

''என்னடி இது. 'க' பாஷையும், 'உ' பாஷையும். எத்தனை ரூபாய்னு பளிச்சுன்னு சொல்லக் கூடாதா?''

''இரண்டு ரூபாய்.''

''அம்மாவிடம் பணத்தைப் பெற்றுக் கொண்ட சரயூ, ''கேள்வி கேட்டா பதில் சொல்லத் தெரியாம விழிக்கிற மாணவி மாதிரி, நீ விழிக்கிறது எனக்கு வேடிக்கையா இருக்கும்மா'' என்று சிரித்தபடி கூறி விட்டு வாயிலை நோக்கி விரைந்தாள்.

மகளை அதிசயத்தில் ஆழ்த்த வேண்டும். அவள் பேசும் பாஷையைப் புரிந்து கொண்டு, அவளைத் திகைக்க வைக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்ட அம்மா, ஒரு வாய்ப்பாட்டை எடுத்துக் கொண்டு, எழுத்துக்களுக்கான தமிழ் எண்களைக் கவனமாக எழுதிப் பார்க்க ஆரம்பித்தாள்.

கல்யாணம் ஆன சரயூவின் அத்தையும், அவள் கணவரும் ஊரிலிருந்து வரவே அவர்களை வரவேற்று டிபன் செய்து உபசரித்தாள் அம்மா. அவர்கள் தங்கிய ஒரு வாரமும் விருந்திலும் வேடிக்கையிலும் பறந்தது.

மறுநாள் இரவு அவர்கள் டில்லிக்கு வண்டி ஏறப் போகிறார்கள். அதனால், முதல் நாள் மாலை அனைவரும் பொருட்காட்சிக்குச் சென்றனர்.

வண்ண வண்ண விளக்குகளின் ஒளியில் பொருட்காட்சி மிக அழகாகக் காட்சி அளித்தது. வளையல் கடை, ரிப்பன் கடை, பொம்மைக் கடை எல்லாம் பார்த்து விட்டு ராட்டினம் சுற்றும் இடத்திற்கு வந்தனர்.

''அம்மா! அம்மா.. குடை ராட்டினத்திலே சுத்த ஆசையா இருக்கு. என்னை அந்தக் குதிரை பொம்மை மேலே உட்கார்த்தி வைம்மா.''

சரயூவின் வேண்டுகோளை அம்மாவால் புறக்கணிக்க முடியவில்லை.

சிறுவர் சிறுமிகளோடு ராட்டினத்தில் சுற்றிக் கொண்டிருந்தாள் சரயூ. ராக்கெட்டில் சுற்றுவது போன்ற பூரிப்பு அவளுக்கு.

திடீரென்று மின் விளக்குகள் அணைந்து விட்டன. கிட்டத்தட்ட ஐந்து நிமிடங்கள் வரை ஒரே கும்மிருட்டு! ஒரே இரைச்சலும் அமளியுமாக இருந்தது.

ஆறாவது நிமிடம், கரண்ட் வந்தது. இருண்டிருந்த அரங்கம் பழையபடி ஒளியும் உயிரும் பெற்றது.

சரயூ அமர்ந்திருந்த இடம் காலியாக இருந்தது! அவளைக் காணவில்லை!

சரயூவையே குறிவைத்தபடி வந்து கொண்டிருந்த இருவர், கரண்ட் கட்டானதும், மயக்க மருந்துக் கைக்குட்டையால் அவளை மயங்க வைத்து அவசர அவசரமாக வெளியே உள்ள காரில் போட்டுக் கொண்டு கடத்திச் சென்று விட்டனர்!

சரயூவைக் காணாது அம்மாவும், அத்தையும் துடித்தனர். அப்பாவும் புது மாப்பிள்ளையும் தேடி அலுத்து, போலீசுக்குத் தகவல் கொடுத்து விட்டு பங்களாவிற்குத் திரும்பினர்.

அன்று இரவு முழுவதும் வீட்டில் யாரும் கண் அயரவில்லை. அம்மா அழுதழுது மயக்கம் போடும் நிலையில் இருந்தாள்.

பொழுது புலர்ந்தது. மன வருத்தத்தோடு வாசலைக் கூட்டிப் பெருக்கிக்


கோலம் போட்டுக் கொண்டிருந்த வேலைக்காரி, தன் கால் மீது இடிக்காத குறையாக ஏதோ பொத்தென்று வந்து விழும் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அதற்குள் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவன் ''உங்க எஜமானர்கிட்டே கொடுத்துடு'' என்று கூறிப் பறந்து விட்டான்!

யார் இவன்? ஏன் இப்படிச் சொல்லி விட்டு ஓடுகிறான்? என்று யோசித்தபடி கீழே குனிந்து பார்த்தாள் வேலைக்காரி. அது ஒரு அட்டைப் பெட்டி. பிரித்தாள். ஒரு கடிதமும், கேசட் ஒன்றும் இருந்தன! சரயூவைப் பற்றியதாக இருக்குமோ?

உள்ளே ஓடி சரயூவின் தந்தையிடம் அப்படியே கொடுத்தாள். அவர் கடிதத்தைப் பிரித்து உரக்கவே படிக்கலானார். ''எங்களுக்குப் பணம் தேவை. அதனால், உங்கள் மகளைக் கடத்திச் சென்றிருக்கிறோம். இன்று இரவு சரியாக ஒரு மணிக்கு, ரூபாய் ஐம்பதினாயிரத்தை கடற்கரையில் உள்ள உழைப்பாளிகள் சிலைக்குப் பின்புறம் வைக்கவும். பணத்தைச் சரிபார்த்த பிறகு, நாளை காலை உங்கள் மகள் உங்கள் பங்களாவிற்கு வந்து விடுவாள். இது பற்றி போலீசுக்குத் தகவல் கொடுத்தால் தொலைந்தாள் உங்கள் மகள். இதோடு ஒரு கேசட் வைத்திருக்கிறோம். அழுது கொண்டே உங்கள் மகள் பணம் தரச் சொல்லுவதைப் பதிவு செய்திருக்கிறோம். நன்றாகக் கேட்டு புத்திசாலித்தனமாக அதன்படி நடந்து கொள்ளுங்கள்.''

தான் பயந்தபடி தன் மகள் இறக்கவில்லை, உயிரோடு இருக்கிறாள் என்று உள்ளத்தின் ஒரு மூலையில் நிம்மதி இருந்தாலும், பணத்திற்காக ஈவு இரக்கமற்ற அந்தப் பாவிகள் தன் ஒரே அருமை மகளை என்ன கொடுமைப்படுத்துகிறார்களோ என்று வருந்தியபடி கேசட்டைப் போட்டார் சரயூவின் தந்தை. அம்மாவும் வந்தாள்.

முதலில் சரயூவின் அழுகை. பிறகு என்னை அடிக்காதீங்க.. அடிக்காதீங்க... க... அ... உ... ஒண்ணுமில்லே. என்னை அடிக்காதீங்க... அ... எ... அடிக்காதீங்க. 'அப்பா... இவங்க... கேக்கற பணத்தைக் கொடுத்துடுங்க..



நான் அழுறதை அம்மாவுக்கும் போட்டுக் காட்டுங்க. எங்க் வீட்லே கூட போன் இருக்கு. ஆ... அடிக்காதீங்க... எங்க அப்பா கொடுப்பாரு.. ஆ... அடிக்காதீங்க.''

டேப் நின்றது. அம்மா நிமிர்ந்து உட்கார்ந்தாள். ''சாதாரணமா சரயூ வீட்டிலேராகம்போட்டு அடம்பிடிச்சு அழுறதுக்கும், இப்ப டேப்பிலே அழுறதுக்கும் வித்தியாசம் தெரிவதை அம்மாவால் உணர முடிந்தது. இன்னும் கேட்டால் டேப்பில் அழுத அழுகை உண்மையான அழுகையாக அவளுக்குத் தோன்றவில்லை. ஏதோ உள் நோக்கத்தோடு, வேண்டுமென்றே அழுவது போல் தோன்றியது! அதோடு எதற்காக அவள், கேசட்டைத் தனக்கும் போட்டுக் காட்டச் சொல்லியிருக்கா? அம்மா மறுபடி மறுபடி கேசட்டைப் போட்டுக் கேட்டாள். அவள் அழுகையில் இருந்த அ, உ, க எல்லாம் தெளிவாக இருந்தன!


அம்மாவுக்குப் பளீரென்று மின்னலடித்தது போல் தோன்றியது! ஓடிப் போய் வாய்ப்பாட்டை எடுத்து வந்தாள். அதன் மூலம் உண்மை பளீரெனப் புரிந்தது. க, அ, உ என்ற தமிழ் எழுத்துக்களுக்குரிய ஆங்கில எண்களை எழுதிப் பார்த்தாள். 182087 என்ற எண் வந்தது! கணவனிடம் தன் கண்டுபிடிப்பைக் கூறி அந்த எண் உடைய தொலைபேசியைக் கண்டுபிடிக்கச் சொன்னாள்!

அப்புறம் என்ன?

அடுத்த இரண்டு மணி நேரத்தில் சரயூ மீட்கப்பட்டாள். பணக்கார வீட்டுக் குழந்தைகளைக் கடத்திச் சென்று மிரட்டிப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்த கடத்தல் கும்பல் பிடிபட்டது. சரயூவை, அவள் அறிவுத் திறனை இன்ஸ்பெக்டர் மிகவும் பாராட்டினார். பேசும் பொம்மை ஒன்றைப் பரிசாக அளித்தார். தீரச் செயல் புரிந்த சிறுமி என்று தட்டிக் கொடுத்தார்.

''அம்மா! நான் கண் விழிச்சுப் பார்த்தப்போ ஓர் அறையிலே இருந்தேன். பக்கத்து அறையில் ஒரு தொலைபேசி வைச்சிருந்தாங்க. அவங்க டயல் பண்ணுவதைக் கொண்டு, அதன் எண்ணை நானாகக் கண்டு பிடித்து, மனத்தில் பதிய வைத்துக் கொண்டேன். போன்லே பேசினா போலீஸ் கண்டுபிடிச்சுடும். அதனாலே, டேப்பிலே பேசச் சொல்லிப் பணம் பறிப்போம்னு அவங்க தங்களுக்குள்ளே பேசிக்கிட்டு என்னை அடிச்சுத் துன்புறுத்திப் பேசச் சொன்னாங்க. அப்பத்தான் திடீர்னு அந்த எண்ணம் தோணிச்சு. அதனாலே, அந்த மாதிரி அழுதேன். எங்கம்மான்னா... அம்மா...தான்..! நான் நினைச்சபடி கண்டுபிடிச்சுட்டே!' என்று அம்மாவைக் கட்டிக் கொண்டாள் சரயூ.

சரயூவின் தாத்தாவிற்கு மனத்திற்குள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள் அம்மா!



காந்திஜியின் நேர்மைக்கு அவர் சிறு வயது நிகழ்ச்சிகளையே உதாரணமாகக் கூறலாம். அவர் பள்ளியில் படிக்கும் போது வகுப்புக்குப் பள்ளித் தணிக்கையாளர் வந்தார். கணக்குப் பரீட்சை நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் காந்திஜியின் இடத்துக்கு வந்தார். அவர் போட்டிருந்த கணக்கு தப்பாக இருந்தது. அடுத்த பையன் சரியாகப் போட்டிருந்தான். அவனைப் பார்த்து எழுதி விடும்படி ஆசிரியர் முணுமுணுத்தார். காந்தி பக்கத்துப் பையனைப் பார்த்து எழுத மறுத்து விட்டார். ஆசிரியருக்குக் காந்தி மீது கடுமையான கோபம். காந்தி அதனைப் பொருட்படுத்தவில்லை.

— எம். ஆனந்தன், வந்தவாசி.



வெட்டி ஒட்டுங்கள்
-போட்டி-

மேலே பதினேழு துண்டுகளாகச் சிதறியுள்ளவற்றை வெட்டி, ஒட்டிச் சேர்த்தால் ஒட்டகச் சிவிங்கி, மான், நாய் ஆகிய மூன்றும் கிடைக்கும். எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள். கண்டிப்பாகப் பரிசு உண்டு.

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

பின் கோடு: ....

முடிவு தேதி: 16.2.1991.

வெளியேவா டைகர்...

அம்மா, அப்பா ஊருக்குப் போயிருந்த சமயம். சுவாரஸ்யமாகக் கோலி விளையாடிக்கொண்டிருக்கும் போது என் அண்ணன் அழுதபடி... "எலே... வாடா... டைகர வந்து பாருடா..." என்றான்.

"கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ..."

"சுந்தரம்... எங்க கூட வெளையாடிட்டுத்தான் போகணும்... நேத்து மாதிரி நடுவுலே போனயோ..." அன்புத் தோழன் எச்சரித்தான்.

என் அண்ணன் மீண்டும் மீண்டும் அழைக்க...

"இருங்கடா, ஒரு நிமிஷத்துல வந்துடறேன்" என்று நண்பர்களிடம் கெஞ்சிவிட்டு... என்ன?" என்று வெறுப்புடன் அண்ணனுடன் சென்றேன்.

"எலே... வெளயாட்ட முடிச்சிட்டுப் போயிடு..." எச்சரிக்கை பின்னாலிருந்து வந்தது பலமாக...

"சும்மா இருங்களேண்டா... எங்க டைகர்... இரும்பு கிரில் கதவுக்குள்ள தலையை வுட்டுருச்சி... வெளியே எடுக்க முடியல... கத்திக்கிட்டே இருக்குடா... பாவம்டா..." அண்ணன் கதறி அழுதபடி சொன்னான்.

நான் ஓடிப் போய் டைகர் இருக்குமிடம் சென்று பார்த்தேன்.

அது மூக்கால் விசிலடிப்பது போல சப்தமெழுப்பி விட்டுக் குரைத்தது.

குரைப்பது — என்னைக் காப்பாற்றேன் என்பது போல வேதனை வேண்டுகோளாக இருந்தது.

டைகர் — எங்கள் வீட்டின் நன்றி உள்ள ஜீவன். அல்சேஷன். எங்கள் வீட்டிற்குக் குட்டியில் வந்தது. ஒரு தகிக்கும், வெயில் காலத்தில் — இரவு நேரத்தில் சித்தப்பா கொண்டு வந்தார்.

என் அண்ணன் டைகர் மேல் உயிரையே வைத்திருந்தான். டைகரின் நிலை அவனைப் பைத்தியம் பிடிக்காத குறையாக்கி வைத்திருந்தது! அவன் போட்ட கத்தலில், ஆட்கள் டைகர் முன் வந்து நின்றனர்.

"மத்தியானம் சாப்பிடப் போகையிலே சொன்னேன் இல்ல... கேட்டைப் பூட்ட வேண்டாம்னு..? இப்ப அனுபவி..." — திட்டினேன் அண்ணனை.

"இப்ப அதுக்கு என்னடா செய்யச் சொல்றே?"

வந்திருந்த கூட்டத்தினர் தங்கள் கருத்தை உதிர்த்தனர். "நாயி பாவம், எப்படி வெளியே வரும்...?"

"தலைய வெட்டித்தான் எடுக்க முடியும்... வேற வழி..."

"எல்லாச் சீவன்களும் போறது இயற்கைதான். இதுக்கு இந்த இரும்பு கிரில் எமனாயிடுத்தே?"

டைகர் தலையைப் பிடித்து மெதுவாக இழுத்து எடுத்து விடலாம் என்று தோன்றினாலும், தலையைப் பிடித்தாலே அது வேதனை தாங்காது கத்திற்று.



என் அண்ணனைப் பாட்டி வீட்டில் தாத்தா இருந்தால் கூட்டி வரச் சொன்னேன்.

"ஏண்டா... உங்க அம்மா, அப்பா... எங்கேடா?"—தூரத்து உறவுக்கார மாமா கேட்டார்.

"ஊருக்குப் போயிருக்காங்க..."

"சாப்பாடு எங்கே...? பாட்டி வீட்டுலயா?"

"ம்..."

"அதான் புள்ளைக, கதவை அடைச்சிப் போட்டுட்டு ஊரைச் சுத்துயிருக்குங்க..."

கை விரலைச் சொடக்குப் போட்டபடி டைகரையே பார்த்தேன். என்ன செய்வது?

யாரோ... 'சொடக்கு போடக் கூடாது' என்றார்கள்.

வாசலில் சைக்கிள் நிறுத்தப்படும் சத்தம் கேட்டது. பார்த்தேன். புல் அறுக்க வந்த முனியப்பன்... கை அறுவாளைச் சைக்கிளில் செருகிவிட்டுக் கிழிந்துபோன டிரவுசருடன் வீட்டிற்கு வந்தான்.

முனியப்பன் தினமும் எங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள தோட்டத்தில் புல் அறுக்கவருபவன். குள்ளமான உருவத்தோடு ஏழு, எட்டு வயது மதிக்கத் தக்க தோற்றம்.

முனியப்பனைப் பார்த்துவிட்டுத் தலைகுனிந்து கொண்டேன்.

இன்னும், கூச்சல் குழப்பம்தான்.

முனியப்பன் என்னவென்று விசாரித்திருக்க வேண்டும்.

சைக்கிள் கடை சண்முகம் எரிச்சல் பட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார்.

முனியப்பன் கூட்டத்தை விலக்கி விட்டு டைகரையே பார்த்தான். டைகர் அவனைப் பார்த்துக் குரைத்தது.

"அய்யா..." என்ற சத்தம் கேட்டுத்

சிவ. அருணா சங்கர்



சமத்துவப் பறவை

மலை மொங்கான் (ஹார்ன் பில்) என்ற பறவை, உயர்ந்த அடர்ந்த பழ மரங்கள் நிறைந்த பகுதிகளில் சிறுசிறு கூட்டங்களாக வாழ்கின்றன. உணவின் பெரும் பகுதி பழ வகைகள். அரிவாள் மணைக் கத்தி உருவில் பெரிய அலகு. தலையில் கவசம். வெள்ளையும் கறுப்பும் கலந்த விந்தை உடல். மார்ச் முதல் ஜூன் வரை முட்டை விடுகிறது. மரப் பொந்தில், பெண் பறவை முட்டைவிட்டு அடைகாக்க அமர்ந்ததும், ஆண், பொந்தின் வாயை சிறு துளைக்கு மட்டும் இடம் விட்டு அடைத்து, வேளா வேளைக்கு இரை தேடி வந்து அடைகாக்கும் பெண் பறவைக்குக் கொடுக்கிறது! பொந்தை அடைக்கப் பயன்படுவது பறவையின் மலம்தான்! குஞ்சுகளை ஆணும் பெண்ணும் சேர்ந்தே பராமரிக்கிறது. சமத்துவப் பறவை!


பறவை, விலங்குகள், தாவரங்கள் தொடர்பான இதுபோன்ற எத்தனையோ அதிசயச் செய்திகளை, காரமடையிலிருந்து வெளியாகும் "கானுயிர்" மாதப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

"கண் தானம் செய்ய மறுக்கும் ஊர் எது?"

"தெரியலையே!"

"'ஐ'தரா'பாத்தாச்சே!"

— கேச. பக்தவத்சலம்,
விருத்தாசலம் — 1.



திரும்பினேன்.

என்னைத்தான் முனியப்பன் அழைத்தான்.

அண்ணன், பாட்டியை அழைத்துக் கொண்டு வியர்க்க விறுவிறுக்க வந்திருந்தான்.

"என்னப்பா..." என்றேன்.

"போடா... அங்கிட்டு... அய்யா... கொய்யான்னு சொல்லிக்கிட்டு இருக்கிறது பத்தாதுன்னு நீ வேற..." என்று அவனை விரட்டினர்.

முனியப்பன் எதையும் கேட்காதவன் போல... "நாயிக்குத் தட்டுல தான் சோறு போடுவீகளா?" என்றான்.

"ஆமாம்..."

"அந்தத் தட்டைக் கொஞ்சம் எடுத்துக்கிட்டு வாங்கய்யா..."

ஓடிப்போய் எடுத்து வந்து முனியப்பனிடம் கொடுத்தேன்.

நான் ஏதோ தவறு செய்து விட்டவன் போலக் குழப்பத்தில் யார் எது சொன்னாலும் உடனே செய்யும் நிலையில் இருந்தேன்.

"பால்... இருக்காய்யா..."

"இல்லேப்பா" என்றேன்.

"யாரிட்டமாவது வாங்கிக்கொடுங்கய்யா..."

எதிர் வீட்டு அம்மாள் கொஞ்சம் தம்ளரில் ஊற்றி எடுத்து வந்து தட்டில் ஊற்றினார்கள்.

முனியப்பன் என்னை அழைத்து... "தட்டை நாயி மூஞ்சிக்கு நேராக் காட்டிட்டு, அதன் பின்னாடி போயி, சபதம் வர்ற மாதிரி 'சத்'னு தட்டைக் கீழ வெய்யிங்க பாப்போம்" என்றான்.

அதன்படியே செய்தேன்.

டைகர் ஏதோ... வேகத்தில்... திமிறிக் கொண்டு கழுத்தை ஆட்டி.... ஆட்டி... வெளி...யே இழுத்தது. தலை வெளிவந்து விட்டது!

குரைத்தபடி ஓடி வந்து பாலைச் சாப்பிட்டது.

கூட்டத்தினர் முனியப்பனையே பார்த்தனர்.

என் அண்ணன், முனியப்பனின் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு அழுதான்.

நான் ஓடிப்போய் முனியப்பனைக் கட்டியணைத்துக் கொண்டேன்.




• சித்து

ஆசியக் கோப்பை

திண்டு மணி

நவநகர் இளவரசர் ரஞ்சி தமது ராஜ்ஜியத்தைச் செம்மையான நிருவாகத்தால் உயர்த்த முயன்றார். அது எவ்வளவு தூரம் வெற்றி பெற்றது என்பது நமக்குத் தெரியாது.



• அஸருத்தீன்

ஆனால், அவரது கிரிக்கெட் ஆட்டம் என்றும் அவரை நினைவில் கொள்ளும்படி அவரை உயர்த்தி விட்டது! ஆண்டுதோறும் நடைபெறும் ரஞ்சி கோப்பைப் பந்தயங்கள் என்றும் அவர் பெயரை வாழ வைக்கும்.

குஜராத் மாநில நவநகர் இராஜ்யத்தின் சரோதரில், 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் பத்தாம் நாளன்று பிறந்தவர் இளவரசர் ரஞ்சி. பட்டத்து இளவரசருக்குப் பல இடையூறுகள், சோதனைகள் காத்திருந்தன. இந்தச் சூழ்நிலையில் பதினாறு வயதில் ராஜ்குமார் கல்லூரியில் படித்துவிட்டு, செஸ்டர் மாக்னெட்டன் கற்றுத் தந்த கிரிக்கெட் திறமையோடு இங்கிலாந்தில் குடியேறினார்! கேம்பிரிட்ஜில் இளவரசர் ரஞ்சி தம் கல்வியைத் தொடர்ந்தார்! 'இளவரசர் ஆனாலும் கறுப்பர் ஆன ரஞ்சிக்குக் கிரிக்கெட்டில் முன்னேறப் பல தடைகள்! அவரது ஆட்டத் திறமை லார்ட்ஸில் இங்கிலாந்து குழுவில் சேர வாய்ப்புத் தந்தாலும், லார்ட் ஹாரிஸ் இங்கிலாந்து குழு ஆட்டக்காரராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதை எதிர்த்தார்! இருப்பினும்,இந்தத் தடைகளெல்லாம் இளவரசர் ரஞ்சியின் ஆட்டத்திறமையைக் குறைக்கவில்லை!

இவ்வளவு தடைகளிருந்தும் இங்கிலாந்து குழு ஆட்டக்காரராக ரஞ்சித் சிங் ஓல்ட் டிராபோர்டில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கெதிரான கிரிக்கெட் பந்தயத்தில் சதம் எடுத்துத்

புலவர்க்குப் புகழ்சேர்த்த பா

புகழேந்தி — வெண்பா
ஜயங்கொண்டான் — பரணி
கம்பர் — விருத்தம்
ஒட்டக்கூத்தர் — கோவையுலா அந்தாதி
இரட்டையர்கள் — கலம்பகம்
காளமேகம் — வசை
படிக்காசுப் புலவர் — சந்தம்

— அ. கப்பையன், செட்டிக்குறிச்சி.

தம் திறமையைக் காட்டிச் சாதனை படைத்தார். ஆஸ்திரேலியாவுக்கும் அவர் இங்கிலாந்து குழுவின் ஆட்டக்காரராகச் சென்று முதல் ஆட்டத்தில் 189 ரன்கள் எடுத்துத் தம்மை எதிர்த்தவர்களை வியக்க வைத்தார். கார்டினர் என்ற ஆங்கிலேய விமர்சகர், ''நவாப் ரஞ்சித்சிங் எங்கள் ஆங்கிலேய மக்களிடையே தம்மால் அவர்களை விடத் திறமையாக ஆட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய முதல் இந்தியர்!'' என்று புகழ்ந்திருக்கிறார்! ரஞ்சித் தம் கிரிக்கெட் திறமையினால் இங்கிலாந்தை முற்றுகையிட்டவர் என்றே சொல்லலாம்.

இளவரசர் ரஞ்சித்தை முன்னோடியாகக் கொண்டு அமர்நாத், மெர்ச்சென்ட் ஆகியோர் கிரிக்கெட்டுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்!

தியோதர் கோப்பைப் பந்தயம் இன்று இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு ஒரு சோதனைக்களமாக விளங்குகிறது. பேராசிரியர் தியோதர் அந்தக் காலத்தில் பூனாவில் கிரிக்கெட் பயிற்சிப் பள்ளி நடத்தி, 'இந்தியக் கிரிக்கெட்டின் நர்ஸரி' என்ற புகழைப் பெற்றார். 1941 ஆம் ஆண்டுக்குப் பிறகு, இதே தியோதர் தாம் வென்ற ரஞ்சி கோப்பை தமது மகாராஷ்டிர குழுவுக்குக் கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கையோடு முயன்ற போது, அவருக்குப் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டது. இளம் பம்பாய் காப்டன் கதிர் நாயக்கிடம் கோப்பையைக் கொடுக்கும்படி ஆயிற்று! இவ்வளவுக்கும் மகாராஷ்டிரக் குழுவுக்கு சந்து போர்டே என்ற மிகத் திறமையான ஆட்டக்காரர் காப்டனாக ஆடினார். அப்படியும் தோல்வியைத் தழுவும்படி ஆயிற்று!

1941 ஆம் ஆண்டில் காப்டன் தியோதர் குழு 675 ரன்கள் எடுத்ததும், அந்தப் போட்டியில் தியோதர் மட்டும் 246 ரன்களைக் குவித்து ரஞ்சி கோப்பையைப் பெற்றதும் கிரிக்கெட் வரலாற்றில் மறக்க முடியாதவை. ஒரு முறை தியோதர் தம் தவறான 'ஷாட்'டினால் விக்கெட்டை இழந்து விட்டு ஓய்வு அறையில் கண்ணாடி முன் நின்று, ''ஏன் அந்த 'ஷாட்'டை அவ்வளவு மோசமாக ஆடினேன், எதனால்?'' என்று தமக்குத் தாமே கலங்கிய நிகழ்ச்சியை ரங்கனேகர் இன்றும் நினைவு கூர்கிறார்! கிரிக்கெட்டில் அவ்வளவு ஈடுபாடு தியோதருக்கு. 'தியோதர் கோப்பை' ஒருநாள் கிரிக்கெட் பந்தயம், ஆண்டுதோறும் தியோதரின் தீவிர கிரிக்கெட் ஈடுபாட்டை விசிறிகளுக்கு நினைவுபடுத்தி வருகிறது.

கிரிக்கெட் ஆட்டம் இங்கிலாந்தில் தோன்றியது. இது, 1550 ஆம் ஆண்டிலேயே ஆடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. டூடர் காலத்தில் ஆடப்பட்டதைச் சரித்திரம் கூறுகிறது. 1722 இல் வில்லியம் கோல்ட்வின் இயற்றிய பாடலில் இது வருகிறது. இருப்பினும் கிரிக்கெட் விதிகள் 1744 ஆம் ஆண்டில்தான் முடிவாக்கப்பட்டன. ஒயிட் காண்டுயிட்டில் தான் முதல் கிரிக்கெட் கிளப் உருவானதற்கான ஆவணங்கள் உள்ளன. 1787 ஆம் ஆண்டு கிரிக்கெட் சீசனுக்குப் பிறகு இந்தப் பழைய கிளப், புதிதாகத் தோன்றிய மெர்ல்போர்ன் கிரிக்கெட் கிளப்போடு இணைந்து, எம். ஸி. ஸி. என்ற உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் கிளப்பாகப் பெருமை பெற்றது.

முதல் கிரிக்கெட் பயணம் செய்த பெருமை 1863 — 64 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு ஜியார்ஜ்பார் தலைமையில் சென்ற இங்கிலாந்து

குழுவுக்குக் கிடைக்கிறது. 1878 ஆம் ஆண்டில்தான் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து குழுவினருக்குள் அணியினரை அனுப்பி ஆடும் வழக்கம் ஏற்பட்டது.

1882 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியக் குழு மூன்றாவது முறையாக இங்கிலாந்துக்கு வந்தது. இங்கிலாந்து. அதில் தோல்வியுற்றது. 'ஆஷஸ்' என்ற சொல் அப்பொழுதுதான் பிறந்தது. இங்கிலாந்தில் கிரிக்கெட் இறந்து அதன் அஸ்தியை வெற்றிக் குழு எடுத்துச் செல்வதாக இதற்குப் பொருள்! அடுத்ததாக லார்ட் டார்ன்லேதான் இங்கிலாந்துக் குழுவுக்கு வெற்றி தேடித் தந்தார். அவர் தான் அந்த ஆஷஸைத் திரும்பக் கொண்டு வந்தார்!

1928 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் மேற்கிந்தியக் குழுவுக்கும் டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டு நியூஸிலாந்துக்கும், 1932 இல் இந்தியாவுக்கும் இது கிடைத்தது. இந்தியா — பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானுக்கும் அது வழங்கப்பட்டது!

இந்தியாவில் முதன் முதலில் பிரிட்டிஷ் பாதிரிகள் வெர்னான், லார்ட் ஹாரிஸ் ஆகியோர் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு கிரிக்கெட் குழுவுடன் வந்து கிரிக்கெட் ஆட்டத்தைப்பரப்பினர்!இதன்விளைவாக பம்பாய், கல்கத்தா, சென்னையில் இந்திய ஆட்டக்காரர்கள் ஆடத் தொடங்கினர். 1912 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து ஒரு கிரிக்கெட் குழு இங்கிலாந்துக்குப் பயணமானது. 1928 ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு உருவாகி கிரிக்கெட் ஆட்டத்தை நிர்வகிக்கத் தொடங்கியது!

டிசம்பர் 25ந்தேதி சண்டிகரில் இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையே ஆசியக் கோப்பைப் போட்டி முதல் பந்தயம் தொடங்கியது. இதில் இலங்கை, பங்களாதேஷ் குழுக்களே போட்டியிட்டன. பாகிஸ்தான் பங்கேற்கவில்லை.

இந்தியா இப்போட்டியை நடத்தும் நிர்வாகியாக இருப்பதோடு, ரேடியண்ட் ஸ்போர்ட்ஸ் மானேஜ்மெண்ட் இதை நடத்தும் பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி முதன் முதலில் ஷார்ஜாவில் தொடங்கப்பட்டது. இந்த முதல் ஆசிய கிரிக்கெட் பந்தயத்தில் இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா பங்கு கொண்டன. இந்தியா வெற்றியைப் பெற்று முதன்மையுற்றது.

இரண்டாவது ஆசிய கோப்பைப் பந்தயம் கொழும்புவில் 1986 ஆம் ஆண்டு நடந்து, ஸ்ரீலங்கா, பங்களா தேஷ், பாகிஸ்தான் பங்கேற்றன. வெற்றி ஸ்ரீலங்கா குழுவுக்கே கிடைத்

வாடா மலர் வருகிறது!

மேற்கு ஜெர்மனியில் மலர்கள் வாடாது இருக்கும் வழிமுறையைக் கண்டு பிடித்துள்ளனர். **Hydraflor** என்ற புதிய வகை மருந்து பூக்களை வாடவிடுவதில்லையாம். பூரண அழகுடன் மலர்ந்துள்ள மலர்களை **Hydraflor** மிகுந்த பிளாஸ்டிக் தொட்டியில் போட்டு மூன்று நாட்களுக்கு மூடிவைத்து விட வேண்டும். பூக்களின் இதழ்களில் உள்ள ஈரப் பசையை நன்கு உறிஞ்சிவிடுமாம் இந்த **Hydraflor.** அதோடு மலர்களின் வசீகர நிறத்தையும் அழகையும் அப்படியே பாதுகாத்து விடுகிறதாம். அதனால் பூக்களை வருடக் கணக்கில் காப்பாற்ற முடியும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

பன்னீர் செல்வன், செங்கல்பட்டு.

தது.

மூன்றாவது ஆசியக் கோப்பைப் போட்டி டாக்காவில் 1988 இல் இந்தியா, பாகிஸ்தான், பங்களா தேஷ், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளுக் கிடையே நடந்தது. இதில் இந்தியா வெற்றி பெற்றது.

இப்பொழுது இந்தியாவில் நான்காவது ஆசியப் போட்டி மிகவும் பரபரப்புடன் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியக் குழு வெற்றி பெற்றுள்ளது. இதில் பாகிஸ்தான் பங்கேற்காதது விசிறிகளுக்குப் பெருங் குறை.

ஸ்போர்ட்ஸ் — 2

கவலை தரும் ஹாக்கி!

ஹாக்கி, விளையாட்டில் அணிக்குப் பதினோரு பேராக இரு அணியினர் ஆடுவார்கள். வளைந்த மட்டையால் பந்தைத் தட்டிச் சென்று எதிர் அணியில் கோல் போடுவதே விளையாட்டின் நோக்கம். எதிர் அணியினர் தம் கோலில் பந்து விழாமல் தடுப்பதோடு எதிர் அணியில் கோல் போட முந்துவார்கள்! அதிகக் கோல்களைப் போடும் அணியே வெற்றி பெறும் அணியாகும். ஆட்டத்தை இரு அம்பயர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

பிரிட்டனிலும், ஐரோப்பாவிலும், இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியாவிலும் ஹாக்கி பிரபலமான ஆட்டமாகும். 1928ம் ஆண்டு இது ஒலிம்பிக் விளையாட்டாகச் சேர்க்கப் பட்டது.

ஹாக்கி மைதானத்தின் பரப்பளவு 100×60 கெஜம் உள்ளது. ஒவ்வொரு பக்கமும் கோல் பகுதியில் 4×3 கெஜ அளவில் கம்பங்கள் நடப்பட்டு, கோல்கீப்பர் கோலுக்குள் பந்து போகாமல் தடுக்கக் காத்திருப்பார். கோல் அடிப்பதற்கு எதிர் அணியினர் குறிப்பிட்டுள்ள வளைவுக்குள் வந்து அடித்தால்தான் கோல் செல்லுபடியாகும்.

ஹாக்கி மட்டையின் நீளம் மூன்று அடி. எடை 28 அவுன்ஸ்கள் ஹாக்கிப் பந்தின் எடை 5½ அவுன்ஸ்.

ஹாக்கி விளையாட்டிலும் கூட அடிபடாமலிருக்க ஆட்டக்காரர்கள் 'பாட்' அணிவது உண்டு. கோல்கீப்பர்களுக்கு என்றே தனியான பாதுகாப்பு உடைகள் உள்ளன. கோல்கீப்பர் குறிப்பிட்ட வளைவுப் பகுதிக்குள் தம் உடலின் எந்த பாகத்தைக் கொண்டும் பந்தைத் தடுத்து நிறுத்தலாம்.

நடுக்கோட்டில் இரு அணியினரும் பந்தைத் தட்டுவதற்கு முன் மூன்று தடவை தரையைத் தட்டி விட்டு ஆரம்பிப்பர். இதற்கு "புல்லி" என்று பெயர்! இரு அணியினருமே 'ஃபௌல்' செய்து விட்டால் அம்பயரே புல்லி செய்து ஆட்டத்தைத் தொடங்கச் சொல்வார்!

ஆட்டக்காரர் தன் மட்டையைத் தோளுக்கு மேல் தூக்கி விட்டு ஆடுவது 'தப்பாட்டம்'. அம்பயர் 'விசில்' ஊதி விடுவார்! பந்தை உதைப்பது, எதிரியின் ஹாக்கி மட்டையைக் கொக்கி போட்டிழுப்பது, எதிரியை வேண்டுமென்றே முன்னால் போய் அவரது ஓட்டத்துக்குத் தடை செய்வது, இதெல்லாமும் கூடத் தப்பாட்டங்கள்தான்!

ஒரு காலத்தில் அராபியர்கள் வளைந்த குச்சியை வைத்துக் கொண்டு புல், பனை நாலிழைகளினால் தயாரிக்கப்பட்ட பந்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

"ஹாக்கி 19 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் தீவுகளில் ஆடப்பட்டு வந்தது. முதல் ஹாக்கி கிளப் 1840ல் பிளாக் ஹீத்தில் தொடங்கப்பட்டது.



* ரங்கசாமி தேசியக் கோப்பையை வென்ற ரயில்வே அணி.

அயர்லாந்தில் 'ஹர்லி' என்றும் ஸ்காட்லாந்தில் 'ஷிண்டி' என்றும் வேல்ஸில் 'பண்டி' என்றும் இந்த ஆட்டம் அழைக்கப்பட்டதாம்!

1875—ல் ஆடவர் ஹாக்கி கழகம் இலண்டனில் தொடங்கப்பட்டு விதிகளும் உருவாக்கப்பட்டன.

சர்வதேச ஹாக்கி கழகம் டார்ஸில் 1924ல் ஆரம்பிக்கப்பட்டது. அறுபதுக்கு மேற்பட்ட நாடுகள் உறுப்பினராக்கிக் கொண்டன. தொடக்கத்தில் ஹாக்கி 'ஆண்களின் ஆட்டம்' என்று கருதப்பட்டு வந்தாலும், 1895ம் ஆண்டில் ஆங்கிலப் பெண்கள் ஹாக்கி கழகம் தோன்றி உலகம் முழுதும் பெண்களுக்குள் ஹாக்கி விளையாட்டுப் பரவ வழிவகுத்தது.

ஹாக்கியை எம். கே. ஆப்பிள்பீ அமெரிக்காவுக்கு 1901ம் ஆண்டில் அறிமுகப்படுத்தி வைத்தார். 1930ம் ஆண்டு அமெரிக்க ஹாக்கிக் கழகம் (ஆடவர்களுக்கானது) தொடங்கப்பட்டு, இந்த விளையாட்டு வேகமாகப் பரவியது.

இந்தியாவைப் பொறுத்தவரை ஹாக்கி என்றால் தயான்சந்த் நினைவுதான் வரும். அவரது ஹாக்கி மட்டையில் பந்து புரளும் விந்தையைக் கண்டு அவரை 'ஹாக்கி மந்திரவாதி' என்றே அழைப்பார்கள். இவர்தான் 1928, 1932, 1936 ஒலிம்பிக்குகளில் ஹாக்கியில் முடிசூடா மன்னராக விளங்கி அற்புதமாக ஆடித் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்தவர். சர்வ தேசப் பந்தயங்களில் இந்தியா பல வெற்றிகளைப் பெற உதவியவர். இவரது மகன் அசோக் குமார். புலிக்குப் பிறந்தது பூனையாகவில்லை!

தமிழகத்திலிருந்து சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் கல்லன், பிரான்சிஸ் (ஒலிம்பிக்) எம். ஜே. கோபாலன், ரிக்டர், சிவப்பிரகாசம், சூசைநாதன், ஜாபர் ஆகியோர். தயான்சந்த் தலைமையில் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளுக்குச் சென்ற அணியில் எம். ஜே. கோபாலனும் இடம்பெற்றிருந்தார். அவரது திறமையான ஆட்டத்தைக் கண்டு வியந்த ஹாக்கி 'கிரிடிக்கு'கள் கோபாலன் நிச்சயம் பெர்லின் ஒலிம்

பிக் குழுவில் இடம்பெறுவார் என்று கூறினர். ஆனால், எம். ஜே. கோபாலன் கிரிக்கெட்டிலும் திறமைசாலி என்பதால் இங்கிலாந்து சென்ற இந்திய கிரிக்கெட் குழுவில் செல்லும்படி நேர்ந்தது!


1948, 1952, 1956 ஒலிம்பிக் போட்டிகளில் இலண்டன், ஹெல்சிங்கி, மெல்போர்ன் ஆகிய இடங்களில் ஆடித் தங்கம் பெற்ற பெருமை பிரான்ஸிஸுக்கு உண்டு. கிழக்கு ஆப்பிரிக்காவுக்கு ஆடச் சென்ற அணியில் சிவப்பிரகாசம் இடம்பெற்றார். சூசைநாதனும் ஜாபரும் இந்திய அணிக்காக போலந்து கிழக்கு ஆப்பிரிக்கா நாடுகளில் ஆடிப் புகழ்பெற்றார்கள்.

தலைசிறந்த தளபதிகளான கரியப்பா, திம்மய்யா போன்றவர்களை அளித்தது போலவே 'கூர்க்' பகுதி ஹாக்கி விளையாட்டுக்கு கோவிந்தாவை வழங்கியது. இவர் பதினேழு வயதிலேயே மோகன்பாகன் குழுவுக்கு ஆடத் தேர்ந்தெடுக்கப்பட்டார்! 1972 ஒலிம்பிக்கில் கோவிந்தாவின் சிறப்பான ஆட்டமே இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கம் கிடைக்க உதவியது! அசோக்குமார், கிருஷ்ணமூர்த்தி ஆகிய இந்தியன் ஏர்லைன்ஸ் ஆட்டக்காரர்களோடு இவர் சிறப்பாக ஆடி ஆகாகான் கோப்பை, பம்பாய் தங்கக் கோப்பை எம். ஸி. ஸி. கோப்பை என்று வெற்றிகளைக் குவித்திருக்கிறார்!

சென்னையில் பிறந்து, 1960 ஒலிம்பிக் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானிடம் தோல்வியுற்ற அணியில் பீட்டர் இடம்பெற்றார். 1964ம் ஆண்டு சர்தார் லக்ஷ்மண் தலைமையில் ஆடிய பீட்டர் இந்தியாவுக்குத் தங்கம் கிடைக்கப் போராடி வெற்றி பெற்றார்! தமிழ் நாட்டில் பிறந்த பாஸ்கரன் மாஸ்கோ ஒலிம்பிக்கில் ஆடித் தங்கம் பெற்று உலகப் புகழ் பெற்றார்! இவர் இன்று இரயில்வேயில் விளையாட்டுப் பிரிவு அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். இவர் மட்டுமல்ல, இவரது நான்கு சகோதரர்களும் கூட ஹாக்கியில் திறமையானவர்கள்!

மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இப்பொழுது ஹாக்கியில் முன்னேறி வருகின்றன. சர்வதேச ஹாக்கி விளையாட்டுக்களில் 1928லிருந்து 1960 வரை முதல் இடத்தை வகித்து வந்த இந்தியா இப்போது கீழே கீழே போய்க் கொண்டிருப்பது கவலையளிக்கக் கூடிய நிலையாகும்.

புகைப்படங்கள் நன்றி: ஸ்போர்ட்ஸ் ஸ்டார்




இந்தியாவிலுள்ள புகழ்பெற்ற சர்க்கஸ் கம்பெனிகளில் ஒன்று ஜெமினி சர்க்கஸ் ஆகும்.

பொதுவாக யானை போன்ற மிருகங்கள் மனித வாடையும் ஜனநடமாட்டமும் இல்லாத பகுதியில்தான் குட்டி போடும் என்று உயிரியல் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு, இந்த சர்க்கஸ் கம்பெனியானது தனது சர்க்கஸ் காட்சிகளை உத்திரப் பிரதேச மாநிலம் அலகாபாத்தில் நடத்தி முடித்து விட்டு, தங்களது அடுத்த சர்க்கஸ் காட்சிகளை டெல்லியில் நடத்தும் எண்ணத்துடன், சர்க்கஸ் கூடாரங்கள், இதர பொருட்கள், மிருகங்கள் போன்றவற்றினை, டெல்லிக்கு லாரி மூலம் அனுப்பியிருக்கின்றனர். அப்படியனுப்பப்பட்ட மிருகங்களில் கர்ப்பம் தரித்திருந்த "சான்சல்" என்ற யானையும் ஒன்று. சான்சலை ஏற்றிச் சென்ற லாரி அலிகார் நகரத்தினை நெருங்கும் சமயம், லாரியிலேயே அழகிய பெண் குட்டி யானை ஒன்றினை, சான்சல் ஈன்றது!

— இரா. வளையாபதி,
தோட்டக்குறிச்சி.

காண்டாமிருகம் மாலைக் கண்ணா?



ரேவதி

மரத்தடியில் காண்டாமிருகக் காப்பகத்தின் பாதுகாப்பு அதிகாரி சத்தியசந்த் நின்று கொண்டிருந்தார். அவருக்கு எதிரே, கைகளைக் கட்டிய படி குனிந்து பணிவாக நின்று கொண்டிருந்தான் ஒரு வித்தியாசமான ஆசாமி. கச்சம் வைத்த வேட்டி, மேலே ஜிப்பா. கழுத்திலே தாம்புக் கயிறு கனத்திற்குக் கறுத்திருந்த முடிகயிறு. அதில் வெள்ளித் தாயத்து. நெற்றியே தெரியாதபடி சந்தனப் பூச்சு. அதன் நடுவில் ஒரு ரூபாய் அகலத்தில் இரத்தத்தைப் போல் பயப்படுத்திய குங்குமப் பொட்டு. அடர்ந்த கொடுவாள் மீசை. காவியேறிய பற்கள்.

''ஆளை ஒரு தடவை பார்த்தாலே, ஆறு மாதத்திற்குத் தூக்கம் வராது மாதிரி இருக்கே! யார் இந்தப் பயங்கரமான ஆள்?'' என்று கேட்டது பெண் குருவி.

''இவன் பேரு தர்மையா. பேர் தான் அப்படி. ஆனால், செய்யற காரியமெல்லாம் பாவமானது! இவன் மந்திரவாதி. அதோட நாட்டு வைத்தியமும் பார்ப்பான்,'' என்று மனைவியிடம் கூறிய ஆண் குருவி, ''இவன் மகா பாதகனாச்சே? எதுக்காக இங்கே வந்திருக்கான்!'' என்று வியந்து கொண்டது.

''நம்ம காப்பகத்தில் இப்ப இருப்பதே மொத்தம் இருபத்தெட்டு காண்டாமிருகங்கள்தான். இதில் கூட, குட்டிங்க எட்டு. வெட்டற அளவுக்கு இவைகளுக்குக் கொம்பு வளரலே. உங்களை மாதிரி ஆளுங்க கொம்புக்கு ஆசைப்பட்டு காண்டா மிருகங்களையே கொன்னுடறாங்கன்னு நாங்கதான், எல்லாத்துக்கும் கொம்புகளை எடுத்தோம். அதனால், எந்தக் காண்டா மிருகத்துக்கும் சீவி எடுக்கும் அளவுக்குக் கொம்பு இப்ப இல்லே. இன்னும் நல்லா வளரட்டும். ஒரு வருஷம் பொறுத்துக்குங்க. அப்புறம் பார்க்கலாம்'' என்றார் சத்தியசந்த்.

''காண்டாமிருகக் கொம்புக்காகவா இந்த தர்மையா இப்படிக் குழையறான்! அதை வைச்சிக்கிட்டு இவன் என்ன பண்ணுவான்?''

''கொம்பு விலை மதிப்பு இல்லாதது. அதை வீட்டில் வைத்துக் கொண்டால் அதிர்ஷ்டம் பொங்குமாம்! அதில் நீரை ஊற்றி, இரண்டு மணி நேரம் வைத்திருந்து குடித்தால் பிணி, மூப்பு எதுவுமே அருகே வராதாம்! அது வீட்டில் இருந்தால் பேய் பிசாசு அண்டாதாம்! அதனால், பெரிய மனிதர்கள், காண்டாமிருகத்தின் கொம்புக்காக அலைகிறார்கள். இலட்சம் ரூபாய் கூடக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அதோட, இந்த மாதிரி வைத்தியருங்க மந்திரவாதிங்க வேற... ஒரு காலத்தில் இந்தக் காட்டில் காண்டாமிருகங்கள் நூற்றுக்கணக்கில் மேய்ந்து திரிந்தனவாம்! பாழாய்ப் போன மனிதர்கள், சொம்புக்காக அவற்றை வேட்டையாடி இப்போ இருபத்தெட்டுக்கு வந்திருக்கு!''

''தர்மையா மறுபடி குழையறான். சத்தியசந்த் ஐயாவிடம்!'' என்றது பெண் குருவி.

''என்னடா மறுபடி இவன் கேட்



இருக்கு. சிக்கிக்கிட்டா, சுட்டுருவாங்க. கேஸ் கூடக் கிடையாது. தெரியுமா?"

"அதையெல்லாம் ஏன் நினைக்கிறீங்க? நீங்க அனுமதிச்சா, அது போதும். மற்றதை நான் பார்த்துப்பேன். நானும் சிக்கிக்க மாட்டேன். உங்களுக்கும் தொந்திரவு இருக்காது. காவல்காரங்களை ஏற்கெனவே கவனிச்சுட்டேன். அவங்க கண்டுக்க மாட்டாங்க."

"கொம்பு எங்கேன்னு அரசாங்கம் கேட்டால் பதில் சொல்ல வேண்டியவன் நான். என்ன சொல்வது?"

"மரத்துல தேய்ச்சுத் தேய்ச்சுத் தானா கொம்பை அழிச்சிடுத்து. எங்களால தடுக்க முடியலேன்னு இப்பவே எழுதிடுங்க."

"ஐயையோ, சத்தியசந்த் தர்மையா கிறானேன்'னு ஐயா கோவிக்கக் கூடாது!"

சத்தியசந்த் கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தார்.

"கொம்பு சிவற அளவுக்கு எல்லாத்துக்கும் கொம்பு வள்ரலேங்கறதுல ஒரு திருத்தமுங்க! ஒன்றுக்கு மட்டும் விரைவான வளர்ச்சிங்க. அதனால, நல்லா சீவி எடுக்கும் அளவுக்கு வளர்ந்திருக்குங்க."

"அதையும் கூட நீ பார்த்துட்டியா! உனக்குத் தெரியாம இங்கே எதுவுமே நடக்காது போலிருக்கே!" என்று அதிர்ச்சியுடன் கேட்டார் சத்தியசந்த்.

"ஆமாங்க! இதுதானே எங்க பிழைப்பு. ஏற்கெனவே எங்கிட்டே இருந்த ஒரு கொம்பை எவனோ திருடிக்கிட்டுப் போயிட்டான். எவ்வளவோ பணம் கொழிக்கும் கேசுங்க. கொம்பு இல்லாததால் கை நழுவிப் போயிட்டிருக்குங்க. தரும துரை மனம் வைத்தால், அந்த ஒரு கொம்பை மட்டும் எடுத்துக்குவேன். ஐம்பதாயிரம் தரேன். அனுமதிங்க."

"இப்பவெல்லாம் காவல் பலமா



விடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டு விட்டாரே!'' என்று பதறியது பெண் குருவி.

''இந்தத் தர்மையா பாவி குறிப்பிடும் காண்டாமிருகம் எதுங்கறதை நாம்ப உடனே கண்டுபிடிச்சு எச்சரிக்கணும். நமக்கு நாளைக்கு வேலை இதுதான்'' என்றது ஆண் குருவி.

அடுத்த நாள் அதிகாலை. 'கிச்கிச்' சத்தம் எழுப்பிக் கதிரவனை வரவேற்க ஆண் குருவி எழுந்திருக்கவில்லை. கூட்டுக்குள்ளேயே அது அரை மயக்கத்தில் உட்கார்ந்திருந்தது!


''என்னவாச்சு உனக்கு?'' என்று பெண் குருவி அதிசயத்தோடு கேட்டது.

''தாகமா இருக்குன்னு ஆற்றுத் தண்ணீரை நேற்று மாலை குடிச்சு வைச்சேன். நான் குடிச்சு முடிச்சதும், 'ஐயோ அந்தத் தண்ணியையா குடிச்சே! அதில் ஏதோ மது ஆலைக் கழிவு கலக்கிறதாம்னு' காட்டுப் புறா சொன்னது. அது சரிதான் போல இருக்கு. ஒரே மயக்கமா இருக்கு'' என்றது ஆண் குருவி.

''சரி, வெளியே எங்கேயும் போகாம கூட்டுக்குள்ளேயே அடங்கிக் கிட. நான் போய் ஏதாவது இரை கொண்டு வரேன்.''

''தர்மையா சமாச்சாரத்துக்கு என்ன பண்ணப் போறே? காலங்காலமா நம்ம இனத்துக்கு பூச்சி இரை கொடுத்து வருவது காண்டாமிருகங்





டெலிபோனில் தந்தையின் குரலில் சிறுவன்: ஹலோ! லக்ஷ்மியா...? சாயங்காலம் நம்ம ரகு ஸ்கூல் விட்டு வந்ததும் ஐஸ் கிரீம் வாங்கிக்கக் காசு கொடு!

தாயின் குரலில் சிறுமி: சரிங்க, மறக்காம நம்ம கஜிக் குட்டிக்குப் பால்கோவா வாங்கி வாங்க!

— மொரப்பூர் செல்வமணி.

கள்தான். அதனால, இந்தத் தர்மையா ஆபத்தை எப்படியாவது காண்டா மிருகங்களிடம் சொல்லி அவை களை உஷார்படுத்தணும்.''

''நானே போறேன். மொத்தம் இருபத்தெட்டுதானே? பெரிய காரி யம் இல்லே. நீ மட்டும் கூட்டை விட்டு வெளியே போகாதே'' என்று எச் சரித்து விட்டுப் பறந்தது பெண் குருவி.

பரந்து கிடந்த அந்த காண்டா மிருகக் காப்பகத்தின் எல்லாப் பகுதி களுக்கும் பறந்து சென்ற பெண் குருவி, காண்டாமிருகங்களை எச் சரிக்கை செய்தது. இருபத்தேழிடம் செய்தி கூறியாகி விட்டது.

''கவலைப்படாதே குருவி. வெட்டி எடுக்கும் அளவுக்கு இன்னும் கொம்பு வளரலே'' என்று நன்றி கூறின அவை.

இன்னும் ஒன்றுதான் பாக்கி. அது தான் இருபத்தெட்டாவது. தர்மையா குறி வைத்திருப்பது அதுவாகத்தான் இருக்க வேண்டும். அதை எப்படிக் கண்டுபிடிப்பது? அது எங்கே இருக் கிறதோ? தவிட்டுக் குருவி அலைச் சலைப் பொருட்படுத்தாது அலைந்து பறந்து அதைக் கண்டுபிடித்தது.

குட்டைப் பாறைக்கு அருகே யிருந்த சகதிக் குட்டையில் மழைத் தூறலை ஆனந்தமாக அனுபவித்த படி, ஏதோ கிழங்கைத் தின்று கொண் டிருந்தது அது. அதுவே குருவியை அழைத்தது.

''குருவி, கொம்புலே அரிப்புத் தாங்கலே! கொஞ்சம் வந்து பாரேன்.''

பெண் குருவி பறந்து வந்து பார்த் தது. நன்கு வளர்ந்திருந்த கொம்பின் அடிப்பக்கத்தைச் சுற்றிலும் உண்ணி கள் கடித்துக் கொண்டிருந்தன!

''இப்படி உண்ணி கூடு வைச் சிருக்கே! ஏன் உனக்கு அரிக்காது?'' என்று செல்லமாகக் கடிந்து கொண்ட குருவி, அதன் தலையில் வசமாக அமர்ந்து கொண்டு உண்ணி களைக் கொத்தித் தின்னத் தொடங் கியது!

''அண்ணே, இந்தக் கொம்பு இருக் கிற இடத்தில் அதிர்ஷ்டம் பொங்கு மாமே? உண்மையா?''

காண்டாமிருகம் சிரித்தது.

''கொம்பு இருக்கிற இடத்தில் அதிர்ஷ்டம் பொங்கும்னால், எனக்கு ஏற்படும் ஆபத்துக்களெல்லாம் இந்தக் கொம்பாலதானே ஏற்படுது? அதனால், என்னைப் பொறுத்தவரை இந்தக் கொம்பால் அதிர்ஷ்டம் இல்லை. ஆபத்துத்தான்'' என்று சிரித்த காண்டாமிருகம், ''உனக்கு ஒரு உண்மை தெரியுமா? இதற்குப் பெயர்தான் கொம்பே தவிர, உண்மையில் இது கொம்பே அல்ல. இலட்சக்கணக்கான மயிர்க் கற்றை களால் இறுகிப் போன பகுதிதான் இது.'' என்றது.

''இந்தக் கொம்பால் உங்களுக்குப் புது ஆபத்து வரப் போகுது'' என்று தொடங்கிய குருவி, எல்லாவற்றை யும் விளக்கியது.

'கிச் கிச்' சென்று சத்தம் கேட்டது. ஆண் குருவிதான்!

''மயக்கமெல்லாம் தெளிஞ்சு போச்சு. கூட்டுக்குள்ளேயே சும்மா உட்கார்ந்திருக்கப் புடிக்கலே. அதோட, நீ வேற தனியா போயிருக் கியே. அதனாலதான் வந்துட்டேன்''

என்றது ஆண் குருவி.

''சரி, நீயும் கொஞ்சம் உண்ணி தின்னு'' என்று விலகிக் கொண்டது பெண் குருவி.

''நான் வந்தது நல்லதாப் போச்சு. அதோ அந்த மரத்திலேயிருந்து அந்தப் பாவி தர்மையா தன் மகனோடு இருந்து, தொலைநோக்கியால் இங்கேயே பார்த்துக்கிட்டிருக்கான்.''

''அப்படியா, இப்பவே அந்த மரத்தை முட்டிக் கீழே சாய்த்து, அவங்க ரெண்டு பேரையும் சகதியோட சகதியாத் தேய்த்து விடறேன்'' என்று ஆத்திரத்துடன் கிளம்பியது காண்டாமிருகம்.

''அண்ணே, ஆத்திரப்படாதீங்க. அவன் முழுப் பாதுகாப்போட வந்திருக்கான். நீங்க மரத்தை முட்டிக் கீழே சாய்ச்சால், ஏராளமா அதில் கூடு கட்டி வாழும் எங்க பறவை இனத்திற்குத்தான் ஆபத்து. கொஞ்சம் பொறுமையா இருங்க,'' என்று பணிவாகக் கேட்ட ஆண் குருவி, ''அவங்க என்ன திட்டம் போட்டிருக்காங்க என்கிறதை நான் கேட்டுக்கிட்டு வந்திருக்கேன்'' என்றது.

காண்டாமிருகம் ஆவலுடன் ஆண் குருவியைப் பார்த்தது.

''அண்ணே, நீங்க பின்னாலேயே நகர்ந்து வந்து ஒரே இடத்தில்தான் மலம் கழிப்பீங்களாமே...?'' — ஆண் குருவி கேட்டது.

காண்டாமிருகத்தின் குரல் தணிந்தது.

''உண்மைதான் குருவி. அது நல்ல பழக்கமோ இல்லே கெட்ட பழக்கமோ, எங்க இனத்தார் எல்லோரும் அப்படித்தான் செய்யறோம். மாமிசம் தின்னும் கொடிய புலி சிங்கங்கள் கூட சுத்த சைவமாகிய எங்களுக்கு முன்னால் நடமாட அஞ்சும். அவைகள், நாங்கள் மலம் கழிக்கும் இடத்தில் மறைந்திருந்து எங்களைப் பின்னாலிருந்து தாக்கும். சுத்தக் கோழைகள்'' என்றது காண்டாமிருகம்.

''நீங்க மலம் போற இடத்தில் மறைந்திருந்து, பீச்சாங் குழல்ல மயக்க மருந்தை வைத்து அடித்து, உங்களை மயங்க வைத்து, கொம்பை சீவிக்கிட்டுப் போறதா அவங்க திட்டம். இது முடியலேன்னால்...''

காண்டாமிருகம் ஆவலுடன் ஆண் குருவியை நோக்கியது.

''உங்களுக்கு மாலைக்கண்ணாமே! மாலையாகிவிட்டால் உங்கள் இனத்தாருக்குப் பார்வை மங்கி விடுமாமே...? அதைப் பயன்படுத்தி, உங்களை மயங்க வைத்து, கொம்பை எடுத்துக் கிடறதா அவங்களுக்குத் திட்டம்.''

''அண்ணே, உங்க இனத்தார்க்கு உண்மையாகவே மாலைக்கண்ணா!'' என்று வியப்புடன் கேட்டது பெண் குருவி.

''அந்த முட்டாளுங்க அப்படியே நினைச்சிக்கிட்டிருக்கட்டும். அதுவும் நன்மைக்குத்தான்,'' என்று சிரித்த காண்டாமிருகம், ''எங்களுக்கு மாலைக் கண்ணும் இல்லே, காலைக் கண்ணுமில்லே. ஆனால், எங்க இனத்தார்க்குக் கிட்டப்பார்வை. ஐம்பதடிக்கு அப்பால் என்ன இருக்குன்னு தெரியாது'' என்றது.

''நீங்க இருவரும் எனக்கு உதவினால், நான் இந்த ஆபத்திலிருந்து தப்பலாம்.''


இரு குருவிகளும் ஆவலோடு காண்டாமிருகத்தை நோக்கின.

''இரவு இங்கேயே மரத்தடியில்

''நீ எழுதின ஆங்கிலம் சரியில்லைன்னுதானே இருபது முறை எழுதச் சொன்னேன்? பதினெட்டுத் தடவை தானே எழுதியிருக்கே?''

''நான் கணக்கிலும் வீக் சார்!''

— சி. பன்னீர்செல்வன்.



தெரியுமா?

1. குத்துச்சண்டை எந்த நாட்டில் தோன்றியதாய்க் கருதப்படுகிறது?
2. விதிகளின்படி இடுப்புக்குக் கீழே குத்துவது தவறு — இது சரியா?
3. பந்தயத்தின் போது, நடுவர் 'பிரேக்' என்றால், சண்டையிடுபவர்கள் என்ன செய்ய வேண்டும்?
4. 'பாக்ஸரின் பர்ஸ்' என்றால் என்ன?
5. குத்துச்சண்டை ரிங், தரையிலிருந்து எவ்வளவு உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்?
6. குத்துச்சண்டையில், கீழே விழுந்தவர் எத்தனை விநாடிகளுக்குள் மறுபடி எழுந்திருக்கா விட்டால் தோற்றதாய்க் கருதப்படுவார்?
7. மிக இளம் வயதில் ஹெவி வெயிட் சாம்பியன் ஆன குத்துச்சண்டை வீரர் யார்?
8. சமீபத்திய எம். ஆர். எஃப் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்ற நாடுகள் எத்தனை?
9. இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த தங்கா எந்த மாநிலத்துக்காரர்?

தொகுப்பு: மௌஷ்மி.

விடைகள்:

1. கிரீஸ்.
2. சரி.
3. சண்டையை நிறுத்திவிட்டு, விலகி— ஓரடி பின்னால் போக வேண்டும்.
4. குத்துச் சண்டைக்காரர் தரவேண்டிய அனுமதிக் கட்டணம்.
5. மூன்று முதல் நாலு அடி வரை.
6. பத்து வினாடிகள்.
7. மைக்டைசன். (இருபது வயதில்).
8. முப்பத்தி நாலு.
9. மிசோரம்.

தங்க வேண்டும். அந்த தர்மையாவின் நடமாட்டத்தைக் கவனிச்சு எனக்குத் தகவல் தந்தால், நான் அவங்களைத் தீர்த்துக் கட்டி விடுவேன்.''

குருவிகள் இரண்டும் இணங்கின. மாலை மறைந்து இருட்டத் தொடங்கியது. குருவிகள் இரண்டும் மரத்தில் இருந்து கண்காணித்தன.


மயக்க மருந்துப் பீச்சாங்குழலுடன் தர்மையா தனது மகனுடன் காண்டாமிருகத்தை நெருங்கினார். ''இதற்கு இரவில் கண் தெரியாது. நாம் தைரியமாக முன்னால் போகலாம்'' என்று மகனுடன் நெருங்கினார் தர்மையா.

''தர்மையாவும் அவரது மகனும் ஐம்பது அடிக்குள் வந்து விட்டார்கள்'' என்று அறிவித்தன குருவிகள்.

காண்டாமிருகம் ஒருமுறை வாயைத் திறந்து கொட்டாவி விட்டது. தன் பருத்த உடலைத் தூக்கிக் கொண்டு ஆத்திரத்தோடு அது பொங்கிப் பாய்ந்தது. தர்மையாவும் அவரது மகனும் என்ன ஆவார்களோ?

அறிவியல் உண்மைகள்:

- காண்டாமிருகத்தின் கொம்பு, உண்மையில் எலும்பால் ஆன கொம்பு அல்ல. இலட்சக்கணக்கான மயிர்க் கற்றைகளின் இறுகிய பகுதியே. இதை வெட்டி விட்டால் மறுபடி வளர்ந்து விடும். இதற்கு எவ்வித மருத்துவக் குணமும் இல்லை என்பது மருத்துவ முடிவு.
- தவிட்டுக் குருவிகள், காண்டாமிருகத்தின் உடலில் உள்ள உண்ணிகளை நம்பியே வாழ்கின்றன. இரண்டுக்கும் நெருக்கம் உண்டு.
- பின்பக்கமாகவே நகர்ந்து வந்து ஒரே இடத்தில்தான் காண்டாமிருகம் மலம் கழிக்கும். முன்னால் வந்து தாக்க அஞ்சும் எதிரிகள், இந்த நேரங்களில் மறைந்திருந்து இதைத் தாக்கும்.
- காண்டா மிருகத்திற்கு மாலைக் கண் நோய் கிடையாது. ஆனால் கிட்டப் பார்வையுடையது.



ஏன்? ஏன்? ஏன்?

முட்டை சத்து நிறைந்த உணவு என்பது நமக்குத் தெரியும். கடைக்குப் போய் முட்டை வாங்கும் போது அது நல்லதா, அழுகியதா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? அனுபவசாலிகள், கையிலெடுத்ததுமே கண்டு பிடித்து விடுவார்கள்.

கிராம மக்கள் நீர் நிறைந்த ஒரு பாத்திரம் அல்லது கண்ணாடி தம்ளரில் முட்டையைப் போடுவார்கள். முட்டை நீரில் மூழ்கி, அமிழ்ந்தால் நல்ல முட்டை; மிதந்தால் அழுகிப் போனது.

நல்ல முட்டை ஏன் மூழ்கிப் போகிறது? அழுகிய முட்டை மட்டும் ஏன் மிதக்கிறது?

முட்டையின் உள்ளே கனமான மஞ்சள் கருவும், (யோல்க்) அதைச் சுற்றி வெள்ளைக் கருவும் அழுத்தம் கொடுத்து, முட்டையை நீரை விடக் கனமுடையதாக்கி விடுகின்றன. அதனால், நல்ல முட்டை மூழ்கிவிடுகிறது.


அழுகிப் போன முட்டைக்குள் மஞ்சள் கரு கலைந்து வெள்ளைக் கருவோடு குழம்பி விடுகிறது. இதன் காரணமாக முட்டைக்குள் இருந்த அழுத்தம் குறைந்து போகிறது. கூடவே, புதிய வாயுவும் அதில் உற்பத்தியாகிறது! இதன் விளைவாக அழுகிய முட்டை, நீரை விட இலேசாகி, மேலே மிதக்கிறது.

சேரநம்பி



நா. இராஜேஷ்கண்ணன், அரசன்விளை.

என் முகத்தில் நிறையப் பருக்கள் உள்ளன. அவை பார்க்க அருவருப்பாக உள்ளன. இதைக் குணப்படுத்த என்ன செய்ய வேண்டும்?




ஆணும் பெண்ணும் பருவ வயதை எட்டும்போது முகப்பரு (**Pimple**) தோன்றுகிறது. இது காலப்போக்கில் – திருமண வயதில் தானாகவே மறைந்து விடுகிறது. பரம்பரை, அதிகக் கொழுப்புப் பொருள் உண்பது என்று இதற்குப் பல காரணங்கள் இருப்பதாக நம்பப்படுகிறது! எனினும் இன்ன காரணம் என்று இதுவரை யாரும் உறுதியாகச் சொல்லவில்லை. இதனால் தான் முகப்பருவை முற்றிலுமாகக் குணப்படுத்துவதிலும், வராமல் தவிர்ப்பதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

இருந்தாலும் 'முகச் சுத்தம் முகப்பருவைப் போக்கும்!' என்பது மருத்துவ மொழி! அடிக்கடி முகத்தை வெதுவெதுப்பான நீரில் கழுவி, பிறகு குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். வீட்டில் இருக்கும் போது முகத்தில் பவுடர் பூசுவதையும், அழகு சாதனங்களைப் பயன்படுத்தி 'மேக்கப்' செய்வதையும் தவிர்த்து, இயற்கைக் காற்று முகத்தில் படும்படி செய்ய வேண்டும். பச்சைக் காய்கறிகளையும், கீரையையும் தினமும் சாப்பிட வேண்டும். குறைந்தது பத்து தம்ளர் தண்ணீராவது தினமும் குடிக்க வேண்டும். மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கொழுப்பு நிறைந்த உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

பருக்களைக் கிள்ளக் கூடாது. பருக்களில் 'சீழ்' வைத்தால் மருத்துவர்களிடம் காண்பித்து தகுந்த 'ஆண்டிபயாடிக்' மருந்துகளை உட்கொள்ள வேண்டும். கடைகளில் நீங்களாகவே சென்று களிம்பு வாங்கி முகப்பருவில் தடவாதீர்கள். பருக்களுக்கென தயாரிக்கப்பட்டதாக விளம்பரம் செய்யப்படும் களிம்புகள் உண்மையில் பருக்களைக் குணப்படுத்துவதில்லை! களிம்பு விஷயத்தில் மருத்துவர் ஆலோசனையே உங்களுக்கு உதவும்! போதுமா, இராஜேஷ்?

நமக்கு விக்கல் வருவது எதனால்?

— ப. முத்துச்செல்வன், புளியங்குடி.





விக்கலைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகவே சொல்ல வேண்டும். அப்போதுதான் விஷயம் புரியும்! அதாவது நாம் சாதாரணமாக சுவாசிக்கும் போது காற்றை உள் இழுக்கிறோமல்லவா? அப்போது மார்புத் தசைகள் விரிகின்றன. மார்புக்கும் வயிற்றுக்குமிடையே — சுவாசப் பையின் அடிப் பாகத்திலிருக்கும் உதரவிதானமும் (DIAPHRAGM) விரிகிறது. உடனே குரல் நாண்கள் (VOCAL CORDS) திறக்கிறது. மார்புக்குள் காற்றின் அழுத்தம் குறைகிறது. அதே சமயம் மார்புக்குள் காற்று உட்செல்ல அதிக இடைவெளி கிடைக்கிறது. இதனால் நாம் சுவாசிக்கும் காற்று தங்கு தடையின்றி, திறந்த குரல் நாண்கள் வழியாக சுவாசப் பைக்குள் எளிதாக நுழைந்து விடுகிறது. இது சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி. சில சமயங்களில் உதரவிதானம் சுருங்கி விடுகிறது. குரல் நாண்கள் சரிவரத் திறக்க மறுக்கிறது. இம் மாதிரி சமயங்களில் நாம் சுவாசிக்கும் காற்று குறுகிய இடைவெளி வழியாக சுவாசப் பைக்குள் நுழைய வேண்டியதாகிறது. அப்போது அக் காற்று 'விக்...' என்ற விநோத ஒலியை எழுப்புகிறது. இதுதான் 'விக்கல்'! (HICCUP) சரி,

விக்கல் எப்போதெல்லாம் வரும்? தெரியுமா, முத்துச்செல்வன்? நாம் அவசர அவசரமாக உணவு உட்கொள்ளும் போது விக்கல் வரும்; அளவுக்கு அதிகமாக உட்கொண்டாலும் விக்கல் வரும்; சூடான உணவுகளை உட்கொண்டதும் நிறையத் தண்ணீர் சாப்பிடா விட்டாலும் விக்கல் வரும்; சாதாரண விக்கலினால் நமக்கு அதிக தொந்தரவு வராது. அதே சமயம் சிறுநீரகக் கோளாறுகள், கல்லீரல் நோய்கள், மூளைக் காய்ச்சல், முற்றிய நீரிழிவு நோய், குடல் அடைப்பு போன்ற நோய்களில் வரும் விக்கலினால் ஆபத்து வரும்! எனவே, அடிக்கடி விக்கல் வந்தால் மருத்துவரைப் பார்க்க வேண்டியது அவசியம்!

இரத்தக் கொதிப்பு என்றால் என்ன, டாக்டர்?

— எம். கே. சக்திவேல், சேலம்.

நம் இதயம், இரத்தக் குழாய்களுக்கு இரத்தத்தை பம்ப் செய்து அனுப்பும்போது, ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தத்தைக் கொடுப்பதால்தான், இரத்த ஓட்டம் சீராக நடக்கிறது. அந்த அழுத்தம்தான் பிளட் பிரஷர் (BLOOD PRESSURE) என்கிற இரத்த அழுத்தம். இதில் இரு வகை உண்டு. இதயம், இரத்தக் குழாயினுள் இரத்தத்தைச் செலுத்தக் கொடுக்கிற அழுத்தம் 'சிஸ்டாலிக் பிரஷர்' என்றும், பம்ப் செய்யப்படும் இரத்தத்தை, இரத்தக் குழாயினுள்ளேயே தங்க வைக்கக் கொடுக்கப்படும் அழுத்தத்தை 'டயஸ்டாலிக் பிரஷர்' என்றும் அழைக்கிறோம். ஒரு சராசரி மனிதனுக்கு 120 (சிஸ்டாலிக்)/80 (டயஸ்டாலிக்) மி.மீ. பாதரச அளவு என்பது சரியான இரத்த அழுத்த அளவாகும். சில சமயங்களில், சில காரணங்களினால் இந்த இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. அதாவது 140/90 மி.மீ. பாதரச அளவுக்கு மேல் இரத்த அழுத்தம் அதிகமானால் அந் நிலைகளை 'இரத்தக் கொதிப்பு', 'உயர் இரத்த அழுத்தம்', 'இரத்த மிகு அழுத்தம்' எனப் பல பெயர்களில் அழைக்கிறோம். பொதுவாக இரத்தக் கொதிப்பு 40 வயதிற்கு மேற்பட்டோருக்கே வருகிறது. அதிலும் இரத்தக் கொதிப்பு உள்ளவர்களில் 80 சதவீதத்தினருக்குக் காரணமே கண்டுபிடிக்க முடிவதில்லை. மீதி 20 சதவீதத்தினருக்கு சிறுநீரகக் கோளாறுகள், நாளமில்லாச் சுரப்பி நோய்கள், அட்ரீனல் சுரப்பி நோய்கள், பிட்யூட்டரி சுரப்பி நோய்கள், மூளைத்தண்டு நோய்கள், உள் கபால அழுத்த அதிகரிப்பு, பெருந்தமனி குறுகலடைந்து போன்ற மற்றும் சில காரணங்களில் ஏதேனும் ஒன்று இரத்தக் கொதிப்பை உண்டாக்குகிறது. இரத்தக் கொதிப்பைக் கவனிக்காமல் விட்டு விடுவது ஆபத்தானது. அதனால் பக்கவாதம், மாரடைப்பு, சிறுநீரகப் பாதிப்பு, கண் பார்வைக் குறைவு, மூளையில் இரத்தக் கசிவு போன்ற ஆபத்தான விளைவுகள் நிகழலாம். எனவே, ஒருவருக்கு இரத்தக் கொதிப்பு இருப்பதாக மருத்துவர் சொல்வாரேயானால், அவர் ஆயுள் முழுக்க மாத்திரை மருந்து சாப்பிட்டு வர வேண்டியது அவசியம்!

கவிதைகள் மணியானவை

சார் தபால்!

* அடக்கமும், எளிமையும், புன்னகை நிறைந்த முகமும் தான் ஒருவனுக்கு அழகைத் தரும் என்ற கருத்தைச் சொன்ன மயிலை சிவமுத்துத் தாத்தா புகழ் வாழ்க!

கருமத்தம்பட்டி. ஆர். அருண்பிரகாஷ்.

* ''என்ன செய்யலாம்'' போட்டியில் அ. முஸ்தபா எழுதியிருந்தது அழகான கருத்து. அவரைப் போலவே எல்லோரும் இருந்தால் சண்டையோ சச்சரவோ வராது!

மதுரை — 11. இரா. செல்வம்.

* அணுவை பற்றிய விளக்கங்களைத் தந்த சேரநம்பிக்கு பாராட்டுக்கள். நட்சத்திரங்கள் மின்னுவதை அறிவுபூர்வமாய் விளக்கியதற்கு நன்றி.

மாடம்பிள்ளைதர்மம். ஐ. எஸ். வாசு.

* ஒவ்வொரு தாய்க்கும், மாதவனைப் போல் மகன் இருந்தால், இரக்கத்துக்கு இலக்கணமே தேவையில்லை.

கும்பகோணம். எஸ். கே. மூர்த்தி.

* பழூரன் திருவிழாவில், குடும்பத்துடன் கலந்து கொண்டது போன்ற பிரமையே உருவாகியது. அத்தனை அருமை, சார்.

விருதாங்கநல்லூர். ஜி. பன்னீர்செல்வம்.

* ''வழி தெரியாதா பாட்டி'' சிறுகதை படித்தேன். உண்மை, உழைப்பு இவ்விரண்டுக்கும் உள்ள உறவு பற்றி அழகாகச் சொல்லி சிறுவன் கதிர்வேலு தன் தவறை உணரும்படி செய்த பாட்டி என் சிந்தனையோடு ஒன்றி விட்டார்கள்.

குழந்தைகள் 1991ஐ அமைதியாய் வரவேற்றுத்தாங்கி வந்த அட்டை அருமை.

தக்கோலம். பி. அ. முஸ்தபாகமால்

* நடுத்தர மற்றும் ஏழைக் குடும்பத் தங்கைகளின் மனத்தில் இருக்கும் ஏக்கத்தை கோமதியின் மூலம் அழகாகப் புலப்படுத்தியுள்ளார் புனைவை கலைச் செழியன். ஆடம்பரப் பொருள்களைக் கண்டு பெருமூச்சு விட்டு ஏங்கும் தங்கைகளுக்கு கண்ணபிரான் கூறும் கருத்தின் மூலம் மனம் தெளிவடைந்திருக்கும். கதை கோகுலத்திற்குப் பெருமை சேர்க்கிறது.

இல்லையாடி. பாலா.

* ''கரடி கோயில்'' துப்பறியும் கதை போல வேகத்தோடும், விறுவிறுப்போடும் அமைந்தது சிறப்புக்குரியது.

பொகலூர். ஆர். அனிதா.

* ''பர்வதனின் சாபம்'' படக் கதையில் நாரதர் பெண்ணாசையால் குரங்கின் தோற்றம் அடைதலைப் படித்ததும் குழந்தைகளோடு குழந்தையாய்ச் சிரி, சிரியெனச் சிரித்தேன். பாராட்டுகிறேன்.

கருமத்தம்பட்டி. அ. இராஜப்பன்.

* கவிதைகள் ஒவ்வொன்றும் மணியானவை. ராகம் போட்டு பாடுவதற்கு ஏற்றவை. சுவையாக உள்ளன.

பெரியகுப்பம். திருவள்ளூர்
மதன்மோகன்.

* 'ஞாபக மறதி' பற்றி டாக்டர் கணேசன் விளக்கியது மாணவர்களுக்குப் பயனுள்ள செய்தி.

செஞ்சி. தா. ஷேக் ஹுசேன்.

* ''குழந்தைகளா கெட்ட சகுனம்'' கதை மிக அருமை.

பூவாங்குறிச்சி. க. மணி.

* ஆத்திரத்தையும், அவசரத்தையும் நம்பி, அறிவை இழந்து, அல்லல்படுவோர்க்கு, அடிகாக வந்த நாய், சிறுகதை ஒரு அற்புதப் படைப்பினை!!

கும்பகோணம். எஸ். கே. மூர்த்தி.

* மூன்றாவது மூன்று ரூபாய்க்கு சந்தான பல அரிய செய்திகளை வாரி வழங்கும் வள்ளல் கோகுலமே, நீ என்றும் வாழிய!, வாழியவே! என வாழ்த்துகிறேன்.

பூந்தோட்டம். து. பாண்டியன்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—



அவன் ஏன்
மேலே இருக்கிறான்?
எல்லாம் பாரிஸ் மிட்டாய்க்காக!
THE KING OF SWEETS
பாரிஸ் மிட்டாய்கள் மீதுள்ள ஆசையை எவராலும் அடக்க முடியுமா?
HTA 7713 A

REGISTERED NO. TN MS (5) 281

Registered as a Newspaper in Srilanka

பாரீஸ் மிட்டாய்கள் என்னென்ன?

இந்த படத்திலே 11 பாரிஸ் மிட்டாய்கள் இருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!



அந்த மிட்டாய்கள்: காபி பைட், காராமில்க், ட்ரை-மீ, லாக்டோ கிங், எலாய்ச்சு, மூன் ட்ராப், டாங்கோ, சாக்கலேட் எக்ளேர்ஸ், கோகோ நட் க்ரீம், சாக்கோ டாஃப் மற்றும் பிக்னிஸ்.

செய்து பாருங்கள்





Fig.1

ஒரு கப் மைதா, 1/4 கப் உப்பு, 1/3 கப் தண்ணீர் இவற்றை நன்கு கலந்து பிசைந்து கொள்ளவும். (படம் 1) விரல்களால் இந்த மாவை சிறு சிறு உருண்டைகளாகச் செய்யவும். (படம் 2) மாவு சரியாக இருக்க தண்ணீரையோ, மாவையோ சேர்க்கவும். இப்போது உங்கள் கற்பனைப் படி, பூனை, நாய் என பல உருவங்களையும் செய்யலாம். ப்ளாஸ்டிக் பையில் வைத்து ஃப்ரிஜ்ஜில் வைக்கவும். மீண்டும் தேவைப் படும்போது, எடுத்து, குளிர் விட்ட பிறகு உபயோகிக்கலாம்.



Fig.2



Fig.3

தெப்பம் செய்வோமா?



Fig.1

இதைச் செய்யத் தேவை: கலர் தீட்டிய கார்ட் போர்ட், கத்தரிக் கோல், அக்ரோட்டு ஓடுகள், கூல் ட்ரிங்க் ஸ்ட்ரா அல்லது குச்சிகள், வெள்ளை பேப்பர், பசை அல்லது ஃபெவிகால் மற்றும் மேலே சொன்னது போல் மாவு.



Fig.2

செய்யும் முறை: 1. செவ்வக வடிவ கார்ட்போர்டில் நான்கு அக்ரோட்டு ஓடுகளை ஒட்டுங்கள். (படம் 1). 2.வெள்ளை பேப்பரில் ஒரு பாய்மரம் வெட்டிக் கொள்ளவும். 3. கூல்ட்ரிங்க் ஸ்ட்ரா அல்லது குச்சியை பாய்மர காகிதத்தில் நுழைக்கவும். (படம் 2). 4. இந்த ஸ்ட்ரா அல்லது குச்சியை, கொஞ்சம் பிசைந்த மாவால் தெப்பத்துடன் இணைக்கவும். (படம் 3). இதோ, குளியல் தொட்டியிலோ, ஓடையிலோ இந்த தெப்பம் மிதக்கும்!



Fig.3

HTA 7713 C